
கோகுலம்

GOKULAM

ஜூன் '88 விலை ரூ. 3.





'வாளை விட வலிமையுடையது பேனா' என்பது பழமொழி. இப்பழமொழியைப் பல எழுத்தாளர்கள், தங்கள் எழுத்து மூலம் நிரூபித்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் சிந்தனையாளர் ரூசோ.

ஏழைகள், படுகின்ற துன்பங்களையெல்லாம் எடுத்துக் கூறி, உயர்வு தாழ்வு இன்றி எல்லாரும் 'சமமாக வாழ வேண்டும்' என்பதை வலியுறுத்தி வந்த இவரது எழுத்துக்கள், மக்கள் மனத்திலே ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தின. 1789 — இல் தோன்றிய பிரெஞ்சுப் புரட்சிக்கு இவரது எழுத்துக்களே அடிப்படையாக அமைந்தன; ஆயினும், பிரெஞ்சுப் புரட்சி தோன்றிய போது இவர் உயிருடன் இல்லை. இவர் மறைந்து 11 ஆண்டுகளாகி விட்டன!



உயிர்களிடத்தில் அன்பு வேணும்
— தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
— பாரதியார்.

கோகுலம்

1988 ஜூன் மாத இதழ்
மலர் 6 : இதழ் : 5
தனிப் பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா



புகைப்படம்: எம். நடராஜன்.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

இந்த இதழிலிருந்து கோகுலத்தை, சீர்திருத்த எழுத்துக்களில் அச்சிடுவதென முடிவு செய்துள்ளோம்.

இந்த இதழில் சில பக்கங்கள் பழைய எழுத்துக்களிலும், பெரும்பாலான பக்கங்கள் சீர்திருத்த எழுத்துக்களிலும் அச்சிடப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். ஒரு சில பக்கங்கள் பழைய எழுத்துக்களில் இருப்பதற்குக் காரணம், அவை சென்ற இதழில் மிஞ்சியிருந்தவை.

"சீர்திருத்த எழுத்துக்களைப் பயன்படுத்த தமிழக அரசு முடிவெடுத்து எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன? நீங்கள் இப்போதுதானே இந்த முடிவுக்கு வந்திருக்கிறீர்கள்? என்ன காரணம்?" என்று நீங்கள் கேட்காமல் இருப்பீர்களா?

அப்போதிருந்த கல்வி அமைச்சர், "நாங்கள் எழுத்துச் சீர்திருத்தத்தில், பெரும்பகுதியை முடித்துவிட்டோம். கூடிய விரைவில் மிச்சத்தையும் முடித்துவிடுவோம்" என்றார். ஆனாலும், பல காரணங்களால், அவர் சொன்னபடி அதன் பிறகு எவ்வித மாற்றமும் செய்யவில்லை.

இதற்கிடையில் சிலர், தலைவர் என்பதை 'தலய்வர்' என்றும், ஆசிரியர் என்பதை 'ஆசிரியர்' என்றும் வெவ்வேறு வகையாக எழுதத் தொடங்கினர். அரசே இவ்விஷயத்தில் ஒரு முடிவெடுத்தால் நன்றாயிருக்குமே என்று காத்திருந்தோம். இனி, எந்த மாற்றமும் இராது என்ற நம்பிக்கையில், நாங்களும் சீர்திருத்த எழுத்தைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டோம்.

சென்ற இதழில் 16 பக்கப் படக்கதை வண்ணப் படங்களுடன் வரவில்லையே என்று பலர் வருத்தப்பட்டு எழுதியிருக்கிறார்கள். படக்கதை வண்ணத்தில் வராத போனாலும், மற்ற படங்களில் பல, வண்ணத்தில் அச்சானது ஆறுதல் அளிப்பதாகச் சிலர் எழுதியிருக்கிறார்கள்.

இயந்திரக் கோளாறு காரணமாக, வண்ணத்தில் படக்கதை அச்சாகவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இனி, படக்கதை தொடர்ந்து வண்ணத்திலே வரும் என்றும் உறுதி கூறுகிறோம்.


அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்




பக


பிருந்தாவனக் கவிஞர்கள்



அ. இளவரசன்



ஜி. சங்கர்



மைக்கேல் ஜோசப்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



ஆர். ராதாகிருஷ்ணன்



த. உமா மகேஸ்வரி




ஆர். சுதீந்திரன்

என் குழந்தைப் பருவம்

இந்த இதழில் இப்பகுதி அச்சாகும் வரை, கவிஞர் சுரதா அவர்களிடமிருந்து கட்டுரை வராததால், சென்ற இதழில் அறிவித்தபடி அவரது கட்டுரையை வெளியிட இயலவில்லை.

— ஆசிரியர்.




.M. அமர்நாத் (20,444)




R. மணி (4302)

(131)
என். செந்திலகுமார்



உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்



பி. கோவிந்தசாமி (5703)



ம. தீபா (20,242)

(20,672)
அரு. சுப்பிரமணியன்



மின்மினிக் கதைகள்



ஒற்றைத் திருடன்

கிராமத்திலிருந்த ஒரு பணக்காரர், வாரம் ஒரு முறை சிறிது தூரத்திலுள்ள பட்டணத்திற்குச் செல்வார். காலையில் சென்று, தம் குடும்பத்திற்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு மாலையில் ஊர் திரும்புவார்.

கிராமத்திற்கும், பட்டணத்திற்கும் நடுவே ஒரு காடு இருந்தது. அங்கே கள்ளர் பயம் அதிகம். அதனால், பணக்காரர், தம் கூடவே துப்பாக்கியையும் எடுத்துச் செல்வார். இடுப்பிலே அதை மறைத்து வைத்துக் கொள்வார்.

அவர் காட்டுப் பாதையில் போகும்போது,

'ஒற்றைத் திருடனுக்குப் பயப்பட மாட்டேன்; ஓங்கி அடிப்பேன்: நடுங்கிட மாட்டேன்' என்று பாடிக் கொண்டே போவார்.

ஒரு சமயம், அவர் பட்டணத்திலிருந்து சாமான்களை வாங்கிக் கொண்டு திரும்பும்போது, ஒரு புதரிலிருந்து 'குப்'பென்று பாய்ந்து வந்தான் ஒரு திருடன்! அவன் கையில் கூர்மையான கத்தி இருந்தது. கத்தியைப் பணக்காரரின் நெஞ்சுக்கு நேராகப் பிடித்தபடி, 'ஒற்றைத் திருடனுக்குப் பயப்பட மாட்டீரா? இப்போது, இந்த ஒற்றைத் திருடனிடம் உம்மிடமுள்ள பணத்தையும், பையிலுள்ள சாமான்களையும், மரியாதையாகக் கொடுத்துவிடும். இல்லாத போனால், சதக்! குத்திவிடுவேன்'' என்று மிரட்டினான்.


பணக்காரர், துப்பாக்கியை எடுக்க நினைத்தார். ஆனால், திருடன் பார்த்துக் கொண்டே இருக்கிறானே! சதக்கென்று குத்தி விட்டால்...?

தந்திரத்தால் அவனை மடக்க நினைத்தார்.

"நான் ஒற்றைத் திருடனுக்குப் பயப்பட மாட்டேன். உண்மைதான். ஆனால், இப்போது நீங்கள் மூன்று திருடர்களாக வந்திருக்கிறீர்களே! உன் பின்னால், அதோ பார். இரண்டு பேர்" என்றார்.

திருடன் திரும்பிப் பார்த்தான். உடனே பணக்காரர் இடுப்பிலிருந்த துப்பாக்கியை 'லபக்'கென்று எடுத்து அவன் காலைப் பார்த்துச் சுட்டார். குறி தவறவில்லை. குண்டு பாய்ந்ததும், "ஐயோ அப்பா!" என்று அலறி வீழ்ந்தான் திருடன்.

பணக்காரர் தப்பிப் பிழைத்துப் பத்திரமாக ஊர் வந்து சேர்ந்தார்.



வீரசேனனின் மதிநுட்பம்

வீரசேனனின் நாடு சிறியதுதான். ஆனாலும், அவனுடைய வீரம் பெரியது. அவனது படை வீரர்களும் அஞ்சா நெஞ்சர்கள்.

ஒருநாள் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி, பக்கத்து நாட்டு அரசன் பலதேவன் வீரசேனனின் நாட்டின் மீது படையெடுத்துத் திடீர்த் தாக்குதல் நடத்தினான். வீரசேனன் உடனே சரணடைந்து விடுவான் என்று பலதேவன் எதிர்பார்த்தான். ஆனால், வீரசேனன் தன் படை வீரர்களுடன் பலதேவனின் படைகளை எதிர்த்துப் போரிட்டான். பத்து நாட்கள் வரை சண்டை மும்முரமாக நடந்தது. அதற்கு மேலும், பலதேவனின் பெரும் படையுடன் போரிட முடியவில்லை. பலதேவன் வீரசேனனைக் கைது செய்து, அவனது நாட்டைத் தனக்கு அடிமையாக்கிவிட்டு வீரமுழக்கத்துடன் தன் தலைநகரை அடைந்தான்.

பலதேவனின் சபை முன்பு வீரசேனன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.

"நீயோ ஒரு சிற்றரசன். நான் படை எடுத்ததுமே நீ சரணடைந்திருக்க வேண்டும். சரணடையாமல் சண்டையிட்டதால், என் வீரர்களில் பலர் இறந்தனர்; பலர் காயமுற்றனர். அதற்கெல்லாம் நீதான் பொறுப்பு. ஆகையால், உனக்கு என்ன தண்டனை தெரியுமா? மரண தண்டனை...! ஆனால், நீ சாவதற்கு முன்பு, உனக்கு விருப்பமானதைக் கேள்: தருகிறேன்" என்றான் பலதேவன்.


"வேறு எதுவும் வேண்டாம். குடிக்கத் தண்ணீர் வேண்டும். நான் அந்தத் தண்ணீரைக் குடிக்கும்வரை, என்னை எதுவும் செய்யாமல் இருக்க வேண்டும். செய்யாமல் இருப்பீரா? அதற்கு நீர் உறுதி கூற வேண்டும்" என்றான் வீரசேனன்.

''சரி; நீ உன் கையிலுள்ள நீரைக் குடிக்கும் வரை நானோ, என் வீரர்களோ உன்னை எதுவும் செய்ய மாட்டோம். இது உறுதி'' என்றான் பலதேவன்.

உடனே, சட்டென்று, குவளையிலிருந்த நீரைத் தரையில் ஊற்றி விட்டான் வீரசேனன்.

''இந்தத் தண்ணீரைக் குடிக்கும் வரை என்னை எதுவும் செய்ய மாட்டேன் என்று உறுதி அளித்தீர். இப்போது நானோ இந்தத் தண்ணீரைக் குடிக்கவில்லை. தரைதான் குடித்துவிட்டது. கொடுத்த வாக்கைக் காப்பாற்றி, என்னை விடுதலை செய்ய வேண்டும்'' என்றான் வீரசேனன்.

''வீரசேனா, நீ சிறந்த வீரன் என்றுதான் இதுவரை நினைத்திருந்தேன். நீ மிகவும் புத்திசாலி என்பதையும் இப்போது உணர்ந்தேன், உன்னை இதோ இப்போதே விடுதலை செய்கிறேன். உன் நாட்டையும் உனக்கே திருப்பித் தருகிறேன்'' என்றான் பலதேவன்.



மரக்கத்தி

ஓர் அரசனிடம் ஒரு விதூஷகன் இருந்தான். அவனுக்குச் சிப்பாயாக வேண்டுமென்று ஆசை பிறந்தது. அரசனிடம் தன் ஆசையைத் தெரிவித்தான்.

''சரி, நாளை முதல் நீ சிப்பாய் உடை அணிந்து கொள். முதல் மூன்று நாட்கள் கோட்டை வாசலைக் காவல் காக்க வேண்டும். பிறகு அரண்மனையில் வேலை தருகிறேன்'' என்றான் அரசன்.

அதன்படி, முதல் மூன்று நாட்கள் சிப்பாய் உடையுடனும், உறையுடன் கூடிய வாள் ஒன்றுடனும் விதூஷகன் காவல் காத்தான். அவன் சரியாகக் காவல் காக்கிறானா என்று பார்ப்பதற்காக மூன்றாம் நாள் இரவு அரசன் மாறு வேஷத்தில் அங்கு வந்தான். அப்போது, உறைவாளை அருகில் வைத்துவிட்டு நன்கு குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான் விதூஷகன். அரசன் உடனே உறைக்குள் இருந்த வாளை உருவிக் கொண்டு வெறும் உறையை மட்டும் அவன் அருகில் வைத்துவிட்டு வந்துவிட்டான்.

விடிந்ததும், உறை மட்டும் இருப்பது கண்டு திடுக்கிட்டான், விதூஷகன். மரத்தினால் ஒரு வாள் செய்து உறைக்குள் போட்டுக் கொண்டான். வாளை வெளியில் எடுத்தால்தான், அது மர வாள் என்பது தெரியும்.

அரசன், மறுநாள் விதூஷகனைத் தன் சபையில் காவல் காக்கும்படி உத்தரவிட்டான். அப்போது, திடீரென்று அங்கிருந்த ஒரு புலவர் மீது கோபம் வருவது போல நடித்து, ''இப்புலவர் செய்தது மாபெரும் தவறு. இவரது தலையை உடனே சீவ வேண்டும். ஏ விதூஷக வீரனே, உன் உறைவாளை

எடுத்து இவர் தலையை வெட்டுவாயாக'' என உத்தரவிட்டான் அரசன்.

விதூஷகன் என்ன சாதாரண ஆளா? மகா புத்திசாலி அல்லவா? உடனே அவன், ''ஏ, ஆண்டவனே, இந்தப் புலவர் எந்தக் குற்றமும் செய்த தாக எனக்குத் தெரியவில்லை. நிரபராதியான ஒருவரைக் கொல்ல நான் தானா அகப்பட்டேன்? ஆண்டவா, நீ இருப்பது உண்மையானால், என் உறையிலிருக்கும் கத்தி மரக் கத்தியாக மாற அருள் புரிவாய்'' என்று மண்டி யிட்டுப் பிரார்த்தனை செய்தான். பிறகு, உறையிலிருந்த வாளை உருவினான். அது மர வாளாக இருப்பது கண்டு அனைவரும் வியந்தனர். அரசனுக்கு மட்டுமே உண்மை தெரியுமாதலால் அவன் விதூஷகனின் புத்தி சாதுரியத்தை மனத்திற்குள்ளே பாராட்டினான்.

ஜேம்ஸ் சிம்ஸன்



இக்காலத்தில் மயக்க மருந்து கொடுத்து டாக்டர்கள் அறுவைச் சிகிச்சை செய்வதை நாம் அறிவோம். ஆனால், 140 ஆண்டுகளுக்கு முன்பு மயக்க மருந்து கண்டுபிடிக்கப்பட வில்லை. அறுவைச் சிகிச்சை என் றாலே, மிகவும் பயங்கரமாக இருக் கும்.

காதிலே ஒரு கட்டி அல்லது காலிலே ஒரு கொப்புளம் என்றால், கத்தியால் அதை அறுத்து எடுப்பார் கள். நோயாளி வலி தாங்காமல் கதறு வார். ஒருவரது காலை அல்லது கையை வெட்டி எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், அவரது கைக ளையும், கால்களையும் நன்றாகக் கட்டிவிடுவார்கள். கத்தி, அரிவாள், குறடு போன்ற ஆயுதங்களை நோயாளி பார்த்துப் பயந்து விடாமல் இருக்க, அவற்றைக் கொண்டு வருவதற்கு முன்பே அவரது கண்களை இறுகக் கட்டி விடுவார்கள்.

இந்தப் பயங்கர நிலைமையை அடி யோடு மாற்றியவர் ஜேம்ஸ் சிம்ஸன் என்ற ஸ்காட்லாந்துக்காரராவார். குளோரோபாரம் (Chloroform) என்ற மது வகைத்திரவத்தை முதல் முதலாக, மயக்கம் உண்டாக்கப் பயன்படுத்தி அறுவைச் சிகிச்சை செய்த இவர், ஒரு ரொட்டிக் கடைக்காரரின் ஏழா வது பிள்ளையாகப் பிறந்தார். சின்னஞ்சிறு வயதிலே கசாப்புக்கடை களில் ஆடு மாடுகளை வெட்டுவதை யும் அப்போது அவை வலி தாங்கா மல் அலறித் துடிப்பதையும் கண்டு மனம் வருந்துவார்.

இவர் டாக்டர் பட்டம் பெற்ற பின் அறுவைச் சிகிச்சை செய்யும் போது, நோயாளிகள் படுகின்ற அல் லல்களைத் தீர்க்க வேண்டுமென்ற தீவிர முயற்சியில் ஈடுபட்டார். பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்தார். இறுதியில் மயக்க மருந்தைக் கண்டு பிடித்து வெற்றியும் பெற்றார். இவர் மனித குலத்திற்குச் செய்திருக்கும் மாபெரும் சாதனையைப் பாராட்டி விக்டோரியா மகாராணியும், பிரெஞ்சு விஞ்ஞான அகாடமி போன்ற புகழ்பெற்ற பல விஞ்ஞானக் கழகங்களும் இவரைப் பாராட்டத் தொடங்கினர்.


Malubi
அம்மா இங்கே
வா! வா!
மலூபி வேஃபர்
தா...தா...
CREAM WAFERS
ரூ. 1 பேக்கிலும் கிடைக்கும்
ஆம்! சுவைமிக்க மலூபி க்ரீம் வே:.பர்ஸ்
ஆறு சுவைகளில்
• ஆரஞ்சு • பைனாப்பிள் • சாக்லேட் •
• ராஸ்பெரி • பாதாம் • இலாச்சி •
K & P/1/88.
MANUFACTURED BY
MALUBI FOOD PRODUCTS
JEEDI METLA, HYDERABAD-500 855.
MARKETED IN TAMILNADU BY
marketokrats
71, PILLAIYAR KOIL STREET,
MADRAS-600 005. Ph: 846064

ஸ்வீடிஷ் கதை

சின்ன மானும் வேட்டை நாயும்

தமிழில்: சந்திரநாத்



அடர்ந்த காடு. அதிலே ஒரு ஒற்றையடிப் பாதை. காலை பத்து மணி இருக்கும். நல்ல வெளிச்சம் இருந்தது.

அந்த ஒற்றையடிப் பாதையிலே ஒரு மனிதன் போய்க் கொண்டிருந்தான். அவன் ஒரு வேட்டைக்காரன். தலையிலே தொப்பி இருந்தது. தோளில் நீளமாக ஒரு துப்பாக்கி தொங்கிக் கொண்டிருந்தது. அவனுடைய இடது கை துப்பாக்கியின் அடிக்கட்டையைத் தாங்கிக் கொண்டிருந்தது.

வலது கை ஒரு சங்கிலியைப் பிடித்திருந்தது. அந்தச் சங்கிலியின் இன்னொரு முனை ஒரு நாயின் கழுத்துப் பட்டையில் பிணைந்திருந்தது. அதன் பெயர் ஜிம்மி.

நாய் அவன் பின்னால் வருத்தத்துடன் போய்க் கொண்டிருந்தது. அதற்குச் சொல்ல முடியாத வருத்தம்.

அந்த நாய் அவனிடம் பல ஆண்டுகளாகவே இருந்து வந்தது. மிகுந்த எஜமான விசுவாசத்துடன் அது, அவனுக்கு வேட்டைகளில் உதவி செய்து வந்தது.

காட்டிலே வேட்டையாட அவன் கிளம்பினால் அது அவனுக்கு நாலடி முன்னால் குதூகலத்தோடு போகும். புதர்களுக்கிடையில் ஒளிந்திருக்கிற முயல்கள், குள்ள வாத்துக்கள், நரிகள், கோழிகள் எல்லாவற்றையும், மோப்பம் பிடித்துக் கண்டுபிடித்து உசுப்பி விட்டுவிடும்.

பயந்து போன அந்தச் சின்னப் பிராணிகள் திக்குத் திசை தெரியாமல் ஓட ஆரம்பிக்கும்.

வேட்டைக்காரன் அவற்றைச் சுலபமாகத் தன் துப்பாக்கியால் சுட்டு, வீழ்த்திவிடுவான். ஒவ்வொரு தடவையும் சுமக்க முடியாமல் பிராணிகளை வேட்டையாடி எடுத்து வருவான்.

ஜிம்மி என்கிற அந்த நாயால்தான் தனக்கு நிறைய வேட்டை கிடைக்கிறது என்பதில் ரொம்ப சந்தோஷம், அவனுக்கு. ஜிம்மியை அவன் மிகச் செல்லமாக வளர்த்து வந்தான்.

அப்பேர்ப்பட்ட ஜிம்மி நேற்று ஒரு பெரிய தப்பு பண்ணி விட்டது. வேட்டைக்காரனைத் தேடிக் கொண்டு அவனுடைய நண்பன் ஒருவன் வந்தான். பழைய நண்பன். ஆனால் ஜிம்மிக்கு அது தெரியாது. அவனை அது அதற்கு முன் பார்த்ததே இல்லை.

மளமளவென்று அவன் தோட்டத்துக் கேட்டைத் தள்ளித் திறந்து கொண்டு வந்துவிட்டான். வரலாமா, அப்படி?



'விரோதியா, நண்பனா?' என்று ஜிம்மிக்கு எப்படித் தெரியும்? விரோதி என்றே அது நினைத்து விட்டது. யாரோ திருட்டுப் பயல் என்று நினைத்து விட்டது. எஜமானின் பொருள்களைத் தட்டிக் கொண்டு போக வந்திருக்கிறவன் என்று நினைத்து விட்டது.

திருடனைத் தடுத்துத் துரத்த வேண்டியது அதன் கடமை இல்லையா? உடலை ஒரு முறை நிமிறிக் கொண்டு அவன் மீது பாய்ந்தது.

அவனுடைய குதிகாலில் ஒரு கடி கடித்தது. உடனே, ''டேவிட், உன் நாயைப் பாரேன்,'' என்று கத்தினான் அவன்.

அடுத்தகணம் ''ஜிம்'' என்று ஒரு பெரிய அதட்டல் கேட்டது. எஜமானின் குரல்தான் அது. நடுநடுங்கி விட்டது, 'ஜிம்.' ஏதோ பெரிய தப்பு செய்து விட்டோம்' என்று தெரிந்து விட்டது. வாயிலே, அந்த நண்பனுடைய கால் சராயின் கிழிந்த துண்டு தொங்க, அது, அப்படியே நின்று விட்டது.

யஜமான் டேவிட் ஓடி வந்தான்; கையிலிருந்த தடியால் ஜிம்மியின் தலையில் ஒரு அடி போட்டான். ''இரு உன்னை என்ன செய்கிறேன், பார்'' என்று உறுமினான். நண்பனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அவனுடைய காயத்துக்கு மருந்து போட்டுக் கட்டுப் போட்டான்.

''எவ்வளவு வெறி பிடித்த நாய்'' — என்றான் நண்பன். ''இது போல, இன்னும் எத்தனை பேரைக் கடிக்கப் போகிறதோ!'' என்றான்.

''இது உயிரோடு இருந்தால்தானே கடிப்பதற்கு? நாளைக்கே காட்டுக்குள் கொண்டு போய், கண்காணாத புதரில் சுட்டுத் தள்ளி விட்டு வந்து விடுகிறேன். நன்றி கெட்ட நாய்'' என்றான் டேவிட்.

அதற்காகத்தான், இதோ பரம விசுவாசியான அந்த நாயை அழைத்துக் கொண்டு போகிறான் டேவிட்.

''நான் நன்றி கெட்டவனா?'' என்று வருந்தியது அந்த நாய். ''எத்தனை வேட்டைகளில், எத்தனை உயிர் ஆபத்துக்களில் உனக்கு உதவி செய்தேன். இன்று இப்படி என்னைக்

கொல்ல அழைத்துச் செல்கிறாயே.. மனிதா, இதுவா நன்றி?'' என்று வருந்தியது.

டேவிட், திரும்பிப் பார்க்காமலே, நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுடைய கால்களையும், முதுகையும், தொப்பியையும் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டே பின்னால் போயிற்று நாய்.

திடீரென்று அதற்குத் தோன்றியது. ''இந்த நன்றி கெட்ட மனிதனுக்காக நாம் ஏன் சாக வேண்டும்? நம்மை நாம் காப்பாற்றிக் கொள்வதுதான் இப்போது முக்கியம்.''

அடுத்த கணம், அது எப்படித் தப்பிச் செல்லலாம் என்று யோசிக்க ஆரம்பித்து விட்டது.


அதிர்ஷ்டவசமாக, அப்போது பார்த்து அதன் கழுத்துப்பட்டை நெகிழ்ந்து கொடுக்க ஆரம்பித்தது. ரொம்பப் பழசு அது. தண்ணீர், வெயில் எல்லாம் பட்டு இற்றுப் போயிருந்தது. ஒரு இடத்தில் ரொம்ப இற்றுப் போய், எப்போது அறுந்து விழும் என்ற நிலையில் இருந்தது.

ஒரு புதரைத் தாண்டும் போது அது அறுந்தே விட்டது. சங்கிலியும் பட்டையும் நாயின் கழுத்திலிருந்து நழுவிக் கீழே விழுந்து விட்டன. அடுத்த கணம், இதை உணர்ந்து கொண்ட நாய், விருட்டென்று திரும்பி ஓட ஆரம்பித்தது.

சங்கிலி தரையில் இழுபடுகிற சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் வேட்டைக்காரன். நாய், சங்கிலியிலிருந்து விடுவித்துக் கொண்டு ஓடுவதைப் பார்த்து விட்டான். 'நில் — ஜிம் — நில், நில்' என்று கத்திக் கொண்டே துப்பாக்கியை நீட்டிக் கொண்டு, அவன் நாயின் பின்னால் ஓடினான்.

நாய்க்குத் தெரியாதா, துப்பாக்கியின் மகிமை? அது அதன் குறியிலிருந்து அடிக்கடி விலகி, தாவிக் குதித்துக் கொண்டே ஓடியது. வேட்டைக்காரனும் பின்னால் ஓடினான்.

கடைசியில், நாய் களைத்துப் போய் ஒரு சுனையின் அருகில் வந்து நின்றது. மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்



மனைவி: 'பையன் பரீட்சைக்குப் படிக்கும் போது ரேடியோ செய்திகள் வைக்காதீங்க'ன்னுச் சொன்னேன் கேட்டீங்களா?

கணவன்: இப்ப என்ன ஆச்சு?

மனைவி: பரீட்சையில் 'தண்டி யாத்திரை துவக்கியவர் யார்'ன்னு கேட்டா 'ராஜீவ் காந்தி'ன்னு எழுதிட்டானாம்.

— போ. பாலரிஷி (13,015)
எட்டையபுரம்.

கியது அதற்கு. 'இனி ஓட முடியாது; சுடப்பட்டுச் சாக வேண்டியதுதான்' என்று எண்ணி வேட்டைக்காரனை எதிர்நோக்கி நின்றது.

வேட்டைக்காரனுக்குக் கோபமான கோபம் — 'நாய் தன்னை ஏமாற்றித் தப்பி ஓடி விட்டதே' என்று. இப்போது மேலே ஓட வழியில்லாமல் சுனைக் கரையில் நாய் நின்றதும் 'அகப்பட்டுக் கொண்டாயா? ஒழி இன்றோடு' என்று அதைச் சுட துப்பாக்கியை நீட்டிக் குறி பார்த்தான்.

அப்போதுதான் அவன் கண்களுக்கு இன்னொரு காட்சி தென்பட்டது. நிராதரவாக, தப்பி ஓட வழியில்லாமல் நிற்கும் நாய்க்குப் பின்னால், தண்ணீருக்குள், ஒரு சின்ன மான் குட்டி, சுனைக்குள் அகப்பட்டுக் கொண்டு தவிப்பதை அவன் கண்டான்.

எதிர் கரையில், அந்தக் குட்டி மானின் அம்மா பரிதவிப்புடன் நின்று கொண்டிருந்தது. 'ஐயோ, தண்ணீர் அருகே போகாதே என்றேனே — கேட்டாயா?' என்று பரிதவித்தது அது.

திடீரென்று துப்பாக்கியைக் கீழே தாழ்த்தினான் வேட்டைக்காரன்.

''அடடா, எவ்வளவு பெரிய தவறு செய்ய இருந்தேன். சாகிற சமயத்தில் கூட என் நாய், இங்கே ஒரு மான் குட்டி இருப்பதை மோப்பம் பிடித்து அறிந்து என்னை இழுத்து வந்திருக்கிறதே— இதற்காகத்தான் அது சங்கிலியிலிருந்து கழற்றிக் கொண்டதா? எவ்வளவு யஜமான விசுவாசம், என் நாய்க்கு! இதையா சுட்டுக் கொல்ல இருந்தேன்'' என்று எண்ணினான் அவன்.

மெல்ல அருகில் வந்து நாயைத் தட்டிக் கொடுத்தான். 'நடந்ததை எல்லாம் மறந்து விடு, ஜிம் — இனி நாம் பழையபடி சிநேகமாக இருப்போம்' என்று அதற்கு ஒரு முத்தம் கொடுத்தான்.

பிறகு நாயை விட்டு விட்டு, மடுவில் இறங்கிச் சென்று, அங்கே சேற்றில் கால் புதைந்து தவித்த மான் குட்டியைத் தூக்கிக் கொண்டு கரைக்கு வந்தான். அதன் கால்களை கயிற்றில் கட்டி தோளில் போட்டுக் கொண்டான். 'வா ஜிம்மி, வீட்டுக்குப் போவோம்' என்று கிளம்பி விட்டான்.

தாய் மான் இதை எல்லாம் பார்த்து விம்மி அழுது துடித்ததை அவன் கவனிக்கவே இல்லை.

ஆனால் 'ஜிம்' கவனித்து விட்டது. அந்தத் தாய் மானின் கண்களில் ததும்பிய கண்ணீரை அது மறக்கவே முடியவில்லை. 'அடடா — இந்த சேயும் தாயும் பிரிய நாம் காரணமாகி விட்டோமே'' என்று வருந்தியது அது.

வேட்டைக்காரன், தோளிலே மான் குட்டியைப் போட்டுக் கொண்டு, ஜோராக விசிலடித்துக் கொண்டு முன்னே நடந்தான்.

அவன் பின்னால் ஏதோ தப்பு செய்து விட்ட குற்றவாளி போல உடல் குன்ற மெதுவாக நடந்தது நாய்.

பல தடவை அது நிமிர்ந்து மான் குட்டியைப் பார்க்க விரும்பியது. ஆனால் அதற்கு துணிவு வரவில்லை.

வெகு தூரம் வந்த பிறகே அதால் நிமிர்ந்து பார்க்க முடிந்தது. சின்ன மானும் அப்போது கீழே குனிந்து நாயைப் பார்த்தது. அதன் கடைவாயில் சிரிப்பு சிந்தியது.

அதைக் கண்டதும் நாய்க்கு வருத்தம் இன்னும் அதிகமாயிற்று. ''அடடா — எவ்வளவு சின்னக் குட்டி! இதன் கண்களில்தான் எத்தனை ஒளி! உலகமே தெரியாத பச்சைப் பாப்பா. இந்த மனிதன் எதற்காக உன்னை எடுத்துக் கொண்டு போகிறான், என்பது தெரியுமா உனக்கு — அப்பாவி குட்டியே'' என்று வருந்தியது.

''பெரிய தோட்டமும், ஆள் உயர மதிலும் உள்ள இடத்தில் உன்னை அடைத்துப் போடப் போகிறான்; அங்கே உள்ள புல்வெளியில் வயிறாரத் தின்று கொழுக்கட்டும் என்று விட்டு விடுவான். நீ நன்றாக கொழுத்ததும், உன்னை அறுத்து சமைத்து நண்பர்களை வைத்துக் கொண்டு விருந்து சாப்பிடப் போகிறான் — பாவம், உனக்கு எங்கே தெரியப் போகிறது'' என்று வருந்தியது.

''அதற்குக் காரணம் நான்தான்'' என்று கேவியது நாய். ''எவ்வளவு சுதந்திரமாக அந்தக் கானகத்திலே சுற்றித் திரிந்து கொண்டிருந்தாய். இப்போது அந்த சுதந்திரத்தை இழந்து அடிமையாகக் கட்டப்பட்டுக் கிடக்கிறாய் — குழந்தாய், நீ அடிமையானதற்கும் நான்தான் காரணம். இந்தப் பாவியை மன்னிப்பாயா?'' என்று அழுதது. மனசுக்குள்தான். இதை எல்லாம் சொன்னால் அந்த


பழம் காயாகும்!

''எங்கப்பா பழத்தைக் காயாக மாற்றி விற்பார்''

''அது எப்படிடா!''

''எலுமிச்சம் பழத்தை ஊறுகாயாக்கி விற்பார்''

— எஸ். விஜயா.



மான்குட்டியின் கொஞ்ச நஞ்ச மகிழ்ச்சியும் போய் விடுமோ என்று அஞ்சியது அது.

"ஹாய்" என்று அழைத்தது மான் குட்டி. "உன் பெயர் என்ன? எப்படி கூப்பிடுவது உன்னை?"

"ஜிம் என்று கூப்பிடு."

"ஜிம்! நீ எனக்கு நண்பனா, விரோதியா? —விரோதிகளுடன் எந்த உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று என் அம்மா சொல்லியிருக்கிறாள்."

"பெற்றோர்கள், பெரியவர்கள் சொல்வது எப்பொழுதும் சரியாக இருக்கும்."

"நீ எனக்கு விரோதியா, நண்பனா?"

"எனக்குத் தெரியவில்லை. உனக்கு எப்படித் தோன்றுகிறது?"

"அதைக் கண்டுபிடிப்பதுதான் கஷ்டமாக இருக்கிறது. எதற்காக ஒருவரை விரோதியா, நண்பனா என்று பார்க்க வேண்டும். அது நம்மையே கஷ்டப்படுத்திக் கொள்வது அல்லவா? எல்லோரையுமே நண்பனாக நினைத்துக் கொள்வதே சுலபம் இல்லையா?"

"அதுதான் சரி."

"நீ எனக்கு நண்பனாக இருக்கிறாயா, ஜிம்."

"அப்படி இருக்கவே விரும்புகிறேன்."


"அதைச் சொல்லும் போது ஏன் உன் கண்ணில் நீர் ததும்புகிறது, ஜிம்"

நாய் இதற்கு பதில் சொல்லாமல் யோசனையில் ஆழ்ந்தது. அப்புறம் அது எதுவுமே பேசவில்லை.

வேட்டைக்காரன் தன் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தான். பெரிய மதிலின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான். கதவை மீண்டும் சாத்தி தாழிட்டான்.

பிறகு மான் குட்டியை அவிழ்த்து விட்டான். அது கீழே குதித்து நாலா புறமும் அதிசயமாகப் பார்த்தது.

பெரிய புல்தரையும், பூஞ்செடிகளும், அதன் உற்சாகத்தைக் கிளப்பி விட்டு விட்டன. அது துள்ளிக் கொண்டே அங்குமிங்கும் ஓட ஆரம்பித்து விட்டது.



ஐந்தும் பத்தும்

"டேய் ரகு, நேத்து உங்கப்பாகிட்டே சினிமாவுக்குக் காசு கேட்டியே, கிடைச்சுதா?"

"கிடைச்சுது. ஐந்தும் பத்தும் கிடைச்சுது"

"அப்படின்னா பதினைஞ்சு ரூபாயா?"

"இல்லேடா. தமிழில் ஐந்தாவது எழுத்து 'உ'; பத்தாவது மாசம் 'தை' இரண்டையும் சேர்த்துப் பார். அதுதான் கிடைச்சுது"

— ஏ. குணசேகரன் (17709)
குமரமங்கலம்.


நாய் பேசாமல் தன்னிடத்தில் படுத்துக் கொண்டு அதையே பார்த்துக் கொண்டிருந்தது.

"பாவம் — காட்டில் எவ்வளவு சுதந்திரமாக இருந்தது." என்று நினைத்தது அது. தன் தோளில் அதை ஏறச் சொல்லி, மதில் மீது தாவி ஏறி அப்பால் இறக்கி விட்டு விடலாமா என்று யோசித்தது. அப்படிச் செய்யக் கூடாது. அது யஜமான துரோகம். 'தப்பிப் போ' என்று வாயால் சொல்வது கூட தப்பு.

இரவெல்லாம் அது யோசித்துக் கொண்டே இருந்தது. சின்னமான் இஷ்டத்திற்கு துள்ளித் திரிந்தது; இஷ்டத்திற்கு புல்லைக் கடித்து தின்றது. வயிறார நீர் குடித்தது.

"அடடா — எப்பேர்பட்ட புது வாழ்க்கை — சுவர்க்கம் என்றால் இது தான்" என்று பெரிதாக ஏப்பம் விட்டுக் கொண்டே அது நாயின் அருகில் வந்து உட்கார்ந்தது.

"அட பைத்தியக்காரா — இதுவா



சொர்க்கம்? வயிற்றுக்கும் சோறும் தண்ணீரும் கிடைத்து விட்டால் சுவர்க்கமாகிவிடுமா? அடிமை வாழ்க்கை அல்லவா இது?'' என்று உள்ளூர நினைத்து வருந்தியது நாய்.

''என்ன யோசனையிலேயே எப்போதும் இருக்கிறாய் — அதோ பார் நிலா மேலே ஏறி வருகிறது. பால் மாதிரி இருக்கிறது பார் அது! இந்த நிலா வெளிச்சத்தில் ஏதாவது விளையாடலாம், — வாயேன்'' என்றது.

''விளையாட்டா?'' — நிமிர்ந்து உட்கார்ந்து நாய். அதன் மூளையில் ஒரு 'ஐடியா' உதயமாகி விட்டது. அதன் முகம் மலர்ந்தது. ''சரி, விளையாடுவோம், வா'' — என்று எழுந்தது.

''என்ன விளையாட்டு?'' என்று கேட்டது மான்.

''நான் ஓடுவேன். என்னை நீ பிடிக்க வேண்டும்''

''சரி ஓடு.''

நாய் ஓடிற்று; மான் அதைத் துரத்திக் கொண்டு பின்னால் போயிற்று. எவ்வளவு முயன்றும் அதால் நாயைப் பிடிக்கவே முடியவில்லை.

நாய் அதை பல இடங்களுக்குப் போக்கு காட்டிக் கொண்டே போய், கடைசியில் மதில் சுவரோரமாக அழைத்து வந்து விட்டது. மதில் அருகில் வந்ததும், ஒரே தாவலில் மதில் மீது ஏறி உட்கார்ந்து கொண்டது.

சின்ன மான் கீழேயே திகைத்துப் போய் நின்றது. ''ஊஹூம். அவ்வளவு உயரத்தில் போனால் யார் பிடிப்பார்கள்'' என்றது.

''முயன்று பார். உன்னால் முடியும்'' என்றது நாய்.

மான் ஒரு தாவு தாவியது. ஆனால் பாதி மதிலளவு கூட அதால் போக முடியவில்லை. கீழே விழுந்து விட்டது அது.

''அட போ — என்னால் முடியாது'' என்றது.

''அட, இவ்வளவுதானா, உன் சாமர்த்தியம்'' என்று கைகொட்டிப் பரிகசித்தது நாய், மேலே இருந்தவாறே.

மானுக்கு ரோஷம் வந்தது. அது மீண்டும் பலத்தை எல்லாம் திரட்டிக்

கொண்டு மேல் நோக்கி பாய்ந்தது. இந்தத் தடவை முக்கால்வாசி உயரம் வந்து விட்டது. ஆனால், அதற்கு மேல் போக முடியாமல் கீழே விழுந்து விட்டது. கண்ணீருடன் அது மேலே பார்த்தது.

''இன்னொரு தடவை முயற்சி செய்து பார். உன் பலம் உனக்கே தெரியவில்லை. முக்கால்வாசி வந்து விட்டாயே. இன்னும் கொஞ்ச தூரம் தானே — இது ஒரு பிரமாதமா?'' என்று ஊக்கியது நாய்.

''வேண்டாம், அப்பா — என்னால் முடியவே முடியாது'' என்றது மான் குட்டி.

''என் கண்ணல்லவா — எப்பேர்ப் பட்ட மகாவீரன் நீ — மலையைக் கூட தாண்ட முடியுமே-உன்னால். இந்தச் சின்னச் சுவரா பிரமாதம்'' என்று மேலும் ஊக்கியது நாய். ''வா, வந்து, இன்னும் ஒரே ஒரு தடவை — ப்ளீஸ்.''

இந்த வார்த்தைகளைக் கேட்ட தும், மான்குட்டிக்கு ஆயிரம் யானை பலம் வந்து விட்டது போலிருந்தது. அது துள்ளி எழுந்தது. பின்னால் போய் நின்று, பிறகு ஓடி வந்து, மேலே ஒரு தாவு தாவிற்று.

அடுத்த கணம் அதற்கே ஆச்சரியம் தாளவில்லை. அது மதில் மீது இருந் தது. ''நானா? நானா மேலே வந்து விட்டேன்'' என்றது.

அப்போது நிலா முழுமையாக மேலே ஏறி வந்திருந்தது. அதன் பால் ஒளியில் மதிலுக்கு அப்பால் உள்ள அழகிய கானகம் தெரிந்தது.

''சின்ன நண்பனே — அதோ பார்'' என்று கானகத்தைச் சுட்டிக் காட்டி யது. ''அங்கேதானே இருக்கிறது நீ பிறந்த வீடு?''

''ஆமாம்.'' புல்லரிப்புடன் கான கத்தை ஆவலுடன் பார்த்தது சின்ன மான்.

''அங்கேதானே உன் அம்மா, அப்பா, சகோதரர்கள் எல்லாரும் இருக்கிறார்கள்?''

ஆமாம்.

''எவ்வளவு சுதந்திரமாக அதில் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந் தாய்!''

''ஆமாம்'' — என்ற சின்னமான் விருட்டென்று எழுந்து நின்றது. நாயையும் கானகத்தையும் மாறி மாறிப் பார்த்தது. அடுத்தகணம், ''நண்பனே உனக்கு நன்றி, போய் வருகிறேன்'' என்று கூவிக் கொண்டே கானகத்துப் பக்கமாக குதித்து, எழுந்து, காற்றைப் போல ஓடி, சில கணத்தில் பார்வையி லிருந்து மறைந்து விட்டது.

அது போன திசையையே திருப்தி யுடன் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் உட்கார்ந்திருந்தது நாய். அதன் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

பிறகு திரும்ப உள் பக்கம் குதித்து, தன் பழைய இடத்திற்குப் போய் படுத்துத் தூங்க ஆரம்பித்தது.

செந்திலுடன் கொஞ்சும் பிரதமர்

சென்னையை அடுத்த மறைமலை நகரில் நடந்த அகில இந்திய காங் கிரஸ் மாநாட்டில், பிரதமருக்குப் பட்டாடை அணிவிக்க ஆசையாக முன் வரும் ஆம்பூரைச் சேர்ந்த சிறுவன் செந்தில்குமாருடன் பிரதமர் கொஞ்சிக் குலவுகிறார்.



சார் தபால்!

* அவ்வளவுதானு? இனி 16 பக்கப் படக் கதையில் வண்ணத்தைப் பார்க்க முடியாதா?

— பி. சீனிவாசன், ஓமலூர்.

(யார் சொன்னது? இனி ஒவ்வொரு இதழிலும் வண்ணப் படங்களை முன் போல் கண்டு மகிழலாம். சென்ற இதழில் அப்பகுதி அச்சாகும் போது, அச்சு இயந்திரம் சிறிது ஒத்துழைக்க மறுத்து விட்டதாலே உங்களுக்கு இப்படிப்பட்ட ஏமாற்றம் தரும்படியாயிற்று. — ஆசிரியர்.)

* சென்ற இதழில் படக்கதை கறுப்பு, வெள்ளையாக இருந்தாலும், கதையில் வண்ணத்துக்குரிய பொலிவு இருந்தது.

— இரா. குருகுகன், குத்தாலம்.

* வண்ணம் இல்லேயே என்ற வருத்தம் எனக்கு இல்லை. நானே அந்தப் படங்களுக்குப் பல வண்ணங்கள் தீட்டி, மற்ற படக் கதைகளுடன் சேர்த்து வைத்து விட்டேன். இப்படி மற்றவர்களும் செய்யலாமே!

— ஆர். பத்மா, சிங்கம்புணரி.

* 'காந்தி காலம்' பற்றி டாக்டர் கோ. வேங்கடசாமி எழுதியிருந்ததைப் படித்தேன். அக்காலச் சூழ்நிலையில் உருவான டாக்டர் வேங்கடசாமியின் மகத்தான தொண்டு போற்றத்தக்கது. பணத்தையே குறிக்கோளாகக் கொள்ளாமல், தொண்டுள்ளத்துடன் பணிபுரியும் டாக்டர்கள் நிறையத் தேவை.

— சாவித்திரி ராகவன், திருச்சி — 2.

* கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு முன்னோடியாகத் திகழும் டாக்டர் வேங்கடசாமி போன்றவர்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தி, அவருடைய இளமைப் பருவத்தை அறியவும் வாய்ப்பளித்த கோகுலத்திற்கு நன்றி.

— எம். சொக்கலிங்கம், (20,678), மன்னார்குடி.

* குழந்தைகளுக்கு மதிப்பளித்து, அவர்களைக் குதூகலிக்கச் செய்த 'குழந்தைகள் மாநாடு' பற்றிய கட்டுரை அருமை!

— எஸ். நாதன்பாபு, சென்னை — 4.

* 5000 குழந்தைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் 3 நாட்களும் தங்க வசதி, உண்ண உணவு அளித்த ஸ்ரீ பாலகங்காதர சுவாமிகளைப் போல், நம் தமிழகத்திலும் ஒரு சுவாமிஜி இருந்தால்...?

— நா. பரமகுரு, மதுரை — 2.

தேடிப் பிடித்தது எப்படியோ!

* அறிவு வளர்ச்சிக்கு உதவும் 'வைத் தண்ணு' அவர்களின் புத்தகங்களை நான் விரும்பிப் படிப்பேன். எங்களுக்காகவே உயிர் வாழ்ந்த அந்த உத்தம ஆசிரியரின் மறைவு கேட்டு மனம் மிக வருந்தினேன்.

— எஸ். சுகுமாரி, சென்னை — 20.

* பெரிய மனிதர்களின் சின்ன வயதுப் படங்களைப் பார்த்து மிக மிக மிக மகிழ்ச்சி அடைந்தேன். எப்படித்தான் இந்தப் படங்களைத் தேடிப் பிடித்தீர்களோ!

— எம். அருணாசலம் (20,816), கோவில்பட்டி.

* புதிய துணை ஜனாதிபதியின் கதையை குழந்தைகள் மட்டுமன்றி, பெற்றோரும் படிக்க வழி வகுத்த கோகுலத்தை மனமாரப் பாராட்டுகிறோம்.

— பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன் புதூர்.

* 'கொடியும் மலரும்' தொடர் கதையில் இப்போதே பொன் வேய்ந்து வைரத்தைப் பதித்து விட்டாரே கூத்தபிரான்!

— என். பி. மாசிலாமணி (14,382), நாட்டான்வலசு.

* முதல் உதவி செய்யத் துடிக்கும் என் போன்ற மாணவர்களுக்கு டாக்டர் கணேசன் அவர்களின் கட்டுரை பேருதவியாக இருக்கிறது.

— ரெ. இளஞ்செழியன், காத்தான் சாவடி.

* உப்பின் கதை எழுதிய சாந்தா அவர்களை நாங்கள் உள்ளவரை மறக்க மாட்டோம்.

— பி. ராணி, சிவகங்கை.

* கதாசிரியரின் வாக்கியங்களுக்குப் பொருள் புரியாமல் ஓவியர் வரைந்த படங்கள் ஏற்கெனவே வந்து விட்டதே! கோகுலம் ஆசிரியர் கோகுலம் படிப்பதில்லையா?

— எஸ். ஸ்ரீராம் (9206), கடையம்.


(இது முற்றிலும் எங்கள் தவறுதான். அதற்கு வருந்துகிறோம். — ஆசிரியர்.)

சித்திரப் புதிர்! 28

ஆழி

1 தங்கள் தேசிய உடையில் இருக்கும் இவர்கள் எந்த நாட்டுக்காரர்கள்?





2 செஸ் ஆட்டத்தில் இதன் பெயர் என்ன?

3 இது என்ன மொழி?

Α Γ Δ Ε Θ Λ Υ Ν Φ Ξ Ω

4 இதில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன?





5 இது எந்தநாட்டு தேசியக் கொடி?

அ. இத்தாலி, ஆ. கனடா, இ. ஸ்வீடன்.

விடை வேறுபக்கம்

நமது பாரதப் பிரதமர்களின் கதை

ஜானகி மணாளன்

குழந்தைகளே! கடந்த ஆண்டு ஆகஸ்ட் கோகுலத்தில் 'ஜனாதிபதிகளின் கதை'யைப் படித்தீர்கள் அல்லவா?

ஜனாதிபதி நம்நாட்டின் மிக உயர்ந்த பதவியில் இருப்பவர். அவருக்கு அடுத்த இடம் யாருக்குத் தெரியுமா? பிரதம மந்திரிக்குத்தான். இடம்தான் அடுத்ததே தவிர, உண்மையில் அதிக செல்வாக்கும் அதிகாரமும் கொண்டவர் பிரதமர்தான். எப்படித் தெரியுமா?

பிரதமரின் ஆலோசனையின் பேரில்தான், ஜனாதிபதி தமது அதிகாரத்தைச் செலுத்த முடியும். அதே நேரத்தில், பிரதமர் ஆலோசனை கூறலாமே தவிர, ஜனாதிபதியின் உத்தரவைப் பெறாமல், அந்த ஆலோசனைகளைச் செயல்படுத்தும் அதிகாரமும் அவருக்குக் கிடையாது. இது நமது இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள சிறப்பு அம்சம். இருவரும் ஒருவரை ஒருவர் சார்ந்துதான் ஆட்சி புரிய வேண்டும். அப்படி ஒரு பரஸ்பரக் கட்டுப்பாடு.

சரி, நமது பிரதமர் எப்படித் தேர்ந்தெடுக்கப் படுகிறார்?

இந்திய நாடு பல நாடாளுமன்றத் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொகுதிக்கு ஓர் உறுப்பினர் வீதம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் சேர்ந்த சபைதான் நாடாளுமன்றத்தின் கீழ்சபை என்பது. அதுதான் 'லோக் சபா' எனப்படுவது. இவர்களின் தேர்தல், கட்சி அடிப்படையில் நடக்கும். எந்தக் கட்சி உறுப்பினர்கள், இச்சபையில் பெரும்பான்மை பலம் பெற்றுள்ளார்களோ அவர்களின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்தான் பிரதமராக் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார். பிரதமர் தனக்கு உதவியாகப் பல அமைச்சர்கள் கொண்ட மந்திரிசபை ஒன்றை அமைத்துக் கொண்டு, நாட்டு நிர்வாகத்தில் ஜனாதிபதிக்கு உதவியாக இருந்து, ஆட்சியைக் கவனிக்கிறார். இவரது பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள். மீண்டும் மீண்டும் போட்டியிடலாம்!

சரி, குழந்தைகளே! நமது நாடு 1947 — இல் ஆகஸ்ட் 15 — ஆம் நாள் விடுதலை பெற்றது. அது முதல், இன்று வரையில், எத்தனை பேர், யார் யார் பிரதமர்களாக இருந்து, எப்படியெல்லாம் தொண்டாற்றியுள்ளார்கள், தெரியுமா? அந்தப் 'பிரதமர்களின் கதை'யைத்தான் இப்போது கூறப் போகிறேன்:

திரு. ஜவாஹர்லால் நேரு:

இவர் நம் நாட்டின் முதலாவது பிரதமர். தியாக பரம்பரையைச் சேர்ந்தவர். விடுதலை வீரர். பல ஆண்டுகள் சிறையில் வாடி வதங்கியவர். இவர் தமது பதவிக் காலத்தில் இரு ஜனாதிபதிகளின் கீழ் பணியாற்றியுள்ளார். அவர்கள் திரு. ராஜேந்திர பிரஸாத்தும், திரு ராதாகிருஷ்ணனும் ஆவர். நம் நாடு 1947 — இல் ஆகஸ்ட் 15 அன்று விடுதலை பெற்றது. அன்றே இவர் பிரதமராகி விட்டார். அப்போது இவர் இடைக்காலப் பிரதமர். அச்சமயத்தில் திரு மௌண்ட் பேட்டன் மற்றும் திரு. ராஜகோபாலாச்சாரி ஆகிய இரு கவர்னர் ஜெனரல்

களின் கீழ் பிரதமராயிருந்த தனிச் சிறப்பும்இவருக்குஉண்டு. 1948—இல் இந்தியப் பொருளாதாரக் கொள்கையை அறிவித்தார். 1950 ஜனவரி 26 — இல் இந்தியா குடியரசாயிற்று. அன்று முதல் இந்திய அரசியல் சாசனம் அமலுக்கு வந்தது. அதன்படி 1952—இல் முதல் பொதுத் தேர்தல். 21 வயது பூர்த்தியான அனைத்து ஆண் பெண்ணுக்கும் வாக்குரிமை அளித்தார். தேர்தலில் நேருஜியின் காங்கிரஸுக்கு அமோக வெற்றி. முதல் பிரதமரானார். அது முதல் 1964 மே 27 — ஆம் நாள், தான் மறையும் வரையில் தொடர்ந்து பிரதமராக இருந்தார். மிக நீண்ட காலம் பிரதமராக இருந்த உயர் சிறப்பு இவருக்கு உண்டு. உலக அரங்கில் இந்தியாவுக்குச் சிறப்பான தனி இடத்தைப் பெற்றுத் தந்தவர் இவரே! தேசிய வளர்ச்சிக்காகத் திட்டக் கமிஷனை அமைத்தார். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயல்படுத்தினார். அதனால் நாட்டின் பொருளாதார நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. பல அணைக்கட்டுகள் கட்டப்பட்டன. நீர்ப்பாசன வசதி பெருகியது. விவசாயம் சிறப்புற்றது. பல பெரும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. அரசுத்துறை, மற்றும் தனியார் துறைக்கு ஊக்கமளித்து ஜனநாயக முறையில் சோஷலிசத்தைச் செயல்படுத்தினர். அதற்காக 1955 ஆவடி காங்கிரஸில் இந்த 'ஜனநாயக சோஷலிசம்' என்ற கொள்கையை அறிவித்தார். அயலுறவுக் கொள்கையில் யுகோஸ்லாவியா அதிபர் மார்ஷல் டிட்டோவுடன் சேர்ந்து, 1955 — இல் பாண்டுங் மாநாட்டில் கூட்டுச் சேரா — சமாதான சகவாழ்வுக் கொள்கையை அறிவித்தார். ஆசிய ஆப்பிரிக்க நாடுகளை ஒருங்கிணைத்து அணி சேரா நாடுகளின் அமைப்பை ஏற்படுத்தினார். அது இன்று வளர்ந்து, மூன்றாவது உலக நாடுகளின் பேரமைப்பாகப் பெருமையுடன் தொண்டாற்றி வருகிறது. அண்டை நாடுகளிடையே ஒற்றுமையை வலுப்படுத்துவதற்காகப் 'பஞ்சசீலக் கொள்கை'யை வகுத்தளித்தார். சூயஸ் கால்



வாயை எகிப்து தேச உடைமையாக்கியது. அந்தப் பிரச்னையில் பிரிட்டன், பிரான்சு மற்றும் இஸ்ரேலுக்கு எதிராக எகிப்தை ஆதரித்துச் சுமுகமான தீர்வுக்கு வழிவகுத்தார். தென்னாப்பிரிக்கா மற்றும் ரொடீஷியா அரசுகளின் நிறவெறிக் கொள்கை மற்றும் இன ஒதுக்கல் கொள்கையைக் கண்டித்து ஐ. நா. அவையில் தீர்மானம் கொண்டு வந்த முதல் நாடு இந்தியா என்ற பெருமையைப் பெற்றார். ஆசிய நாடுகளுக்கு இவர்தான் வழிகாட்டி. எனவே, இவரை 'ஆசிய ஜோதி' என்பார்கள். மக்களுக்கு இவர் 'நேருஜி.' குழந்தைகளுக்கோ இவர் நேரு மாமா — சாச்சா நேரு! இவரது பிறந்த தினமான நவம்பர் 14 — தான் ஒவ்வோர் ஆண்டும் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறதே!

திரு. லால்பகதூர் சாஸ்திரி:

இவர் நமது நாட்டின் இரண்டாவது பிரதமர். நேருஜியின் மறைவுக்குப் பின் பிரதமரானார். அப்போது ஜனாதிபதி திரு. எஸ். ராதாகிருஷ்ணன். 18 மாதங்கள்தான் இப்பதவியில் இருந்தார்., அந்தக் குறுகிய காலத்தில் இவரது பணி மகத்தானது. மூர்த்தி சிறியதுதான். ஆனால், கீர்த்தி மிகப் பெரியது. 1964 — இல் பாகிஸ்தான் நம் மீது போர் தொடுத்தது. அதைத் தீரத்துடன் எதிர்த்து வெற்றி பெற்றார். நமது பலம் உலகறிய வெளிப்பட்டது. 'பாக்' — இந்திய சமாதான





உடன்படிக்கை தாஷ்கண்ட்டில் கையெழுத்தாயிற்று. அது 1966 ஜனவரியில். அன்றைய தினம் இரவே, அங்கேயே இவர் மாரடைப்பால் காலமாகிவிட்டார்.

'வெளிநாட்டு அபாயத்திலிருந்து நாட்டைக் காக்க ராணுவ பலம்; உள்நாட்டில் மக்களின் நல்வாழ்வுக்கு விவசாய உற்பத்தி அதிகரிப்பு' — இதுதான் சாஸ்திரியின் கொள்கை. இதை வலியுறுத்தி அவர் எழுப்பிய குரல்தான் 'ஜெய் ஜவான்... ஜெய் கிஸான்' என்பது. அதாவது, நாட்டைக் காக்க ராணுவம்; வீட்டைக் காக்க விவசாயம்! இவர் ஒரு தலைசிறந்த காந்தியவாதி. விடுதலைப் போராட்ட வீரர். இவரது பிறப்பு அண்ணல்காந்திஜியின் பிறந்த தினமான அதே அக்டோபர் 2! தமது இறுதி மூச்சுள்ள வரையில், நாட்டுக்காக அர்ப்பணிப்பு. செயலில் நேர்மை, வாழ்வில் எளிமை, உழைப்பு, தியாகம், அன்பு, கருணை, பக்தி, அகிம்சை, சத்தியம் போன்ற காந்திஜியின் கொள்கைகளைக் கடைப் பிடித்து வாழ்ந்து மறைந்த உத்தமத் தலைவர்.

இவர் நம் மூன்றாவது பிரதமர். 1966 முதல் 1977 வரை பதவியில் இருந்தார். பிறகு மீண்டும் 80 முதல் 84 வரையில் இரண்டாம் தடவையாகப்பிரதமரானார். இவர் மிக அதிகமாக 6 ஜனாதிபதிகளின் கீழ் பிரதமராக இருந்துள்ளார். அந்த அறுவர் வருமாறு: திருவாளர்கள் எஸ். ராதாகிருஷ்ணன், ஜாகிர் ஹுசேன், வி.வி. கிரி, பக்ருதீன் அலி அகமது, சஞ்சீவி ரெட்டி மற்றும் ஜைல் சிங்.

முதல் பணிக் காலத்தில் பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தினார். பாங்குகளைத் தேச உடைமையாக்கினார். முன்னாள் சுதேச மன்னர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியத் தொகையை நிறுத்தினார். இந்த முற்போக்குத் திட்டங்களெல்லாம் காங்கிரசின் மூத்த தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே, 1969 — இல் கருத்து மோதல். காங்கிரஸ் இரண்டாகப் பிளந்தது. இவரது அணி இந்திரா காங்கிரஸ் ஆயிற்று. மக்கள் இவர் பக்கம். 1971 — இல் பாகிஸ்தானில் உள்நாட்டுப் பூசல். ஏராளமான அகதிகள் இந்தியா வந்தனர். நமக்குப் பல பிரச்னைகள் ஏற்பட்டன. இந்தியா தலையிட வேண்டியதாயிற்று. பாக் ராணுவத்துடன் மோதல். இறுதியில் கிழக்குப் பாகிஸ்தான் 'பங்களா தேஷ்' என்ற சுதந்திர நாடாயிற்று. அதற்கு இவர் உறுதுணையாக இருந்தார்.

1972 — இல் பொதுத் தேர்தல். அதில் இவருக்கு அமோக வெற்றி. 1974 — இல் எதிர்க்கட்சிகள் ஒன்று கூடி இவருக்குஎதிராக 'முழுப்புரட்சி' யைத்துவக்கின. நாடு முழுதும் அமைதியற்ற சூழ்நிலை. எங்கு பார்த்தாலும் கலவரம், கதவடைப்பு, வேலை நிறுத்தம், இன்னும் பல்வேறு அரசு விரோத நடவடிக்கைகள். அவற்றைச் சமாளிக்கநாட்டில் 'அவசரகாலநிலைமை'யைப் பிரகடனப்படுத்தினார். அதிகாரம் முழுதும் இவர் கைக்கு வந்தது. எனினும் அவருடைய மனத்தில்

ஊன்றியிருந்த 'ஜனநாயகப் பண்பு' மாறவில்லை. நேருவின் மகள் அல்லவா? 1977 — இல் அவசர கால நிலையை ரத்து செய்து விட்டுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார். எதிர்க்கட்சிகள் ஒன்று கூடித் தீவிரமாக எதிர்த்தன. விளைவு, காங்கிரஸுக்குப் படு தோல்வி. இந்திராவும் தோற்றார்.

எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து இணைந்து 'ஜனதா' என்ற அரசியல் கட்சியாகியிருந்தன. அது ஆட்சியைப் பிடித்தது. எனினும், அதில் இருந்த தலைவர்கள் தேச விடுதலைக்காக அரும்பாடு பட்டவர்கள்; மகத்தான தியாகம் புரிந்தவர்கள்; திறமை மிக்கவர்கள். ஆயினும் அவர்களிடையே ஒற்றுமை இல்லை. விரைவில் ஜனதா உடைந்து சிதறியது.

அதையடுத்துப் பொதுத் தேர்தல். ஆண்டு 1980. அதில் இந்திரா காங்கிரஸுக்கு மீண்டும் வெற்றி. இந்திரா மீண்டும் பிரதமரானார். இந்த இரண்டாவது தடவையில் இவரது பெயரும் புகழும் உச்ச கட்டத்தை அடைந்தன. எனினும், நாட்டில் பல்வேறு அரசியல் சிக்கல்கள், அவற்றில் ஒன்று பஞ்சாப் பிரச்னை. சீக்கிய தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டிக் 'காலிஸ்தான்' என்ற தனி நாடு அமைக்க முயன்றனர். அவர்களை அடக்க 'ஆபரேஷன் ப்ளூ ஸ்டார்' என்ற ராணுவ நடவடிக்கையைச் சீக்கியரின் பொற்கோயில் மீது ஈடுபடுத்தினார். ஓரளவு அமைதி திரும்பியது. எனினும், ஆத்திரமடைந்த சீக்கியத் தீவிரவாதி ஒருவன், 1984 அக்டோபர் மாதம் 31 — ஆம் நாள், அவரைச் சுட்டுக் கொன்று விட்டான். அவன் அவருடைய மெய்க் காவலனாக இருந்தவர்களில் ஒருவன் தான்! அமெரிக்க நாடு பிளவுபட்டுச் சிதறி விடாமல் காக்க, உள்நாட்டுப் போரில் பிரிவினைவாதிகளை ஒடுக்கி, அந்நாட்டைக் காத்து, அதன் காரணமாகப் பிரிவினைவாதி வெறியன் ஒருவனின் குண்டுக்கு இரையான அமெரிக்க ஜனாதிபதி ஆப்பிரகாம் லிங்கனுக்கு இந்திராவின் தியாகத்தை ஒப்பிடலாம். இந்திராவும் பஞ்சாப் மாநிலம் தனித்துப் பிரிந்து செல்வதன் மூலம் இந்திய நாடு பிளவுபட்டுச் சிதறி விடாமல் காப்பதற்கு, ராணுவ நடவடிக்கை எடுத்து, அதன் காரணமாக ஒரு சீக்கிய வெறியனின் குண்டுகளுக்குப் பலியாகிவிட்டார். தேசிய ஒருமைப்பாட்டுக்காக உயிர் விட்ட உத்தமத் தலைவர் இந்திரா காந்தி.

மொரார்ஜி தேசாய்:

இவர் நம் நாட்டின் நான்காவது பிரதமர். இவர் கால ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவி ரெட்டி.

இவரது பிறப்பு 1896 பிப்ரவரி 29 — ஆம் நாள். லீப் வருடம். எனவே இவருடைய பிறந்த நாள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவைதான் வரும். 1977 — இல் காங்கிரஸ் தோற்றது. பதிலுக்கு ஆட்சி பீடம் ஏறிய ஜனதா கட்சியின் பிரதமராக இவர் பொறுப்பேற்றார்.

இவர் ஒரு பழுத்த காங்கிரஸ்காரர். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக, ஆங்கிலேயர் ஆட்சியில் ஐ.சி.எஸ். படித்து நல்ல அரசு வேலையில் இருந்ததை உதறி எறிந்து விட்டுக் காந்தி வழி சென்றவர். நாடு விடுதலை பெற்ற பிறகு பொதுத் தொண்டில் ஈடுபட்டார். நேருஜி, லால் பகதூர் மற்றும் இந்திரா காந்தி அமைச்சரவைகளில் இருந்தவர். குறிப்பாக நிதி அமைச்சர் பொறுப்பு: இவர் நேர்மையும் எளிமையும் மிக்கவர். அத்துடன் பிடிவாத குணம் உடையவரும் கூட. கொண்ட கொள்கையைக்கட்டிக்



காக்க, எதையும் இழக்கச் சித்தமாக இருப்பார்.


1979 — இல் ஜனதா கட்சியில் உட்பூசல். தொடர்ந்து பிளவு. அதன் காரணமாகப் பதவி துறந்தார். இவரது ஆட்சிக்காலத்தில் நாட்டின் நிர்வாகம் செம்மைப்பட்டது. மக்களுடைய நீண்ட கால நலன்களை மனத்திற் கொண்டு செயல்பட்டார். 'அவசர நிலை' காலத்தில் கொண்டுவரப்பட்ட சில சட்டங்களை மாற்றியமைத்தார். விலைவாசி இறங்கவும், ஏறாமல் தடுக்கவும் நடவடிக்கை எடுத்துக் கொண்டார். தற்போது இவர் தமது 92 வது வயதில் ஓர் இளைஞருக்குரிய சுறுசுறுப்புடன் வாழ்ந்து வருகிறார்.

திரு சௌத்ரி சரண்சிங்:

இவர் நம் ஐந்தாவது பிரதமர். உள்ள உறுதி மிக்கவர். சுதந்திரப் போராட்ட வீரர்.

முதலில் உத்தரப்பிரதேச அரசில் பணியாற்றிய பிறகு மத்திய அரசில் பொறுப்பேற்றவர். திரு. மொரார்ஜி தேசாயின் அமைச்சரவையில் முக்கிய இடம் இவருக்குத்தான். 1979 - இல் ஜனதா உடைபட்ட போது, இவர் பிரதமர் பொறுப்பேற்றார். எனினும் லோக் சபை உறுப்பினர்களில் பெரும்பான்மையோரின் ஆதரவு தனக்கு இருக்காது என்பதை உணர்ந்த போது, சபையைக் கூட்டாமலேயே அதைக் கலைத்துவிட்டுத் தேர்தல் நடத்துமாறு, அப்போதைய ஜனாதிபதி திரு. சஞ்சீவி ரெட்டிக்கு ஆலோசனை கூறிவிட்டார். தேர்தல் முடியும் வரை தொடர்ந்து பிரதமராக இருந்துவிட்டு 1980 — இல் பதவி விலகினார். தமது அணியினரைக் கொண்டு 'லோக் தள்' என்ற கட்சியைத் தொடங்கினார். 1987 மே 28 — ஆம் நாள், தாம் இறக்கும் வரையில் அக்கட்சியின் தலைவர் இவர்தான்.





திரு. ராஜீவ் காந்தி:

இவர் நமது நாட்டின் ஏழாவது பிரதமர். இந்திரா காந்தியின் மகன். நபரைக் கணக்கிட்டால் ஆறாவது. பிறப்பு 1944 ஆகஸ்ட் 20. முழுப் பெயர் ராஜீவ் ரத்னா காந்தி என்பது குடும்பப் பெயர். தந்தை ஃபெரோஸ் காந்தி.

1984 அக்டோபர் 31 — ஆம் நாள் இந்திரா சுடப்பட்டு இறந்ததும் இவர் பிரதமரானார். உடனே லோக் சபையைக் கலைத்துவிட்டுப் பொதுத்தேர்தலுக்கு உத்தரவிட்டார்., அதில், இவருக்குப் பெருவெற்றி கிட்டியது. முன்பு நேருஜிக்கு இருந்ததைவிட அதிக ஆதர்வு இருந்தது, அவருடைய பேரனான இவருக்கு. இதுவரை இருந்த பிரதமர்களில் வயது குறைந்தவர் இவரே! இவர் பதவி ஏற்கும் போது திரு. ஜைல்சிங் ஜனாதிபதியாக இருந்தார். தற்போது திரு. ஆர். வெங்கட்டராமன் உள்ளார்.

இவர் நல்ல வசீகரத் தோற்றமும் சுறுசுறுப்பும் மிக்க இளைஞர். பிரதம

ராவதற்கு முன்பு விமானம் ஓட்டியாக இருந்தார். கி. பி. 2000—த்தில் தொடங்கவுள்ள 21—ஆம் நூற்றுண்டில், நமது நாடு தலைசிறந்த தொழில் நுட்ப அறிவுமிக்க நாடாக அதில் அடியெடுத்து வைக்க வேண்டும் என்பதைத்தமது குறிக்கோளாகக்கொண்டு, அதற்கு ஏற்பப் பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்.

இவரது திட்டங்கள் வெற்றி பெறட்டும். அதற்கு நாமும் சேர்ந்து பாடுபடுவோம். இவரது பதவிக் காலம் மிகுந்த சிக்கல் நிறைந்த ஒன்றாக இருந்து வருகிறது. சில பிரச்னைகளைத் தீர்த்துள்ளார். எனினும், அவை முழுமையான அளவு அமைதியைத் தரவில்லை. உதாரணத்துக்குப் பஞ்சாப் பிரச்னை மற்றும் அஸ்ஸாம் பிரச்னைகளைக் கூறலாம். இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, அந்நாட்டு வன்முறைகளை ஒடுக்கவும், நமது தமிழ் மக்கள் அங்கு நிம்மதியாக வாழவும் வழி செய்து வருகிறார். உள்நாட்டிலும் பல்வேறு பிரச்னைகள் தலைதூக்கியுள்ளன. அவற்றை எல்லாம் தீரத்துடன் எதிர் நோக்கித் திடமுடன் வெற்றி காண முயன்று வருகிறார்.

விமர்சனப் போட்டி முடிவு

சென்ற மார்ச் மாத இதழில் 'விமர்சனப் போட்டி' ஒன்றை அறிவித்திருந்தோம்.

''1987 ஜனவரி முதல் டிசம்பர் 12 'கோகுலம்' இதழ்களிலும் வெளிவந்த கதைகளில் உங்களுக்கு மிகவும் பிடித்த கதை எது? எந்த எந்தக் காரணங்களால் அது உங்களுக்குப் பிடித்திருக்கிறது என்று கருதுகிறீர்கள்? அந்தக் கதையை விமர்சனம் செய்து முழுத்தாளில் ஒருபக்கம் வரும்படி எழுதி அனுப்புங்கள்.''

என்று அறிவித்திருந்தோம்.

இப்போட்டிக்கு மொத்தம் வந்த விமர்சனங்கள்: 647.

அவற்றில் கீழ்க்கண்ட கதைகளைச் சிறந்த முறையில் விமர்சனம் செய்து எழுதிய இருவருக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

முதற் பரிசு ரூ. 50/—.

கதைப் பெயர்: பேரளம் புகழ்மதி எழுதிய 'இன்னும் காந்தி இருக்கின்றார்;' பரிசு பெறுபவர்: க. ஸ்ரீராம்.

C – 19, பிரும்மபுத்திரா சாலை,
வட்டம் — 3,
நெய்வேலி புதுநகர் — 607 801.

இரண்டாம் பரிசு ரூ. 25/—.

கதைப் பெயர்: விர. வசந்தன் எழுதிய 'மாதவன் மனம் மாறினான்' பரிசு பெறுபவர்: எஸ். ஜெயஸ்ரீ,

C – 3, — 26 — F, கைலாசபுரம்,
திருச்சி — 14.

போட்டியில் பரிசுபெற்ற இருவருக்கும் பாராட்டுக்கள். போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

— ஆசிரியர்.

கொடியும் மனதும்

— கூத்தபிரான் —

2

மாடியில் காந்தித் தாத்தா படத்தின் கீழ் கவலையோடிருந்த பாரததேவியிடம், ''என்ன நடந்தது?'' என்று மாமா கேட்டதும்,

''மணிக்கொடி மாமா, நான் ஆசையா தேசியக் கொடி செய்து பள்ளிக்கூடத்துக்கு எடுத்துக்கிட்டுப் போயி, என் கூடப் படிக்கிற கிச்சடு, சிக்குடு, அப்புறம் விது, மது எல்லோருக்கும் கொடுத்தேன். முதல்லே வாங்கிக்கிட்டாங்க. அப்புறம் நான் அந்தக் கண்டிஷனைச் சொன்னேன்.''

''என்ன கண்டிஷன்?''

''என்ன மாமா. அதுக்குள்ளே நீங்க கூட மறந்திட்டீங்க? நான் கொடுக்கிற தேசியக் கொடியைப் பத்திரமா வெச்சிக்கணும். பாதுகாக்கணும். தவறினவங்களோடு நான் பேசவே மாட்டேன்னு சொன்னதுதான் தாமதம், வாங்கிக்கிட்ட கொடியைத் திருப்பித் தந்துட்டாங்க. ஏன் மாமா?''

''பாரத தேவி! உன் கூடப் பேசணும், பழகணும்ங்கிறதைத்தான் அவங்க ரொம்ப விரும்புறாங்கன்னு அர்த்தம்.''

''அதை யாரு மாமா கேட்டா. நம்ம தேசியக் கொடியைப் பத்திரமா வெச்சுக்கணும்னு நினைக்கலியே.''

''அதையேன் அப்படி எடுத்துக்கறே? நினைக்கறே?''

''அப்படித்தான் நினைப்பேன். என் மேலே உண்மையான பிரியமிருந்தா, நான் வரைஞ்ச கொடியை நிச்சயம் மதிச்சிருப்பாங்க.''

''இப்ப என்ன அதனாலே? இதோ பாரும்மா, உன்னை அவங்க மதிக்கிறாங்க. நீ தேசியக் கொடியை மதிக்கிறே. எல்லாம் ஒண்ணுதானே?''

''இல்லே. நான் ஒத்துக்க மாட்டேன். அவங்க தேசப் பற்றே இல்லாதவங்க. கொடியைக் கொடு. பத்திரமா வெச்சுக்கறேன்னு சொல்லலியே. அவ்வளவு அலட்சியம். அதனாலே அந்தக் கிச்சிடு, சிக்குடு, விது, மது இவங்க எல்லாம் என்னோட எதிரி.''

''அப்படியெல்லாம் பேசக் கூடாது.''

''அப்படித்தான் பேசுவேன். அவங்க முகத்திலே விழிக்க மாட்டேன்; பேச மாட்டேன்; பக்கத்திலே உட்கார மாட்டேன்; கண்ணால் கூடப் பார்க்க மாட்டேன்; நான் சொன்னால் சொன்னதுதான்.''


''அது போகட்டும். போய் விளையாடிட்டு வா.''

''வேண்டாம் மாமா.''

''ஏன் வேண்டாம்?''

''அப்படி நான் விளையாடப் போனாலும், அந்த சிக்குடு, கிச்சுடு, விது, மதுவோடதான் விளையாடியாகணும். அதுக்குப் பதிலா நான் தனியாவே விளையாடிக்கிறேன். அது சரி, மணிக்கொடி மாமா! நான் உங்களுக்குக் கொடுத்த கொடி எங்கே? காட்டுங்க.''

''பாரத தேவி, சொல்ல மறந்திட்டேனே. நீ எனக்குக் கொடுத்த கொடியை என் ஆபீஸ் நண்பர்கள் கிட்டேயும் காட்டி, உன்னைப் பத்தியும் சொன்னேன். அவங்க எல்லோரும் உன்னைப் பார்க்கணும்னு ஆசைப் படறாங்க'' என்று சொல்லியவாறே நான், தேவி கொடுத்த கொடியைத்



தேட ஆரம்பிச்சேன். அதைக் கவனிச்ச பாரத தேவி,

"என்ன மாமா தேடறீங்க? மாமா, நான் கொடுத்த கொடியைக் காட்டுங்களேன். பார்க்கணும்."

"அது வந்தும்மா, நான் ஆபீஸிலேயே பத்திரமா என் மேஜை டிராயர்லே வெச்சிருக்கேன்."

"நாளைக்கு வரும்போது நிச்சயமாகக் கொண்டு வந்து காட்டணும், என்ன?"

"அதுக்கென்ன! மேஜை டிராயரைத் திறந்தவுடனே கண்ணிலே படற மாதிரி வெச்சிருக்கேன். போனவுடனே எடுத்துக்கலாம்."

"அப்போ வாங்க. இப்பவே போயி ஆபீஸிலேருந்து எடுத்துக்கிட்டு வரலாம்."

"என்ன தேவி, இப்பத்தானே நான் ஆபீஸிலேருந்து வந்தேன்? மறுபடியும் ஆபீஸுக்கு ஏன் போகணும்? நாளைக்கு வரும்போது நான் கட்டாயம் கொண்டு வந்து காட்டறேன்."

"சரி, மாமா! கட்டாயம் கொண்டு வந்து காட்டணும்."

மிகுந்த நம்பிக்கையோடு கையில் ஸ்கிப்பிங் கயிற்றை எடுத்துக் கொண்டு, தோட்டத்துத் துளசி மாடம் பக்கம் சென்றாள். அது சில சமயம் அவள் தனிமையாக விளையாடும் இடம். அவள் போன பிறகு, நான் ஆபீஸுக்குக் கொண்டு போகும் பெட்டி, கைப்பை எல்லாவற்றிலும் பாரத தேவி என்னிடம் கொடுத்த தேசியக்கொடியைத்தேடத்தொடங்கினேன். காரணம், ஆபீஸ்மேஜைடிராயரில் வைக்கவில்லை என்பது எனக்குத் தானே தெரியும்? இப்போது எனக்குத் தான் போதாத காலம் ஆரம்பித்து விட்டது! அன்றையப் பொழுது, மறுநாள் நான் மாட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவசர அவசரமாகக் கழிந்து விட்டது.

பொழுது விடிந்ததும், விடியாததுமாக பாரத தேவி என்னிடம் வந்து,

"மணிக்கொடி மாமா, மறக்காமே ஆபீஸ்லேருந்து திரும்பி வரும்போது நான் வரைஞ்சு கொடுத்த கொடியைக் கொண்டு வரணும். என்ன?"

"நிச்சயமாக் கொண்டு வருவேன்."

"மாமா, என் கண்டிஷன். அதை மறந்துடாதீங்க."

"அதைத்தாம்மா நான் ராத்திரிப் பூரா நினைச்சுக்கிட்டு இருந்தேன். தூக்கமே வரல்லே."

"கொடியோடு வாங்க."


"கட்டாயம் வர்றேம்மா."

"கொடியோட வரலேன்னு...?" என்று இழுத்தாள், பாரத தேவி.

நாலு அடி கொடுத்தால் கூடப் பரவாயில்லை. என்னோடு பேசாமல் இருந்து, என்னை உயிரோடே கொன்னுடுவாளே! அதைத்தான் என்னாலே கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியல்லே. ஆபீஸுக்கு நான் புறப்படும் முன்பாகவே பாரத தேவி பள்ளிக்குப் போய்விட்டாள். போகும் போது கூட,

"மாமா, சாயந்திரம் வரும் போது தேசியக் கொடியோடதான் வரணும். அதுவும் நான் வரைஞ்ச தேசியக் கொடியோடு வரணும். புரிஞ்சுதா?" என்று கூறி, என் கையைப் பிடித்து நறுக்கென்று கிள்ளிவிட்டுப் போய்விட்டாள். இதிலேர்ந்து எனக்கு என்ன புரிஞ்சுது? கொடியில்லாமல் வீட்டுப் பக்கம் வரக்கூடாதுன்னு புரிஞ்சுது.

ஆபீஸுக்குப் புறப்பட்டேன். என்னிக்கும் வழியனுப்ப வராத என்



மனைவி இன்னிக்குன்னு முக்கியமா வழியனுப்ப வந்தவ, ''ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க? என்ன நடந்தது? நீங்க நேத்து சாயந்திரத்திலேருந்து சரியாவே இல்லை'' என்று சொன்னாள். ஆனால், இன்று சாயந்திரத்திலேருந்து நடக்கப்போறது அவளுக்குப் புரியறதுக்கு நியாயமே இல்லை. ஒரே வார்த்தையிலே 'ஒண்ணுமில்லேன்னு சொல்லிவிட்டு ஆபீஸை நோக்கிப் புறப்பட்டேன்.

இரவு மணி ஏழாச்சு, எட்டாச்சு. என்ன, இன்னும் மணிக்கொடி மாமாவைக் காணோம்னு பாரத தேவி கவலைப்பட்டுக் கொண்டு, வீட்டு வாசற் படியிலேயே காத்துக் கொண்டு இருந்தாள். அன்றைக்கு அவள் வீட்டுப் பாடம் கூடச் செய்யவில்லை.

மணி ஒன்பதும் ஆச்சு; பத்துமாச்சு. ''மாமா, வர்றபடி வரட்டும். நீ வந்து சாப்பிட்டுட்டுப் படுத்துத் தூங்கு'' என்று மாமி சொன்னாள். இஷ்டமே இல்லாமல் வீட்டின் உள்ளே வந்து கதவை நன்றாகத் தாளிட்டுவிட்டு, படுத்துத் தூங்கப் போனாள். நன்றாகத் தூங்கியே விட்டாள்.

நடுநிசி நேரம். வீட்டுக் கதவை யாரோ தட்டும் சப்தம். மணிக்கொடி மாமாவின் மனைவி கதவைத் திறக்கப் போனாள். திடீர் என்று எழுந்த பாரததேவி, ''மாமி! நான் போய் மாம்மாவுக்குக் கதவைத் திறக்கறேன். நீங்க இருங்க'' என்று சொல்லியபடி, நடு ஹாலில் லைட்டைப் போட்டுவிட்டு, வீட்டு வாசல் வராந்தா லைட்டையும் போட்டுவிட்டுக் கதவைத் திறந்தாள். வாசலில் யாரையும் காணவில்லை!

சித்திரப் புதிர்: 28

விடை:

1. பர்மா,
2. ராணி
3. கிரீக்
4. பேனா, கத்தரிக்கோல், சீப்பு, ஸ்பூன், பென்சில், மணி, பாட், கத்தி, ரப்பர் ஸ்டாம்ப்.
5. கனடா.

''மணிக்கொடி மாமா, மாமா, மாமா'' என்று கூப்பிட்டுப் பார்த்தாள். 'என்ன, யாரையும் காணோம்! மாமா ஏன் வரல்லே?' என்று சொல்லியவாறே கதவைத் தாளிட்டுவிட்டு மறுபடியும் வந்து படுத்தாள் பாரததேவி. அரை மணி நேரம் கழித்துக் கதவு மீண்டும் தட்டப்பட்டது. இம்முறை பாரத தேவி போய்க் கதவைத் திறக்கவில்லை. பாவம், குழந்தை எவ்வளவு நேரம்தான் விழித்துக் காத்திருக்க முடியும்? மாமி போய்க் கதவைத் திறந்தாள்.

''நான்தான், குழந்தை தூங்கிட்டாளா? முதல்லேயும் நான்தான் கதவைத் தட்டினேன். பாரத தேவி வந்து கதவைத் திறக்கப் போறான்னு நினைச்சவுடனே... அவளுக்குப் பதில் சொல்லணுமேன்னு பயந்து ஒளிஞ்சிக்கிட்டேன்.''

''அப்படி என்ன விஷயம்? நீங்க ஏன் பயப்படணும்?''

''குழந்தை வரைஞ்சு கொடுத்த தேசியக் கொடியைத் தொலைச்சுட்டேன்! இதைச் சொன்னால், பாரத தேவி என் கூடப் பேச மாட்டா. என் எதிரிலே கூட நிற்க மாட்டா. என்னைப் பார்க்க மாட்டாளேன்னு நினைக்கும் போது வீட்டுக்கே வரப் பிடிக்கல்லே.''

''சரிதான் போங்க! இவ பேசாட்டி என்ன, குறைஞ்சா போயிடுவீங்க? விடுவீங்களா?'' என்று என் மனைவி சொன்ன போது,

''அது அப்படியில்லே. நம்ம குடும்பம், பரம்பரை பரம்பரையா தேச பக்திக்கு எடுத்துக்காட்டா இருக்கிற குடும்பம். இதிலே பாரத தேவி மாதிரி ஒரு குழந்தையிருக்கிறது நமக்குத் தானே பெருமை? நாம சந்தோஷப் படணும். ம்... பார்ப்போம்.''

மெதுவாக, கால் செருப்பைக் கையில் எடுத்துக் கொண்டு, மாடியிலே போய் சப்தமில்லாமல் படுத்துத் தூங்கினேன்.

அதிகாலையிலே யாரோ என்னை உலுக்கி எழுப்புவது போல் இருந்தது. கண் விழித்துப் பார்த்தால்.....?

''என்ன மாமா, எப்போ வந்தீங்க? உங்களுக்காக நான் ராத்திரி எவ்வளவு நேரம் காத்துக்கிட்டு இருந்தேன், தெரியுமா?''

''எனக்குத் தெரியாதா, என்ன?''

''என்ன மாமா, நான் கொடுத்த கொடியைக் கொடுங்க பார்க்கலாம்.''

''அது வந்தும்மா. நான் ஆபீஸுக்கே நேற்றுப் போகல்லே. முக்கியமான வேலையாய்ப் பக்கத்தூர் வரைக்கும் போய்விட்டு வந்தேன். அதுதான் லேட்டாப் போச்சு.''

''எனக்கு இன்னிக்கு ஸ்கூல் லீவ் மாமா.''

''அப்படியா, போய் நல்லா விளையாடு.''

''நான் இன்னைக்கு உங்ககூட ஆபீஸுக்கு வரப் போறேன். உங்க மேஜை டிராயர்லேருந்து நான் போட்ட கொடியை எடுத்துக் காட்டப் போறீங்க, என்ன?''

''ஏன், நான் சாயந்திரம் வரும் போது கொண்டு வர்றேனே?''


''எதுக்கு மாமா, உங்களுக்குச் சிரமம்? நானே உங்க ஆபீஸுக்குவந்து பார்க்கிறேன். லீவுதானே? வாங்க மாமா, போகலாம்.''


''அப்படியா! சரி வா?''

பாரத தேவியும் என் கூட ஆபீஸுக்குப் புறப்பட்டாள். நான் வகையாக மாட்டிக் கொண்டேன். ஆபீஸுக்கு வந்ததும் நான் குழந்தையை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தினேன். அவளுக்கு ஒரே சந்தோஷம். அந்தச் சமயம் பார்த்து, என்கிட்டே வேலை பார்க்கிற ஒருத்தர், ''என்ன ஸார், நேத்திக்குப் பூரா ஆபீஸிலே எதையோ தேடினேளே... அது கிடைச்சுதா?'' — என்றுரே பார்க்கலாம்.

''எங்க மாமா நேத்திக்குப் பூரா ஆபீஸிலே இருந்தாரா? என்ன சொல்றீங்க? இருக்காதே. பக்கத்து ஊருக்கில்லே போயிருந்தாரு. என்ன மாமா, இவர் இப்படிச் சொல்றார்?''

(அடுத்த இதழில் முடியும்)





டாக்டர். கு. கணேசன்

விஷக்கடிகளுக்கு முதல் உதவி

அன்புக் குழந்தைகளே!

'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்ற பழமொழி உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதே மாதிரி, உங்களில் பலருக்கும் பாம்பு, தேள், பூரான், நட்டுவாய்க்காலி போன்ற உயிர்ப் பிராணிகளைப் பார்க்கவே பயமாக இருக்கும் இல்லையா?

அதற்குக் காரணம் என்ன?

பாம்பு, தேள், பூரான், நட்டுவாய்க்காலி போன்றவை 'விஷப் பிராணிகள்' என்று நீங்கள் தெரிந்து வைத்திருப்பதால், எங்கே அவை உங்களைக் கடித்து விட்டால், உயிருக்கு ஆபத்து வந்து விடுமோ என்ற பயம் உங்களை ஆட்கொண்டு விடுகிறது.

அந்த பயம் இனிமேல் தேவையில்லை.

விஷப்பிராணிகள் நம்மைக் கடிக்கும் போது, நம் உடம்புக்குப் பாதிப்பும், உயிருக்கு ஆபத்தும் வருவது ஒரு பக்கம் உண்மையானாலும், விஷக்கடிகளின் போது அச்சப்படாமல், மன தைரியத்துடன் சில எளிய முதலுதவி முறைகளை உடனுக்குடன் செய்துவிட்டால், வரக் கூடிய பாதிப்புக்களையும் ஆபத்துக்களையும் நிச்சயம் தவிர்த்து விடலாம்.

அதில் சந்தேகமேயில்லை!

அதனால்தான் இக்கட்டுரையில் விஷக் கடிகளைப் பற்றியும், விஷக் கடிகளுக்கு நாம் செய்ய வேண்டிய முதலுதவிகள் பற்றியும் விளக்கமாகச் சொல்லலாம் என்று வந்திருக்கிறேன்.

சொல்லட்டுமா?

முதலில் தேள்கடி: தேள்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். வீட்டின் கூரை மீதும், அழுக்கு நிறைந்த மூலை முடுக்குகளிலும், குப்பைகளிலும், செங்கற்களுக்கு மத்தியிலும், தென்னை, பனை போன்ற மரங்களிலும், வேறு சில மரங்களின் பொந்துகளிலும் தேள்கள் காணப்படலாம். தேள்களில் கருந்தேள், செந்தேள், மரத்தேள், வயல் தேள் எனப் பல வகைகள் இருந்தாலும், எல்லாவற்றுக்குமே விஷம் உண்டு. நமக்கே தெரியாமல் நம் கையோ, காலோ அல்லது

உடம்பின் ஏதேனும் ஒரு பகுதியோ தேளின் மீது பட்டு விட்டால் போதும், உடனே தேள் நம்மைக் கொட்டி விடும்.

தேள் கொட்டிய இடத்தில் முதலில் ஓர் ஊசியால் குத்தியது போன்ற உணர்ச்சி உண்டாகும். பிறகு, அதே இடத்தில் கடுமையான வலியும், கடு கடுப்பும் உண்டாகும். நேரம் அதிக மாக அதிகமாக வலியும் கடுகடுப்பும் தாங்க முடியாத அளவிற்கு அதிகரித் துச் செல்லும். தேளின் விஷம் உடம் புக்குள் பரவினால் அக்குள், தொடை இடுக்குகளில் நெறி கட்டும். சிறுவர்க ளுக்கு வாந்தியும் மயக்கமும் ஏற்படும்.

பொதுவாக, பத்து வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கும் பெரியவர் களுக்கும் தேள் கடியினால் அதிகமான பாதிப்பு ஏற்படுவதில்லை. அதே சமயம் குழந்தைகளுக்குத் தேள் கடித்து விட்டால் உயிருக்கு ஆபத்து வரலாம்.

தேள் கடிக்கு நான் சொல்லும் எளிய முதலுதவியை உடனுக்குடன் செய்து விட்டால் விஷம் உடம்புக்குள் ப்ரவு வதைத் தடுப்பதோடு, தேள் கடியால் உண்டாகும் வேதனையின் கடுமையை யும் குறைத்து விடலாம்.

இதோ அந்த முதலுதவி —

தேள் கொட்டிய இடத்திற்கு சுமார் 15 செ. மீ. மேலே நூல் கயிற்றால் இறுக்கிக் கட்டுப் போட வேண்டும். இதனால் தேளின் விஷம் உடம்புக்குள் பரவுவதைத் தவிர்த்து விடலாம்.



அதற்குப் பிறகு தேள் கொட்டிய இடத் தில் தொடர்ந்து அரை மணி நேரத் திற்கு ஐஸ் கட்டியால் ஒற்றி எடுக்க வேண்டும். ஐஸ் கிடைக்காவிட்டால் குளிர்ந்த நீரில் தேள் கடித்த பாகத்தை அமுக்கிப் பிடிக்கலாம். அல்லது, குளிர்ந்த நீரில் நனைத்த துணியால் தேள் கொட்டிய இடத்தைச் சுற்றி விடலாம். இதன் மூலம் தேள் கடியி னால் உண்டாகும் வேதனை குறை யும். தேளின் கொடுக்கு தோலில் புகுந்திருந்தால், வலி அதிகமாக இருக் கும். எனவே, தேளின் கொடுக்கை வெளியே எடுத்து விடுவது நல்லது.

இந்த முதலுதவி முறைகளோடு உங்கள் வேலை முடிந்து விடவில்லை. எதற்கும் மருத்துவரின் ஆலோசனை யின் பேரில் வேறு சில வலி நிவா ரணி மருந்துகளையும் உட்கொண் டால்தான் தேள் கடியின் பாதிப்பு முழு மையாகக் குறையும்.

அடுத்ததாக நட்டுவாய்க்காலி: இதுவும் தேளின் இனத்தைச் சேர்ந் ததுதான். ஆனால், தேளைவிடப் பல மடங்கு பெரிதாக இருக்கும். பார்ப்ப தற்குக் கன்னங்கரேலென்று இருக்கும். தேளைவிடப் பலமடங்கு விஷமுடைய தாக இருக்கும்.

நட்டுவாய்க்காலி கடித்துவிட்டால், கடித்த இடத்தில் மிகவும் கடுமையான வலியும் கடுகடுப்பும் இருக்கும். விஷம் உடம்புக்குள் மிக வேகமாகப் பரவும். இதனால் குழந்தைகளுக்கும் சரி, பெரிய வர்களுக்கும் சரி, மயக்கம், வாந்தி உண்டாகும். வாயில் நுரை தள்ளும். உமிழ்நீர் அதிகமாகச் சுரக்கும். அடி வயிற்றில் வலி உண்டாகும். கடித்த இடத்தில் வீக்கம் உண்டாகும்.

குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் நட்டுவாய்க்காலியின் விஷம் உயிருக்கு ஆபத்து தரக்கூடியது. எனவே, தேளுக் குச் செய்த மாதிரியே உடனடியாக முதலுதவி செய்து விட்டு மருத்துவ ரிடம் அழைத்துச் சென்று ஆலோ சனை பெற்றுக் கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக பூரான்: விஷப்பிரா ணிகளில் பூரானும் ஒன்று. நீளவசத் தில் நீண்டு வளர்ந்திருக்கும். பக்க வாட்டில் எண்ணற்ற கால்கள் இருக் கும்.

பொதுவாக பூரான் கடித்தால் வலி தெரிவதில்லை. மாறாக சருமத்தில் தடிப்புக்கள் உண்டாகும். அரிப்பு ஏற்படும். விஷம் உடம்புக்குள் பரவினாலும் உயிருக்கு ஆபத்தில்லை.

மருத்துவரின் ஆலோசனைக்குப் பின், 'ஆண்டிஹிஸ்டமின்' மாத்திரைகளைச் சாப்பிட்டால் அரிப்பும் தடிப்புகளும் மறைந்து போகும்.

நான்காவதாக பாம்புக் கடி: விஷக் கடிகளில் பாம்புக் கடியால் இறப்பவர்கள்தான் அதிகம். பாம்புகளில் நாகப் பாம்பு, கட்டு விரியன், கண்ணாடிப் பாம்பு, கடல் பாம்பு, பச்சைப் பாம்பு, புடையன் பாம்பு என்று எண்ணற்ற வகைகள் உள்ளன. பாம்பின் விஷம் மனித உயிருக்கு உடனே ஆபத்தை விளைவிக்கக் கூடியது.

பாம்பு கடித்து விட்டால் கடித்த இடத்தில் மிகவும் கடுமையான வலி இருக்கும். வாந்தி, மயக்கம் உடனே உண்டாகும். உடல் 'ஜில்'லென்று குளிர்ந்து போகும். கடிபட்ட இடத்திற்குக் கீழே மதமதப்பு உண்டாகும். தலைவலி இருக்கும். தொண்டை அடைக்கும். மூச்சு விடுவதில் சிரமம் இருக்கும். பாம்புக் கடிக்கு உடனே மருத்துவம் பார்க்காவிட்டால் மரணம் நிச்சயம்.

எனவே, பாம்புக் கடி பட்டவருக்கு மருத்துவ சிகிச்சை கிடைக்கும் வரைக்கும் நான் சொல்லும் முதலுதவி முறைகளை மேற்கொண்டால், பாம்பின் விஷம் உடம்பில் பரவுவதைத் தடுக்கலாம்.

எப்படி?

பாம்பு கடித்த இடத்திற்குச் சற்று மேலே கயிற்றால் நன்கு இறுக்கிக் கட்டி விட வேண்டும். கட்டை 15 நிமிஷங்களுக்கு ஒருமுறை சுமார் ஒரு நிமிட நேரத்திற்குத் தளர்த்தி விட்டு மீண்டும் இறுக்கிக் கட்டிவிட வேண்டும். இதனால் விஷம் உடம்புக்குள் பரவுவதைத் தடுத்து விடுவதோடல்லாமல், கடித்த பாகத்திற்கு இரத்த ஓட்டமும் பாதிக்கப்படாமல் இருக்கும்.

அடுத்ததாக (துரு இல்லாத) சுத்தமான கத்தியாலோ, அல்லது பிளேடாலோ பாம்பு கடித்த இடத்தைக் கீறி இரத்தத்தை வெளியேற்றலாம். இதன் மூலம் அங்கு தேங்கிக் கிடக்கும் விஷம்

தண்ணீரில் மூழ்குபவரைக் காப்பாற்ற...

தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருப்பவர்களைக் காப்பாற்ற நீங்கள் ஒரு நீச்சல் நிபுணராக இருக்க வேண்டிய அவசியமில்லை.

தண்ணீரில் மூழ்குபவருக்கு அருகில் வரும்படி மிதக்கக் கூடிய பொருள்களான மரக்கட்டை, டயர் போன்றவற்றை எறிய வேண்டும்.



நீளமான கயிற்றின் ஒரு முனையை நாம் பிடித்துக் கொண்டு அல்லது அருகில் மரம் இருந்தால், அதன் அடியில் கட்டிவிட்டு, மறு முனையை அவரிடம் எறிந்து பிடித்துக் கொள்ளச் செய்து இழுத்துக் காப்பாற்றலாம். மூழ்கிக் கொண்டிருப்பவர்கள் அருகில் இருந்தால், சட்டை அல்லது நீளத் துணியின் ஒரு முனையை அவரிடம் கொடுத்து, மறுமுனையை நாம் பிடித்துக் காப்பாற்றலாம். மூழ்கிக் கொண்டிருப்பவரின் மிக அருகில் செல்வது அபாயமாகும். அவர் உங்களையும் தண்ணீருக்குள் இழுத்துக் கொள்வார். அதற்குத் தண்ணீரில் மூழ்குபவரைக் காப்பாற்றத் தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும்.

— எஸ். விஜயா சீனிவாசன்.

வெளியேறிவிட வாய்ப்பு உண்டு.

வாயில் புண்ணில்லாத ஒருவர் பாம்பு கடித்த இடத்தில் தன் வாயை வைத்து நன்றாக உறிஞ்சி இரத்தத்தை வெளியே எடுத்துத் துப்பிவிடலாம். இதுவும் பயன்தரக் கூடிய ஒரு முதலுதவி முறை.

அடுத்ததாக, பாம்பு கடித்த பாகத்தைத் தொங்கப் போட வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் அப்பாகத்தை உயரே தூக்கக் கூடாது. அது மட்டுமல்லாமல் கடிபட்ட பாகத்தை, அசையாமல் வைத்துக் கொள்ள வேண்டும். அடிபட்டவர் அங்குமிங்கும் ஓடவும் கூடாது.

இங்கே ஒரு விஷயத்தைத் தெளிவு படுத்த வேண்டும்., அதாவது பாம்பின் விஷத்தால் இறப்பவர்களை விட, பாம்பு கடித்து விட்டதே என்ற பயத்தால் இறப்பவர்களே எண்ணிக்கையில் அதிகம். எனவே, அருகிலிருப்பவர்கள் பாம்பு கடிபட்டவருக்குத் தைரியம் சொல்லி, கூடிய விரைவில் முறையான மருத்துவச் சிகிச்சை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

கடைசியாக குளவி: குளவி கொட்டினால், கொட்டிய இடத்தில் தேள் கொட்டியது போல் இருக்கும். ஆனால், விஷம் ஏறாது. கொட்டிய இடம் வீங்கிப் போகும். சில மணி நேரங்களுக்கு வீக்கமும் வலியும் இருக்கும்.

வலியைக் குறைக்க தேள் கடிக்கு வைத்த மாதிரி குளவிக் கடிக்கும் ஐஸ் வைத்து ஒற்றி எடுக்கலாம். வீக்கத்தின் மேல் தேங்காய் எண்ணெயைத் தடவலாம்.

இம்மாதிரி முதலுதவி முறைகளை உடனுக்குடன் செய்து விட்டால் விஷக் கடிகளின் கடுமையைத் தளர்த்தி, வரக் கூடிய ஆபத்தையும் தவிர்த்து விடலாம் என்பதில் சந்தேகமேயில்லை.


எனவே, குழந்தைகளே! மேற்சொன்ன முதலுதவி முறைகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். விஷக்கடிகளுக்கு நீங்கள் விரைந்து முதலுதவி செய்யுங்கள். அதனால் கிடைக்கும் பலன் நிச்சயம் மன நிறைவைத் தரும்!

சரியான எடை!

ரொட்டிக் கடைக்காரர் ஒருவர் வழக்கமாக தன் கடைப் பையனைப் பால்காரரிடம் அனுப்பி அவரிடம் வெண்ணெய் வாங்குவார். ஒருநாள் ரொட்டிக் கடைக்காரர் பால் காரரை வரவழைத்து, அவர் முன்னால், கடைப் பையன் வாங்கி வந்த வெண்ணெயை எடை போட்டுக் காட்டினார். ஒரு கிலோவில் 25 கிராம் வெண்ணெய் குறைந்திருந்தது.

"பார்த்தாயா, இத்தனை நாட்களாக நீ என்னை ஏமாற்றி வருகிறாய்!" என்றார் ரொட்டிக் கடைக்காரர்.

"ஐயா, நான் ஒன்றும் உங்களை ஏமாற்றவில்லை. வழக்கமாக உங்களுக்கு வெண்ணெய் கொடுக்கும் போது, நான் எந்த அளவுகளையும் பயன்படுத்துவதில்லை. உங்கள் கடையில் நான் வழக்கமாக வாங்கும் ஒரு



கிலோ ரொட்டியை வைத்து, அதற்குச் சமமான எடையில்தானே வெண்ணெய் தருகிறேன்" என்றார், பால்காரர். அதைக் கேட்ட ரொட்டிக் கடைக்காரர் வாயடைத்துப் போய் நின்றார்.

— எம். எஸ். சுரேஷ் (7005),
சென்னை — 7.

கோயில் காணிக்கை

நாகப்பா நாச்சியப்பன்

"ஆத்தா! ஆத்தா!" என்று கூப்பிட்டுக் கொண்டே தன் குடிசை வீட்டுக்குள் நுழைந்து, சுவரில் பள்ளிக் கூடத்துப் பையை மாட்டி வைத்து விட்டு, தோட்டத்திற்கு வந்து பாட்டியைத் தேடினான் வேலப்பன்.

ஆண்டி வேளாருக்கும், குப்பாத்தாளுக்கும் ஒரே பேரன் வேலப்பன். வேலப்பனின் தாய் எட்டு மாதக் கர்ப்பிணியாக இருக்கும் போது, இராணுவத்தில் சேர்ந்திருந்த அவன் தகப்பனார் நாட்டுக்காக உயிர் துறந்தார். கணவனைப் பிரிந்த துக்கம் தாங்காமல், வேலப்பனைப் பெற்றெடுத்த ஆறாவது மாதமே வேலப்பனின் தாயும் காலமாகிவிட்டாள். அப்பா அம்மா இல்லாத வேலப்பனைக் கண்ணுங் கருத்துமாக அவனது தாத்தா ஆண்டி வேளாரும், பாட்டி குப்பாத்தாளும் வளர்த்து வந்தார்கள்.

தோட்டத்தின் மூலையில் தெருவிலிருந்து பொறுக்கிக் கொண்டு வந்த சாணத்தைத் தட்டி வைத்துக் கொண்டிருந்த குப்பாத்தா, பேரனைப் பார்த்து "என்னய்யா, இப்பத்தான் வர்றீரா?" என்று கேட்டுக்கொண்டே தன் வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

"இன்னிக்கு ஸ்கூல்லே செடிகளுக்கெல்லாம் தண்ணீர் ஊத்தச் சொல்லிட்டாங்க. அதான் இவ்வளவு நேரம் ஆயிடுச்சு. சரி, சரி, வா! ஆத்தா, இன்னைக்கு எனக்கு ரொம்பப் பசிக்குது" என்று ஆத்தாவின் அருகில் வந்து நின்று கொண்டு, அவளுடைய சாணக் கூடையைக் கையில் எடுத்துக் கொண்டான்.

"ஏன் ஆத்தா! அய்யாவை இன்னங் காணோம்? அவரோட செருப்பு மட்டும் இங்கே கெடக்குது?" என்று கேட்டான் வேலப்பன்.

"அவரு பானை, சட்டியெல்லாம் எடுத்துக்கிட்டு அய்யனார் கோயில் குதிரையெடுப்புக்காகக் கொண்டு போய்க் கொடுக்கப் போனாரு. இன்னும் வரக் காணோம். போறப்போ செருப்பு பிஞ்சு போச்சு, அதைப் போட்டுப்பிட்டு, பாவம், அவரு வேகாத வெயில்லே போயிருக்காரு. இன்னும் வரக் காணோம்" என்றாள் குப்பாத்தாள்.

"நாளைக்குக் கருக்கலோடே போனா என்ன? இன்னைக்கு ஏன் போகணும்?" என்றான் வேலப்பன்.

"கையிலே காலணாக் காசு கூட இல்லே, அதனாலே பானை சட்டியைக் கோயிலிலே கொண்டு கொடுத்திட்டு, அரிசி வாங்கிக்கிட்டு வர்றேன்னு போனாரு. அங்கே என்ன வேலையோ! இன்னும் வரக்காணோம். அது சரி, நீ என்ன இன்னைக்கு வந்ததும் வராததும் அய்யாவைத் தேடுறாய்?" என்றாள் குப்பாத்தாள்.

"அதை அய்யாகிட்டத்தான் சொல்லுவேன், உன்கிட்டே சொல்ல மாட்டேன்" என்று சொல்லி ஒரு நமட்டுச் சிரிப்புச் சிரித்தான் வேலப்பன்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, வேளார் வருவதை இருமல் சத்தத்தால் தெரிந்து கொண்ட வேலப்பன், "இதோ அய்யா வந்தாச்சு!" என்று கத்திக்கொண்டே, அவரை வரவேற்றான்.

"ஏன் அய்யா இவ்வளவு நேரம் ஆயிடுச்சு? உன்கிட்டே ஒண்ணு சொல்றதுக்காகத்தான் நான் பள்ளிக்கூடம் விட்டு வந்ததிலிருந்தே பார்த்துக்கிட்டே இருக்கேன். நீ வரக் காணோம்" என்றான்.

"கோயிலுக்குப்போனேன். அங்கே கொஞ்சம் நேரம் ஆயிடுச்சு. அப்படியே சந்தைக்குப் போய் அரிசி வாங்கிக்கிட்டு, போயிலைக்கட்டை

வாங்கிட்டுவந்தேன். இந்தா, உனக்குப் பொரி உருண்டை'' என்று சொல்லி இரண்டு பொரி உருண்டைகளை எடுத்து வேலப்பன் கையில் கொடுத்தார் வேளார்.

''அய்யா, உனக்கு ஒண்ணு தெரியுமா? நான் இவ்வளவு நேரமா ஆத்தாகிட்டே சொல்லவேயில்லே! நம்ம வீட்டுக் கோழிக்குஞ்சு இரண்டிலே முந்தியே ஒண்ணு செத்துப் போச்சுது. இன்னொரு கோழிக்குஞ்சு இன்னைக்கு நான் பள்ளிக்கூடத்திலிருந்து வர்றப்போ, நம்ப வீட்டுக் கூரை மேலே ஏறிக்கிணு கூவினிச்சு அய்யா! தெரியுமா உனக்கு?'' என்று தன் மகிழ்ச்சிப் பெருக்கில் கையில் இருந்த பொரி உருண்டையைக் கூட மறந்துவிட்டுக் கூறினான் வேலப்பன்.

''அட, அது கூவினிச்சா! எம் பிள்ளே! எப்பக் கூவினிச்சு? மத்தியானமா? சாயங்காலமா?'' என்று குப்பாத்தாளை நோக்கிக் கேட்டார் வேளார்.

''எனக்கு என்ன தெரியும், எப்பக் கூவுச்சுன்னு? உங்க ராசாதான் என்கிட்டே சொல்லமாட்டேன்னிட்டு, நீங்க வந்தவுடனே சொல்றாரு'' என்றாள் குப்பாத்தாள்.

''ஏண்டா, ஆத்தாகிட்டே சொல்லலே?'' என்று கேட்டார் வேளார்.

''ஆத்தாதான் கோழி கூவினிச்சுன்னா, அய்யனாருக்குப் பொங்கலவைக்கிறப்போ கோழியையும் அடிச்சுவைப்பேன்னு சொல்லிச்சில்லே, அதனால்தான். நான் ஆத்தாகிட்டே சொல்லவேயில்லே''

''சரி! கோழியை அடிக்க வேண்டாம், வேற என்ன பண்றது?'' என்றாள், குப்பாத்தாள்.


''நம்மளே வளர்ப்போம் அய்யா'' என்றான் வேலப்பன்.

''சரி, நம்மளே வளர்ப்போம், அது நல்லா வளர்ந்தபின்னே என்ன பண்றது?'' என்றார் வேளார்.

''ஆமா, அது வளர்ந்தபின்னே என்ன பண்றது?'' என்ற கேள்வியையே திருப்பி அய்யாவிடம் கேட்டான் வேலப்பன்.

''சரி, அந்தக் கோழியை அடிக்காமே, நல்லா வளர்த்து, அது இன்னும் கொஞ்சம் பெரிசானதும், அதைக் கொண்டுபோயி முருகன் கோயிலிலே விட்டுருவோம். அது அங்கேயே இருக்கும்'' என்றார் வேளார்.

அதுதான் சரியென்று பட்டது வேலப்பனுக்கு. உடனேயே எழுந்து அய்யா கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, ''எங்க அய்யா என்னைக்குமே நல்ல அய்யாதான்!'' என்று



கூறிக் கொண்டு, தன் கையிலிருந்த ஒரு பொரி உருண்டையை இரண்டாகப் பிய்த்து அய்யாவுக்கும், ஆத்தாவுக்கும், பாதி பாதி கொடுத்தான் வேலப்பன்.

''எங்களுக்கு எதுக்குடா? நீ சாப்பிடு'' என்று இருவரும் ஒரே குரலில் பேசினர்.,

''மூணு பேரும் சேர்ந்தே சாப்பிடுவோம் அய்யா'' என்று இருவர் வாயிலும் திணித்துவிட்டு, ஓர் உருண்டையை எடுத்துக் கொண்டு ஓடினான் வேலப்பன்.

பாசத்திற்காக ஏங்குகிற பிஞ்சு மனம், ஒரு சாதாரணப் பறவையின் மேல் வைத்திருக்கின்ற பாசத்தை இருவரும் மனத்தால் நினைத்து, கண்களால் அந்தப் பிஞ்சுக் குழந்தை ஓடுவதைப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

''என்னடா பண்றே இங்கே உட்கார்ந்துக்கிட்டு?'' என்று கேட்டுக் கொண்டே, புகையிலைக் கட்டையை வாயில் குதப்பிக்கொண்டு வந்தார் வேளார்.

''நீதானே அய்யா சொன்னே, அது பெரிசா வளர்ந்ததும், கொண்டு போய் விடுவோம்னு. அதுக்காகத்தான் அது திங்கிறதுக்குப் பொரி போடறேன்''

''வேல்லப்பா நீ ஒண்ணும் பொரி போட வேண்டாம். அதுவாகவே குப்பையைக் கிளறித் தின்னு, அது வாப் பெரிசாயிடும். வர்ற பங்குனி உத்திரத்திலேகொண்டுபோய்விட்டிடுவோம். நீ இப்பச் சாப்பிடு''

''அய்யா, அய்யா, இங்கே பாரேன். கூரை மேலே ஏறிடுச்சில்லே, இப்ப இறக்கையை அடிச்சுக்கிட்டே கூவும் பாரேன்'' என்று சேவல் கூவுவதைக் காட்டினான் வேலப்பன்.

''ஆமாடா, அது அப்படித்தான் இறக்கை ரெண்டையும் அடிச்சுக்கிட்டு, கொக்கரக்கோன்னு கூவும்'' என்றார் வேளார்.

இப்படியாக நாளும், பொழுதும் ஓடி ஓடி பங்குனி உத்திரத்தை எட்டிப் பிடித்தது., பங்குனி உத்திரத்தன்று காலையில் வெகு சீக்கிரமே எழுந்து அய்யா, ஆத்தாவுடன் வேலப்பனும்



குளித்து முடித்துவிட்டு, சேவலேக் குளிப்பாட்டி, கழுத்தில் மாலே கட்டி, பொட்டு வைத்துக் கையில் தூக்கிக் கொண்டான்.

''கையிலே தூக்கிக்காதேடா, தலே யிலே வைச்சுக்க, கோயிலுக்குப் போறப்போ, தலேயிலேதான் கொண்டு போகணும்'' என்று கூறி விட்டு வேலப்பனே அழைத்துக் கொண்டு, வேளார் முருகன் கோயி லுக்கு நடந்தார்.

''ஏன் ஆத்தா, குடைப் பிடிச்சக் குன்னு போவோமா? நம்ம கோழிக்கு வெயில் அடிக்குதே'' என்ருன் வேலப் பன்.

''அய்யய்யோ, குடையெல்லாம் பிடிக்கப் படாது. ஒண்ணும் சாப் பிடக் கூடாது. கோயிலில் கொண்டு போய் விட்டுட்டு வந்துதான் அப் புறம் எல்லாம் பண்ணணும்'' என்று வேளார் அவனுக்குக் கூறி, அவனேத் தோளேப் பிடித்து அழைத் துக் கொண்டு சென்ருர். குப்பாத் தாளும் பின்தொடர்ந்தே போனுள்.

''இன்னும் எவ்வளவோ தூரம் இருக்கு? காலெல்லாம் வலிக்குது'' என்ருன் வேலப்பன்

''அதெல்லாம் சொல்லப்படாது. அதோ மலே தெரியுதில்லே! இன்னும் கொஞ்சம் தூரம் தான்,'' என்று அன் போடு அணேத்துக் கொண்டு சென் ருர் வேளார்.

தான் அன்போடு வளர்த்த சேவல், முருகன் கோயிலில் போய் வாழப் போகிற மகிழ்ச்சியில் வெயிலேயும், நடையையும் பாராமல் விரைந்து கோயில்வந்துசேர்ந்தான்வேலப்பன்.

''இந்தாங்க கோயில் காணிக்கை செலுத்துறவங்களெல்லாம் இங்கே வந்து டிக்கெட் வாங்கிக்கிட்டுப் போங்க'' என்று டிக்கெட்டும் கையு மாக இருந்தவன் அழைத்தான்.

சேவல் காணிக்கை என்று சொல்லி ரூபாய் இரண்டுக்கு ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டார் வேளார்.

''இது என்ன ஐயா! பஸ்ஸிலே டிக் கெட் வாங்குகிற மாதிரி நம்ம கோழிக் கும் டிக்கெட் வாங்குறீங்க?'' என் ருன் வேலப்பன்.

''நம்ம கோழியைக் கோயில்லே வச்சு வளர்க்கப் போருங்களே, அதுக் குச் செலவாகுமில்லே. அதுக்குத் தான் ரெண்டு ரூபாய்'' என்ருர் வேளார்.

''சரி, சரி, வா, வா. நாம போய் சாமியைக் கும்பிட்டுட்டு வந்து கோழியை விடுவோம்'' என்று சொல்லி அழைத்துக் கொண்டு கோயில் உள்ளே கூட்டிச் சென்ருர் வேளார்.

வேலப்பன் சாமியைப் பார்த்து, ''எங்க கோழியை நல்லா வச்சுக் காப் பாத்து சாமி! நான் அடுத்த வருஷம் வந்து பார்க்கிறப்போ, பெருசாவளர்ந் திருக்கோணும்'' என்று கூறியதைத் தன் அய்யாவிடம் கூறி மகிழ்ந்தான்.

''அதெல்லாம் நாம சொல்லவே வேண்டாம். நம்ம சாமி நம்ம கோழியை நல்லா வச்சுக்குவாரு. அடுத்த வருஷம் நாம வந்து பார்ப் போம்'' என்று சொல்லி வேலப்பனே அழைத்துக் கொண்டு காணிக்கை செலுத்துமிடத்திற்கு வந்தார்கள்.


''காணிக்கை டிக்கெட்டை இங்கே கொடு. கோழியை அந்தக் கூட்டுக் குள்ளே விடு'' என்ருன் கோயில் ஊழியன்.

''என்ன அய்யா! கூட்டுக்குள்ளே இருக்கிற கோழிங்களேயெல்லாம் ஒரு ஆளு வந்து கூடையிலே எடுத்துப் போட்டுக்கிருரு? இவரு அந்தக் கூட் டுக்குள்ளே நம்ம கோழியையும் விடச் சொல்ருரே!'' என்ருன் வேலப் பன்.

''ஆமா, அதானே? நீ கோழியை வச்சுக்க. நான் போயி அந்த ஆளு கிட்டே என்னுன்னு கேட்டுட்டு வர் றேன்'' என்று சொல்லிவிட்டுக் கோயில் ஊழியனிடம் விவரம் கேட் டார் வேளார்.

''ஏய்யா, வர்ற கோழிகளேயெல் லாம் நாங்களே வச்சுக்கின்னு இருந்தா, கோயில்லே இருக்கிற நாங்க ளெல்லாம் நாள் முழுக்கக் கோழி மேய்க்க வேண்டியதுதான். காணிக் கையைச் செலுத்திவிட்டுப் பேசாமப் போவியா? இதெல்லாம் கேட்டுக் கிட்டு இருக்கியே'' என்ருன் கோயில் ஊழியன்.

''அதில்லேப்பா, அந்த ஆளு கோழி



யையெல்லாம் கூடையிலே புடுச்சுப் போடுறானே, கோயில் தோட்டத்திலே விடப் போறானா?" என்றார் வேளார்.

"கோயிலில் எங்கய்யா தோட்டம் இருக்கு? தோட்டமெல்லாம் கடைகளாக் கட்டி விட்டாச்சு. அந்த ஆளு மிலிட்டரி கடைக்காரர். அவர் ஓட்டலுக்காக இங்கே ஆடு, கோழியெல்லாம் குத்தகையெடுத்திருக்காரு. அதுக்காகத்தான் எடுத்துக்கிட்டுப் போறாரு. சரி! சரி! நீ விட்டுட்டுப் போய்யா" என்று அவசரப்படுத்தினான் கோயில் ஊழியன்.

"என்னப்பா, கோயிலிலே விடுற கோழியை மிலிட்டரி ஓட்டல்காரனுக்கு விக்கிறீங்க. அவன் அதைக் கொன்னு போடுவானே?" என்றார் வேளார்.

"ஏய்யா, மிலிட்டரி ஓட்டல்காரன் கோழியைக் கொல்லாமே, கூடு கட்டி வச்சுக் கொஞ்சுவானா? என்ன இவ்வளவு வயசாயும் புரியாமப் பேசறே?" என்றான் கோயில் ஊழியன்.

வேலப்பனுக்குக் கண்கள் கலங்கின. அழுகை அழுகையாய் வந்தது. "அய்யா! நீதானே சொன்னே, அசுரர்கன்னு கெட்ட பயலுக இருந்தாங்க. அவங்க எல்லாரையும் கொன்னுக்கிட்டு இருந்தாங்க, முருகன் அவங்களையெல்லாம் கொன்னுப்பிட்டாரு. அவரு நம்ம கோழியை நல்லா வச்சுக்குவாருன்னு சொன்னியே! இப்ப இவங்க என்னன்னா, நம்ம கோழியை ஓட்டலுக்குக் கொண்டு போய் கொல்லப் போறேன்னு சொல்றாங்க. அப்படின்னா வேண்டாம் அய்யா, நம்ம கோழியை விடவே வேண்டாம்" என்று தன் மார்போடு அணைத்துக் கொண்டான் வேலப்பன்.

கோயில் ஊழியனுக்கு ஓட்டல்காரன் கொடுக்கிற கமிஷன் காசு போய்விடுமே என்கிற வருத்தம் வந்துவிட்டது. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "காணிக்கை டிக்கெட் வாங்கிட்டா காணிக்கையைச் செலுத்தாமல் போகக் கூடாது. கோழியை விட்டுட்டுப் போய்யா! அதுதான் அறநிலையச்சட்டம்" என்றுகூறி

அதட்டினான். உடனே வேளாருக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. "ஏம்பா, கோயிலிலே ஆடு, மாடு, கோழி எல்லாம் உயிரோடு பலி கொடுக்கக் கூடாதுன்னு சொல்கிற உங்க சட்டம், கோயில்லே காணிக்கையா விடுகிற உயிரையெல்லாம் கொல்றதுக்கு, விற்கச் சொல்லிக் காசு சேர்க்கச் சொல்லுதா? அதைவிட உங்க ஆபீசரும், நீங்களும் சேர்ந்து அதையெல்லாம் வெட்டிக் கோயிலிலே கடை போட்டுங்கன்னா, இன்னும் கூடக் காசு கிடைக்கும்" என்று ஆவேசமாகக் கூறிவிட்டு, "இங்கே வாய்யா ராஜா, நம்ம கோழியை இந்தக் கொலைகாரப் பயலுங்ககிட்டே விடப்படாது. முருகனை நினைச்சு நம்ப வீட்டிலேயே வச்சுக்குவோம். அதுவா விளைஞ்சதைத் தின்னுட்டு விதி வந்தாச் சாகட்டும்" என்று சேவலை அணைத்துக் கொண்டிருந்த வேலப்பனை அன்போடு அழைத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்.

"ஏன் அய்யா! நீ இரண்டு ரூபாய்க்கு டிக்கெட்டு வாங்கினியே, அதை விட்டுட்டுப் போறதா?" என்று கேட்டான் வேலப்பன்.

"கோயிலுக்கு வெளியே மட்டும் பிச்சைக்காரங்க இல்லப்பா; கோயிலுக்கு உள்ளேயும் பிச்சைக்காரங்க இருக்காங்க. அது அவங்களுக்கு" என்று கூறிவிட்டுக் கொலைக் கூடத்திலிருந்து தப்பி வந்த ஓர் உயிரையும், அதன்மீது அன்பைப் பொழியும் தம் பேரனையும் பார்த்துக் காணிக்கையை நிறைவேற்றிய நிம்மதியில் பெருமூச்சு விட்டார் ஆண்டி வேளார்.




சென்னை மேற்கு மாம்பலத்திலுள்ள 'கோகுல் புகுமுகப் பள்ளி'யின் மூன்றும் ஆண்டு விழாவில், அந்தப் பள்ளிக் குழந்தைகள், புகழ்பெற்ற தலைவர்களைப் போல் மாறுவேடம் போட்டு வந்து சபையோரை மகிழ்வித்தார்கள்.

விழாவுக்குத் தலைமை தாங்கி, குழந்தைகளுக்குப் பரிசுகளை வழங்கினார், 'மங்கையர் மலர்' இணை ஆசிரியர் திருமதி மஞ்சுளா ரமேஷ். அவருக்கு வலப்புறம் அமர்ந்திருப்பவர், கல்வித் துறையைச் சார்ந்த திருமதி புவனேஸ்வரி பாலாஜி.

செய்திக் கதிர்!




● கம்பிரத்தில் பெரிய சிங்கத்தின் இதயம் தான் விலங்குகளின் இதயத்தி லேயே மிகவும் சிறியது.



● ஒட்டகம் மூன்று நிமிடத்தில் சுமார் 400 லிட்டர் வரை தண்ணீர் குடிக்குமாம். தவிர அதன் ரோமத்தாலான கம்பளம் உயர்ந்ததென கருதப்படுகிறது. ● ஒரு ஆண்டில் ஒரு ஒட்டகத்திலிருந்து 7 கிலோ கம்பளம் தயாரிக்கப் படுகிறதாம்.




● யானையின் சராசரி உடல் வெப்ப நிலை எவ்வளவு தெரியுமா? மனித உடல் நிலை வெப்பமான 97.4° டிகிரி பாரன்ஹீட் ஆகும்.



● காண்டா மிருகத்தின் கொம்பு கெட்டியான தசை நார்களால் ஆனதே தவிர, எலும்பினாலானது அல்ல.



● கங்காரு எலி என்ற எலியினம் அடிக்கடி தூசு புழுதியில் புரண்டு மண் குளியல் செய்யாவிடில் இறந்து விடுமாம்.



முகராசி

- குழந்தைக் கவிஞர்

மன்னர் ஒருவர் காலை நேரம்
மகிழ்ச்சி யோடு எழுந்தார்.
சன்னல் வழியாய் எதிரே இருந்த
சாலை தன்னைப் பார்த்தார்.

முருகன் என்னும் சலவை யாளன்
முதுகில் மூட்டை சுமந்து,
அரசர் முகத்தைப் பார்த்த படியே,
அங்கே செல்லக் கண்டார்.

கண்டு அரசர் திரும்பும் போது
கவனக் குறைவால், அந்தோ!
சன்னல் கதவில் மோதிக் கொண்டார்,
தலையில் இரத்தம் வழிய:

''சலவைத் தொழிலைச் செய்யும் ஒருவன்
சாலை வழியாய்ப் போவான்.
தலையில் குடுமி இருக்கும் அவனை
விரைவில் கொணர்க'' என்றார்.

முருகன் தன்னைக் கொண்டு வந்து
முன்னே நிறுத்தி வைக்க
அரசர், தமது தலையைக் காட்டி
ஆத்தி ரத்தில் சொன்னார்:


''கண் விழித்தேன் உன் முகத்தில்
காயப் பட்டேன், அதனால்.
இன்றே உன்னைத் தூக்கில் இடுவேன்''
என்றே முழக்கம் செய்தார்.


முருகன் இதனைக் கேட்ட வுடனே
விழுந்து விழுந்து சிரித்தான்.
அரசர் கோபம் அதிக மாக
''அடக்கு சிரிப்பை'' என்றார்.

''என்றன் முகத்தில் அரசர் விழித்தார்;
இரத்தக் காயம் அடைந்தார்.
மன்னர் முகத்தில் விழித்த தாலே
மரணம் எனக்கு, ஆஹா!

''இருவ ருடைய முகங்க ளுக்கும்
இருக்கும் ராசி தன்னை
சிறிது நேரம் நினைத்துப் பார்த்தேன்;
சிரித்து விட்டேன்'' என்றான்.

முருகன் சொன்ன பதிலைக் கேட்டு
மிகவும் வெட்கம் கொண்டு,
''சரிசரி, நீ போபோ'' என்றே
தலை குனிந்தார் அரசர்!



பாக்தாதைத் தலைநகராகக் கொண்டு ஹாரூன் அல் ரஷீத் ஆண்டு வந்தார்...
மந்திரி! நாம் மாறு வேடத்தில் நகர்வலம் வந்து வெகு காலமாயிற்று...
உழைப்பாளி ஹஸனும் அதிர்ஷ்ட தேவதையும்
கதை: ஆனந்தி
படம்: விஜு
இருவரும் வியாபாரிகள் போலச் சென்றனர்...
இங்கே ஹஸன் என்றொருவன் கயிறு வியாபாரம் செய்து வந்தானே... இப்போ காணோம்?
அது சரி, இந்த மாளிகை புதுசா இருக்கிறதே!
விசாரிக்கிறேன்.
மந்திரி மாளிகை வாசலுக்குப் போய்...
இது யார் வீடு?
கயிறு வியாபாரி ஹஸன் பிரபுவின் மாளிகை.
மந்திரி திரும்பி வந்து...
அரசே! குச்சு வீட்டில் வசித்த ஹஸன் தான் இப்படி மச்சுமேல் மச்சு கட்டியிருக்கிறான்!
ஆச்சர்யம்தான்!


அரண்மனை திரும்பிய அரசன்...
அமைச்சரே! ஹஸன் எப்படி இவ்வளவு பணக்காரனாக ஆனான் என்பதைக் கேட்க வேண்டும். அவனை விருந்துக்கு அழையுங்கள்!
விருந்துண்ண வந்தான் ஹஸன்...
ஸலாம்!
வா, ஹஸன். விருந்து தயார்...
சாப்பிடும் போது அமைச்சர்...
...ஹஸன்! கயிறு வியாபாரத்தில், நீ எப்படி இவ்வளவு பணம் சேர்த்தாய் என்பதை அறிய மன்னர் ஆவலாய் இருக்கிறார்...
ஹஸன் சிரித்தான்...
அது ஒரு பெரிய கதை!
விருந்து முடிந்து நிலா முற்றத்தில் அமர்ந்தனர்...
உன் கதையைக் கேட்டால்தான் இன்றிரவு தூக்கம் வரும்! சொல்லு!
ஒரு நாள் என் எளிய கயிறுக் கடைப் பக்கமாக இரு நண்பர்கள் வந்தனர்...



ஹஸன் கதையைத் தொடர்ந்தான்... அந்த நண்பர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்...
பணம் மட்டும் ஒருவனை மகிழ்ச்சியில் ஆழ்த்த முடியாது...
ஹூம், பணம்தான் முக்கியம்.
இல்லை... உழைப்பும் நல்ல குணங்களும் அதைவிட அவசியம். கொஞ்சம் அதிர்ஷ்டமும் இருக்க வேணும்.
பணம் இருந்தால் மற்றவை பற்றி என்ன கவலை?
சரி, அதோ அந்தக் கயிறு வியாபாரி ஏழைதானே? அவனை வைத்துச் சோதனை நடத்துவோம்!
இருவரும் ஹஸனை நெருங்கி...
உன் பெயர் என்ன?
ஹஸன், ஐயா!
ஹஸன்! நீ ஏன் வியாபாரத்தைப் பெருக்கவில்லை?
முதல் போட பணத்துக்கு எங்கே போக?




ஹஸன்! உனக்கு இருநூறு பொற்காசுகள் தருகிறோம். அதைச் சரியாகப் பயன்படுத்தி வியாபாரத்தைப் பெருக்கி, பணக்காரனாகி விடு!
ஹஸனுக்கு ஒரே சந்தோஷம்!
எல்லாம் அல்லா அருள்! எனக்கு இப்படி ஓர் அதிர்ஷ்டமா!
நண்பர்கள் இருவரும் விடை பெற...
இன்று ஒரு நாள் நல்ல விருந்து சாப்பிடலாம்! நாளை முதல் வியாபாரத்தைக் கவனிக்கலாம்.
ஹஸன் சில பொற்காசுகள் தவிர, மற்ற வற்றைத் தலைப்பாகை மடிப்பில் பத்திரப்படுத்தினான்...
துணிமணிகள், விளையாட்டுச் சாமான்கள், கோழி இறைச்சி எல்லாம் வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போகிறேன்....
கடைசியாகக் கோழி இறைச்சி வாங்கி, ஹஸன் அதைக் கையில் எடுத்துப் போக முடியாமல் தலைப் பாகை மீது வைத்துக் கொண்டு நடந்தான்.
வீட்டுக்காரி சந்தோ ஷத்தில் திணறப்போகிறாள்! குழந்தைகள் குதிக்கும்!


ஹஸன் தலை மீதிருந்த கோழி இறைச்சியை ஒரு கழுகு பார்த்தது... ஜிவ்வென்று இறங்கி... ...
தலைப்பாகையோடு சேர்த்துக் கால்களில் பற்றிக் கொண்டு பறந்தது...
ஐயோ, போச்சே!
அன்றிரவு, ஹஸனின் மனைவி...
தலைப்பாகை என்ன ஆச்சு?
ஹஸன் நடந்ததைக் கூற...
ஹூம்... உங்களுக்கா சம்பாதிக்கத் தெரியாது... யாராவது கொடுத்தாலும் வைச்சுக்கத் தெரியாது..
அல்லா கொடுத்தார்; அவரே எடுத்துக் கொண்டார். போகட்டும் போ!


ஹஸனின் மனைவி அக்கம்பக்கத்துப் பெண்களிடம் புலம்ப...
அழகு தான் போ! ஒன்றா, இரண்டா இரு நூறு பொற்காசுகள்!
போயும் போயும் கழுகிடமா பறிகொடுப்பது...?
செய்தி பரவியது... ஒரு நாள் ஹுஸேன் பிரபு தன் பணியாளனிடம்...
என்னப்பா, என்னவோ சொல்லத் துடிக்கிறாய் போலிருக்கே... ஏதாவது விசேஷம் உண்டா?
ஊர்க் கதைதாங்க... கயிறு வியாபாரி ஹஸனுக்கு யாரோ இரு நூறு பவுன் கொடுத்தார்களாம்! அதைக் கழுகு கொத்திக் கொண்டு போய் விட்டதாம்!
ஹுஸேன் பிரபு யோசனையில் ஆழ்ந்தார்...
...கயிறு வியாபாரி ஹஸன்... ஒரு வேளை நான் கொடுத்த பணம் தானோ? அப்படித்தான் இருக்கும்!
ஹுஸேன் பிரபு தமது நண்பரையும் அழைத்துக் கொண்டு ஹஸனைப் பார்க்கப் போனார்...
நான்தான் சொன்னேனே பணத்தால் மட்டும் மகிழ்ச்சி கிட்டாது என்று...



இருவரும் ஹஸனின் கயிறுக் கடையை அடைந்து...
ஹஸன்! பணத்தை என்ன செய்தாய்? உண்மையைச் சொல்!
அல்லா உண்மையை அறிவார். கழுகு கொண்டுபோனதுதான் சத்தியம்!
ஹுஸேன் பிரபுவும் தோல்வியை ஒப்புக் கொள்ள மனமின்றி...
போகட்டும், இன்னொரு பணமுடிப்பு தருகிறேன். இதையாவது பத்திரமாக வைத்திருந்து வியாபாரத்தை விருத்தி செய்!
ஹஸன் வீடு திரும்பியதும்...
பணத்தை பத்திரமாக வைக்க வேண்டுமே... யாருக்கும் தெரியக் கூடாது... இந்தத் தவிட்டுப் பானைக்குள் ஒளித்து வைக்கிறேன்!
மறுநாள் ஹஸன் கடைக்குப் போன பிறகு...
அம்மா, மண் சுவரின் வெடிப்பைப் பூசிச் சரி செய்து விட்டேன். கூலி தாங்க...
வேலை சுத்தமா இருக்கு, பார்த்துக்குங்க...
இந்தா கூலி... இந்தத் தவிட்டுப் பானையை எடுத்துப்போ...



என்னம்மா, வெறும் தவிடுதானா?
ஆட்டுக்குத் தீவனமாச்சு. நல்லா பால் கறக்கும். கொண்டுபோ. வேறு காசு, பணம் இல்லை...
மாலையில் வீடு திரும்பிய ஹஸன்...
ஐயோ, தவிட்டுப் பானை எங்கே?
எதுக்கு அலறுகிறீங்க? வீட்டுச் சுவரைப் பூசுது பார்த்தவனுக்குக் கொடுத்து விட்டேன்.
ஐய்யோ! பொற்காசுகளையும் சேர்த்துக் கொடுத்து விட்டாயே...
பொற்காசுகளா...?
இதோ பாருங்க, கதை அளக்காதீங்க... முன்பு கழுகு கொண்டு போச்சுன்னீங்க; இப்போ தவிட்டுப் பானையோடு போச்சுன்னு சொல்றீங்க; யார் நம்பறது?
ஐயோ! அதுதான் சத்தியம். இதோ பார், பத்து பொற்காசுகளை மட்டும் தனியே வைத்துக் கொண்டு பாக்கியை ஒளித்து வைத்தேன்!
எல்லாம் நம்முடைய போறாத காலம்!


ஹஸனின் மனைவி தன் தோழிகளிடம் மறுபடி நடந்ததைக் கூறிப் புலம்ப....
அடாடா! இரண்டாவது தடவையும் போச்சா...
ஊர் முழுவதும் இதே பேச்சு...
இப்படி ஒரு துரதிர்ஷ்டம் வேறு யாருக்குமே நேராது...
ஹுஸேன் பிரபுவுக்குச் செய்தி எட்டியது...
இந்த வேடிக்கையைக் கேளுங்க... ஹஸனின் மனைவி தவிட்டுப்பானையில் தங்கக் காசுகளை வைத்துக் கொடுத்து விட்டாளாம்!
நம்பவே முடியலையே!
ஹுஸேன் பிரபு தம் நண்பருடன் மறுபடி ஹஸனைப் பார்க்கப் போனார்...
என்ன ஆயிற்று என் பணம்? உண்மையைச் சொல்!
ஹஸன் நடந்ததைக் கூறி....
பிரபு! மன்னிக்க வேண்டும்! எல்லாம் என் துரதிர்ஷ்டம். இன்னும் ஒரு தடவை உதவுங்கள்; வியாபாரத்தை நிச்சயம் பெருக்கிக் காட்டுகிறேன்....



ஹுஸைன் பிரபு, நண்பரிடம்...
நான் இரண்டு தடவை இவனுக்குப் பணம் தந்து ஏமாந்தேன்.... இப்போது நீங்கள் ஏதாவது செய்யுங்கள்....
ஹுஸேனின் நண்பர் ஒரு கோணி ஊசியை எடுத்து...
புறப்படும்போது இது தரையில் கிடப்பதைப் பார்த்தேன்; யார் காலிலாவது குத்திவிடப் போகிறதே என்று பாக்கெட்டில் போட்டுக் கொண்டேன்.
ஹஸன்! என்னிடம் செல்வம் இல்லை; இந்தக் கோணி ஊசியைத் தருகிறேன்; உனக்கு அதிர்ஷ்டம் வரட்டும்.
ஹஸன் மரியாதை கருதி வாங்கிப் பையில் போட்டுக் கொண்டான்...
ஹும்... கோணி ஊசி... எனக்கு இதனால் என்ன உபயோகம்?...
அன்று மாலை ஹஸன், அந்தக் கோணி ஊசியைத் தன் கடைக்கு வந்த ஒரு செம்படவனுக்கு இலவசமாய்த் தந்தான்.
நன்றி.



மறு நாள் மாலை...
ஹஸன்! நீ கொடுத்த ஊசியால் என் வலையைப் பழுது பார்த்தேன். அதனால் நிறைய மீன் சிக்கியது. இந்தா உனக்கு ஒன்று...
அன்றிரவு மீனை உணவாக்கினாள் ஹஸனின் மனைவி...
இந்தா, மீனை நறுக்கிய போது பளபளப்பாக ஏதோ கிடைத்தது... வைத்துக் கொண்டு விளையாடு....
அந்தக் கல்லுக்காகக் குழந்தைகள் சண்டை போட்டன...
எனக்குத் தான்
என்னிடம் தான் அம்மா முதலில் தந்தாள்...
ஹஸன் கோபமாக...
அடாடா! என்ன ரகளை?.. ஒரு கல்லுக்காக இத்தனை சண்டையா? ஏது இது?
விளக்கொளியில் கல் பிரகாசித்தது....
அம்மா மீனை நறுக்கும் போது கிடைத்தது...


கல்லை இடுப்புப் பட்டையில் பத்திரப் படுத்தினான் ஹஸன்...
வெறும் கண்ணாடிக் கல்லாகத்தான் இருக்கும்... எதற்கும் நாளைக்கு நகை வியாபாரியிடம் காட்டுகிறேன்....
மறுநாள்... நகை வியாபாரி...
இது உனக்கு ஏது? திருடினாயா?
ஐயோ! இல்லவே இல்லை! எனக்கு அதிர்ஷ்டவசமாய்க் கிடைத்தது....
ஹஸன் நடந்ததைக் கூற...
இது உயர்ந்த வைரம். பட்டை தீட்டினால் ஐயாயிரம் பொற்காசு பெறும்...
வியாபாரி தந்திரமாக...
ஹஸன்! நல்லவேளை இந்தக் கல்லை என்னிடம் கொண்டு வந்தாய். வேறு யாரிடமாவது போயிருந்தால் நூறு பொன் கொடுத்து உன்னை ஏமாற்றியிருப்பார்கள்...
ஹஸனுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை...
இந்தா... இது ஆயிரம் பொற்காசுகள் பெறும்... ஆனால் ஒன்று... யாரிடமும் சொல்லாதே! உனக்குத் திருட்டுப் பட்டம் கட்டி விடுவார்கள்!




ஹஸன் தாங்க முடியாத மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு ஓடினான்...
என்ன அதிர்ஷ்டம்! இந்தப் பணத்தைக் கொண்டு வியாபாரத்தைப் பெருக்குவேன்!
வீட்டுக்குப் போனதும்...
அப்பா! பழங்கள் பறிக்க மரமேறினேன்... கிளைகளுக்கிடையில் இந்தத் தலைப்பாகை சிக்கியிருந்தது...
உன்னுடையது போலிருந்தது!
கொடு, கொடு! என்னுடையதுதான்!
பணப்பை தலைப்பாகை மடிப்புக்கிடையே பத்திரமாக இருந்தது....
ஹய்யா! என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!
ஹஸனுடைய கயிறு வியாபாரம் செழித்தது...
தாம்புக் கயிறு இருக்கா?
கப்பல் கயிறு கூட இருக்கு; யாருக்காவது தேவையானால் சொல்லு!


சிலகாலம் சென்று...
ஹுஸைன் பிரபு என் வளர்ச்சியைப் பார்த்தால் ஆச்சர்யப் படுவார்...
அன்று மாலை வீடு திரும்பினான் ஹஸன்.
இதோ பாருங்கள், உங்களுடைய இன்னொரு பணப்பை!
தவிட்டுப் பானைக்குள் வைத்த பையா!
ஆமாம், ஆட்டுக்குத் தீவனம் வைக்கத் தவிடு வாங்கிவரச் சொன்னேன். நம் வீட்டுத் தவிட்டுப் பானையே திரும்பி வந்தது!
எல்லாம் அல்லாவின் அருள்! இனிமேலாவது நான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். புத்திசாலித்தனமாக உழைக்கவும் வேண்டும். ஹுஸேன் பிரபு மாதிரி பிறரிடம் கருணை காட்டவும் செய்வேன்....
ஹஸன் ஒரு பெரிய மாளிகையை விலைக்கு வாங்கினான்...
எப்படி? உனக்குப் பிடிச்சிருக்கா?
ரொம்ப!


ஹுஸேன் பிரபுவும் நண்பரும் ஒரு நாள் அந்தப் பக்கம் வர...
ஹஸன் கடையைக் காணோமே...?
ஊரை விட்டே ஓடிட்டானோ?
விசாரித்தார் ஹுஸேன்...
இங்கே ஒருவன் கயிறு வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தானே...?
அவர் பெரிய ஆளாயிட்டாரே! அதோ அந்த மாளிகை அவருடையதுதான்!
கடை?
இங்கே இடம் போதவில்லை. கடைத் தெருவில் பெரிய கட்டடத்துக்கு மாறிட்டார்...
நண்பர்கள் ஹஸனுடைய மாளிகைக்குச் சென்றனர்...
வரவேணும்! என்னை வாழவைத்த வள்ளல்களே! வரவேணும்!
இவரையும் சேர்த்து வள்ளல் என்கிறியே, கோணி ஊசி தவிர வேறு என்ன தந்தார்?



ஹஸன் நடந்ததை யெல்லாம் விவரித்து...
கோணி ஊசி தந்த அவரும் அதைப் பயன் படுத்திய செம்படவனும் உழைப்பை உணர்த்தி னார்கள்; நீங்கள் கருணையைக் கற்றுத் தந்தீர்கள்....
... கழுகும் தவிட்டுப் பானையும் முன்ஜாக்கிரதை புத்திசாலித்தனத்தைப் போதித்தன...
அதிர்ஷ்டமும் சேர்ந்து கொண்டது...
அது அல்லாவின் அருள்!
இருவரும் விடை பெற்று நடந்தனர்...
நண்பரே! நீங்கள் சொன்னது உண்மைதான்... வெறும் பணம் மட்டும் போதாது... வேறு பல அம்சங்களும் சேர்ந்தால்தான் செல்வம் பெருகும்; வாழ்க்கை ரசிக்கும்...
பாக்தாத் மன்னருக்குத் தன் கதையைக் கூறி முடித்தான் ஹஸன்...
நான் அளித்த விருந்தைவிட உன் கதை சுவையாக இருந்தது, நண்பனே!
ஹஸன் விடை பெற்றான்...
நீங்கள் 'நண்பன்' என்று அழைக்க நான் பாக்கியம் செய்தவனானேன். போய் வருகிறேன்....



சிங்கப்பூர் சைக்கிள்

சிங்கப்பூரிலிருந்து வந்த அந்தச் சைக்கிளைப் பார்த்ததும், முரளிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

''எங்கப்பா நல்ல அப்பா'' — என்று அருகிலிருந்த தந்தையை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

''இனிமேல் நான் சமர்த்தா படிக்கிறேன். கணக்கெல்லாம் ஒழுங்காப் போட்டுக் காண்பிக்கிறேன்,'' என்று அம்மாவின் முகவாய்க் கட்டையைத் திருப்பி மகிழ்ச்சியோடு சொன்னான்.

முரளியின் இந்தச் சந்தோஷத்தைக் கண்டு, அவனது பெற்றோருக்குப் பெருமைதான். ஆனால்,

'முரளி முரட்டுப்பையனாயிற்றே, பள்ளிக்கு ஒழுங்காகச் சைக்கிளை ஓட்டிச் செல்ல வேண்டுமே! சைக்கிளை வேகமாக ஓட்டி, நடுரோட்டில் விபத்து ஏதேனும் ஆகிவிடக்கூடாதே!' என்றகவலையும் இருந்தது.

பக்கத்து வீட்டு பாலு புது சைக்கிள் வாங்கினால், தனக்கும் புது சைக்கிள் வேணும். எதிர்த்த வீட்டு பிரகாஷ், புதியதாக 'கேரம் போர்டு' வாங்கினால், தனக்கும் உடனடியாகப் புதிய கேரம் போர்டு வேண்டும். இல்லையென்றால், வீட்டில் ஒரே ரகளை. சண்டை. உண்ணாவிரதம்.

பிடிவாதத்தோடு வளர்ந்துவரும்

த.கி. இராமசாமி

முரளியைக் கண்டால், அவன் தந்தைக்கு மிகுந்த கவலை. எவ்வளவோ தடவை, பொறுமையைக் கடந்து, முரளியை அடித்தும் இருக்கிறார்.

ஆனால்,

நாளுக்கு நாள் முரளிக்குப் பிடிவாதம் வளர்ந்ததே தவிர, பொறுப்பும்,பொறுமையும்எட்டிக்கூடப்பார்க்கவே இல்லை.

தந்தைதான் இப்படியென்றால், தாயிடமும் சில சமயம் முரளி கடுமையாக நடந்துகொள்வான். அப்பொழுதெல்லாம் தாயின் மனம் வேதனையடையும். தங்களுக்கிருக்கும் ஒரே பையன் முரளி. இப்படி முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறானே என்ற கவலைதான் அவர்களுக்கு!

வீட்டில் சரி — வெளியில் முரளியைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்றால், 'நன்றாகப் படிக்கக் கூடியவன். சுறுசுறுப்பாக இருப்பான். ஆனால்,எந்தவிதத்திலும்தான் யாருக்கும் எதற்கும் சளைத்தவனில்லை என்ற பெருமை கொண்டிருப்பான். 'பொல்லாத பிடிவாதக்காரன்' என்றே கூறுவார்கள்!

எப்படியோ, சிங்கப்பூரிலிருக்கும் முரளியின் மாமா, முரளியின் பிறந்த நாள் பரிசாக, புதிய சைக்கிளைக் கொடுத்தனுப்பியிருக்கிறார்.

சாதாரண சைக்கிள் என்றாலே, 'ஓகோ' என்று பீற்றிக் கொள்வான் முரளி. இப்பொழுது சிங்கப்பூர் சைக்கிள் என்றால் கேட்கவா வேண்டும்! அவன் முகத்தில் பெருமிதக் களை புரண்டோடியது!

முரளிக்கு அன்றிரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. 'எப்பொழுது பொழுது விடியப்போகிறது? சீக்கிரம் பள்ளிக்குச் செல்லவேண்டும். சிங்கப்பூர் சைக்கிளை செல்லப்பா, பாலு, விநோத், வஸந்த் ஆகியோரிடம் காட்ட வேண்டும். ஒரு கையை விட்டு சைக்கிளை ஓட்டவேண்டும்.வேகமாக சைக்கிளை ஓட்டி, 'சட்'டென்று பிரேக் பிடித்துச் சகுந்தலாவைப் பயமுறுத்த வேண்டும்.'

— இப்படி என்னவெல்லாமோ கற்பனையில் மூழ்கியவனுக்குத் தூக்கம் எப்படி வரும்? படுக்கையில் புரண்டு, புரண்டு படுத்தான்.

விருட்டென்று 'வஸந்த்' சைக்கிளுக்குப் பக்கத்தில் தன் சைக்கிளைக் கொண்டு வந்து நிறுத்தினான் முரளி.

அந்தச் சிங்கப்பூர் சைக்கிளைக் கண்டதும்வஸந்த்திகைத்து நின்றான். பார்க்கப் பளபளப்பாக ஸ்கைப்ளூ நிறத்தில், ஓட்டுகின்ற சப்தம் கூடக் கேட்காத அளவுக்குப் பல்வேறு சிருங்கார அமைப்புக்களைக் கொண்டு, அதிக 'வெயிட்' இல்லாமல் மின்னிற்று அந்தச் சைக்கிள்.

அலட்சியமாக வஸந்தைப் பார்த்த முரளி, "சைக்கிள் பந்தயம் வெச்சுக்குவோமா?" என்று திமிரோடு கேட்டான்.

இதற்குள், பாலுவும், பிரகாஷும், கண்ணனும் அங்கே வந்து சேர்ந்தார்கள். எல்லோருக்கும் நடுவில் அரசன் போல வீற்றிருந்தான் முரளி.

"டேய், சைக்கிளைத் தொடாதேடா."

"சீட் மேலே கையை வெச்சியோ, தொலைச்சுடுவேன்."

தன்னைச் சுற்றி நின்ற நண்பர்களிடம், கடுமையாகவே நடந்துகொண்டான் முரளி. சிலருக்கு முரளி மீது கோபம் வந்தது. சிலர் பயந்து ஒதுங்கிப் போனார்கள். வஸந்த் ஒன்றும் பேசவே இல்லை. சைக்கிளைத் தள்ளிக்கொண்டுமெள்ள நகர்ந்தான்.

"டேய், பயந்தாங்கொள்ளி! பயந்து ஓடறான் பாரு!"



விடுமுறை நாட்களில் சிறுவர்கள் இஷ்டம் போல் தெருக்களில் விளையாடுவதற்கு ஏற்ப, ஜப்பான் நாட்டில், டோக்கியோ நகரில் சில வீதிகளில் காலை ஒன்பது மணி முதல் மாலை நான்கு மணி வரை கார், ஸ்கூட்டர், வண்டி எதுவும் போகக் கூடாது என்று தடை செய்து விட்டார்கள்! அந்த சாலைகளில் குழந்தைகள் தங்கள் விருப்பம் போல் விளையாடலாம்!

— குத்தாலம் ராஜா.



கடவுள் மீது பக்தி கொண்ட சோமுவும், கடவுள் நம்பிக்கையில்லாத சங்கரும் ஒரு கூடாரத்தில் தங்கியிருந்தார்கள். கூடாரத்தை விட்டு இருவரும் வெளியில் வந்தபோது, ''ஓர் ஒட்டகம் இந்தப் பக்கமாக வந்திருக்கிறது'' என்றான் சங்கர். ''அதற்கு என்ன ஆதாரம்?'' என்று கேட்டான் சோமு.

''இதோ ஒட்டகத்தின் பாதச் சுவடு தெரிகிறதே!'' என்றான் சங்கர்.

உடனே சோமு, ''கடவுளின் சுவடு நாம் காணும் மரம், செடி, கொடி, சூரியன், நிலா, நட்சத்திரங்கள், விலங்குகள், மனிதர்கள் ஆகியவையே'' என்றான்.

அப்போதுதான் சங்கர் கடவுள் இருப்பது உண்மையென்று உணர்ந்தான்.

—தா. சுமதி (8268), கோவை—16.

வஸந்த், இதைக் காதில் கேட்டுக் கொள்ளவே இல்லை. முரளி தன்னைக் கிண்டல் செய்வதைக் கண்டு, சில மாணவர்கள் சிரிப்பது மட்டும் வஸந்தின் நெஞ்சில் கனமாகத் தோன்றிற்று.

இதற்குள் பள்ளியில் 'மணி' அடிக்கவே, எல்லோரும் வகுப்பறையை நோக்கி ஓடிப் போனார்கள்.

முரளி தன் சைக்கிளை, தனியாகவே நிறுத்தி வைத்திருந்தான்.

பள்ளியில் ஆசிரியர் பாடத்தைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுது முரளிக்கு அதில் கவனமே இல்லை. வகுப்பறையில் இருந்து கொண்டு, அங்கிருந்த ஜன்னல் வழியாக சைக்கிள் ஸ்டாண்டில் வைக்கப்பட்டிருந்த தன் சைக்கிளையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

இடைவேளை விட்டதும், சாப்பிடக் கூடச் செய்யாமல், பள்ளி கிரவுண்டில் ஒரு ரவுண்ட் அடிக்க வேண்டும் என்ற ஆசையினால் முரளி தனியாக அந்தக் கிரவுண்டில் சைக்கிளை இப்படியும் அப்படியுமாக சர்க்கஸ் வேலை செய்து கொண்டே ஓட்டினான். இதை மற்ற மாணவர்கள் வேடிக்கை பார்த்தனர். முரளிக்கு இது பெருமையாக இருந்தது.

மாலையில், பள்ளி விட்டதும் வெகு வேகமாகச் சைக்கிளை ரோட்டிற்குக் கொண்டு வந்த முரளி, ஒரு சைக்கிள் ரிக்ஷாவை முந்தினான்.

அப்புறம் மெதுவாக ஓடிக் கொண்டிருந்த இரண்டு 'மொபெட்'டுகளை முந்தினான். இன்னமும் ஆசை தணியாததால்,

ஒரு ஸ்கூட்டரை முந்த சைக்கிளை வேகமாக மிதித்தான்.

அப்பொழுது சட்டென்று குறுக்கே பாய்ந்த ஒரு நடைபாதைக் கிழவியின் மீது முரளியின் சைக்கிள் மோத—

வயதான அந்தக் கிழவி பொத்தென்று கீழே விழுந்தாள். ஓவென்று அலறினாள்.

முரளி சைக்கிளை நிறுத்தவும் இல்லை; திரும்பிப் பார்க்கவும் இல்லை. சிலர் துரத்திப் பிடிக்க முயன்றனர். முரளி தப்பி விட்டான்.

'சிறு பையன் — போனால் போகிறான்' என்று கூட்டத்திலிருந்த சிலர் கூறிக் கிழவிக்கு வேண்டிய உதவியைச் செய்தார்கள்.

வீட்டிற்குச் சென்றதும் முரளி — இந்தச் சம்பவத்தைப் பற்றி யாரிடமும் சொல்லவேயில்லை. ஆனால், ஏதோ ஒரு தேவையற்ற பயம் மட்டும் அவனையும் அறியாமல் அவன் மனத்தில் நிலைத்து நின்றது.

மறுநாள்,

பள்ளிக்கு வழக்கம் போல் சைக்கிளில் வேகமாக வந்து கொண்டிருந்த முரளி, சற்றுத் தொலைவில் சகுந்தலா பள்ளிக்குச் சென்று கொண்டிருப்பதைக் கண்டான். அவளுக்குத் தெரியாமல், அவளுக்குப் பின்னே சென்று, சட்டென்று சைக்கிளை நிறுத்தி அவளைத் திணறடிக்க வேண்டும் என்ற வேகம் முரளிக்கு.

தன் எண்ணத்தைச் செயலாக்க, அவளருகே வேகமாகச் சென்றவன், பிரேக் பிடிக்க முயன்று தோற்றுப் போனான்.

அதன் பலன் சகுந்தலாவின் மீது முரளி மோத — சகுந்தலா கீழே விழ — பக்கத்திலிருந்த கூரான பாறாங்கல் சகுந்தலாவின் காலில் மோத — துடி துடித்து அழுதாள்.

அவள் கையில்கொண்டுவந்திருந்த 'டிபன் பாக்ஸ்' ரோட்டில் விழுந்து — உணவுப் பொருள்கள் சிதறின. புத்தகப்பை மீது சைக்கிள் ரிக்ஷா ஏறி நின்றது. அப்போது அவ்வழியாக வந்த முரளியினுடைய அப்பாவின் நண்பர் சகுந்தலாவை அவசர அவசரமாக ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு சென்றார். தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டது. ஒரு வாரம் சகுந்தலா மருத்துவமனையில் இருந்து, பூரண நலத்துடன் வீடு திரும்பினாள்.

விஷயம் தெரிந்ததும், முரளியைக் கட்டி வைத்து உதைக்கத்தான் அவன் தந்தை விரும்பினார். ஆனால், மற்றவர்கள் தடுத்து விட்டனர்.

'ஒரே பிள்ளை — ஏதோ விளையாட்டுத்தனமாகச் செய்து விட்டான்' என்று யார் யாரோ முரளியின் தந்தையிடம் சமாதானப்படுத்திச் சொன்னார்கள்.

சகுந்தலாவின் மருத்துவச் செலவு முழுவதும் முரளியின் தந்தையே ஏற்றுக் கொண்டார். சகுந்தலா பள்ளிக்கு இதனால் பத்து நாட்கள் வர முடியாமல் ஆகிவிட்டது.

இவ்வளவு நடந்தும் கூட முரளிக்கு, தான் செய்த தவறு தெரியவில்லை. 'சகுந்தலா தன்னைக் காட்டிக் கொடுத்து விட்டாள்' என்றே அவள் மீது வெறுப்புக் கொண்டிருந்தான்.

சைக்கிளைப் பிடுங்கி வைத்த அவன் தந்தை, சில காலம் நடந்தே பள்ளிக்குப் போகச் சொன்னார். அதோடு அந்தச் சைக்கிளை எடுத்து, வீட்டிலுள்ள பரண் மீது தூக்கிப் போட்டு விட்டார்.

ஒரு மாதம் சென்றது.

முரளிக்குப் பரண் மீது இருக்கும் அந்தச் சைக்கிளை எப்படியேனும் எடுத்து விடவேண்டும் என்ற ஆசை. இதற்காகத்தருணம்பார்த்துக்கொண்டிருந்தான்.

அன்றைக்கு, முரளியின் தந்தை அலுவல் காரணமாக பம்பாய் சென்றிருந்தார். திரும்பிவர, குறைந்தபட்சம் பத்து நாட்களாகும் என்று முரளிக்குத் தெரிந்தது.

தந்தை சென்ற பிறகு, தாயாரை வசியப்படுத்த முயன்றான்.

தாயார் — முரளியின் ஆசைக்கு இடம் கொடுக்கவில்லை. ஆனால், முரளிக்கோ பிடிவாதம்!

தாயார் கடைக்குச் சென்றிருந்த பொழுது —

ஏணிப்படியை நகர்த்தி, பரண் மேல் வைத்து, மெள்ள ஏறினான். சைக்கிள் பரணின் ஒரு மூலையில் கிடந்தது. கஷ்டப்பட்டு எடுத்தவன், மெதுவாக இறங்கும் பொழுது —

ஏணிப்படி விலகிச் சாயவே, 'பொத்'தென்று கீழே சைக்கிளோடு விழுந்தான்!

"அம்மாடி!" — என்ற முரளியின் அலறல் அந்தத் தெருவையே கலக்கியது.

டாக்டர் வருத்தத்தோடு சொல்லி விட்டார்.

'முரளி இனிமேல்சாய்ந்துச்சாய்ந்துத் தான் நடக்க முடியும். இல்லையென்றால் அவனது ஒரு காலை வெட்டியெடுக்க வேண்டியிருக்கும்' என்று.



சூரிய விளக்கு

சூரிய ஒளியைப் பயன்படுத்தி இரவு நேரங்களில் தெரு விளக்குகளை எரியச் செய்ய முடியுமா? முடியும்! ஐந்து கிராமங்களில் சூரிய ஒளியைப் பயன்படுத்தி தெரு விளக்குகளை எரியும்படி செய்திருக்கிறார்கள்! இந்த அதிசயம் எங்கு நடக்கிறது? நம் தமிழ்நாட்டில்தான்! தேனூர், சேக்காடு, மந்தியனூர், மருதை, உத்தக்கலவலாறு என்ற கிராமங்களில் சோதனையாக இதைச் செய்து வருகிறார்கள். இது வெற்றி பெற்றால் மற்ற கிராமங்களுக்கும் இதே முறையில் விளக்குகளை எரிய வைக்க முயற்சி செய்வார்கள்.

— ஏ. ஆர். வீரராகவன்.

முரளியின் தந்தை மிகவும் நொந்து போனார். தாயாரோ மூர்ச்சையுற்று விழுந்தாள்.

"எனது திமிரான நடத்தையே எனக்குச் சரியான தண்டனை கொடுத்து விட்டது'' என்று இப்பொழுதுதான் முரளி உணர ஆரம்பித்தான்.

'நடைபாதைக் கிழவியின் சாபம்,
சகுந்தலாவின் காலில் ஏற்பட்ட காயம்,
திமிரான பேச்சு,
பெற்றோரை மதிக்காத குணம்,
பிடிவாதம்,
— இவைதான் முரளியின் நல்ல கால், ஊனமடைந்ததற்குக் காரணம்' என்று முரளியைப் பற்றி, வகுப்பிலுள்ள மற்றவர்கள் சொல்லிக்கொண்டார்கள்.


முரளி, இப்பொழுது சைக்கிள் ரிக்ஷாவில்தான் பள்ளிக்குச் செல்லுகிறான். அவனருகே உட்கார்ந்திருப்பது, யாரென்று நினைக்கிறீர்கள்? ஆச்சரியப்படாதீர்கள், சகுந்தலா தான்!

மதியம் உணவு நேரத்தில், எல்லோருடனும் சேர்ந்து முரளி உணவு உண்கிறான். வஸந்த், முரளியின் தோளில் கைபோட்டு விளையாடுவதை எல்லோரும் பார்க்கலாம்.

முரளி இப்பொழுது முற்றிலும் மாறிவிட்டான். அவன் இப்பொழுதெல்லாம் பிடிவாதமே பிடிப்பதில்லை. ஒழுங்காகப் படிக்கிறான். பெற்றோர், 'ஆசிரியருக்கு நல்ல பிள்ளையாகவே நடந்து கொள்கிறான்.

முரளியை நல்ல பிள்ளையாக மாற்றுவதற்குத்தான், அந்த 'சிங்கப்பூர் சைக்கிள்' வந்து சேர்ந்ததோ? — என்று எல்லோரும் நினைக்கிறார்கள்!

ஓவியராகலாம்



ஒற்றுமைக்கு ஓர் இரட்டையர்

சந்திரா குமாரசாமி

''அம்மா, பரீட்சையெல்லாம் முடிஞ்சாச்சு, நாளையிலேயிருந்து பத்து நாட்கள் எங்களுக்கு லீவு'' — சதோஷமாகக் குதித்தபடி வந்தனர், நீலாவும், மாலாவும்.

''அட தேவலையே... அரையாண்டு விடுமுறை கூடப் பத்து நாளைக்கு இருக்கா...? அப்போ லீவுக்கு மதுரையிலுள்ள உங்க சித்தி வீட்டுக்குப் போய் ஒரு வாரம் இருந்துட்டு வருவோமா!'' என்று அம்மா கேட்டதும், நீலா, ''ஆஹா, மதுரைக்குப் போகலாம்,'' என்று சந்தோஷமாகக் கை தட்டினாள்.

''போம்மா, மதுரைக்கு ஒண்ணும் வேண்டாம், மைசூருக்கு அத்தை வீட்டுக்குப் போவோம்,'' என்று இடைமறித்தாள் மாலா.

''சித்தி வீட்டுக்குத்தான் போகணும்.''

''இல்லே, அத்தை வீட்டுக்குத்தான் போகணும்.''

''மதுரைக்குத்தான்...''

''இல்லே. மைசூருக்குத்தான்...'' என்று இரண்டு பேரும் கட்சி கட்டிக் கொண்டு கத்த ஆரம்பித்ததும், அம்மாவுக்கு ஏன்தான் சொன்னேமோ என்றாகி விட்டது. ''சரி, சரி. சத்தம் போடாதீங்க! அப்பா வந்ததும் முடிவு பண்ணிக்கலாம். இப்பப் போய் விளையாடுங்கள்'' என்று அம்மா சொல்லியும் கேட்காமல் சண்டையிட்டனர் அவர்கள். அலுவலகத்தில் இருந்து அப்பா வந்துவிட்டதைத் தெரிவிக்கும் ஸ்கூட்டர் சத்தம் கேட்டும், அவர்கள் சண்டை நிற்கவில்லை.

''நீலா, மாலா இரண்டு பேரும் வாங்க. ஊருக்குப் போறதைப் பத்தி அப்புறம் பார்க்கலாம். உங்க ரெண்டு பேருக்கும் அப்பா என்ன வாங்கி வந்திருக்கேன் பாருங்க'' என்று அப்பா அன்புடன் அழைத்தும் அவர்கள் திரும்பவில்லே. அப்பாவும் ஷூவைக் கழற்றியபடி, பேண்ட், சட்டையை மாற்றி லுங்கி அணிந்து கொண்டு அவர்களேப் பேசாமல் இருக்கும்படி இதம், பதமாகக் கூறிப் பார்த்தார். அப்பொழுதும் அவர்கள் கேட்காமல் போகவே, களைத்துப் போய் வந்திருந்த அவருக்கும் கோபம் அதிகரிக்க ஸ்கேலை எடுத்து ஆளுக்கு இரண்டு வைத்ததும் சண்டை ஓய்ந்து அழுகையாக மாறியது!

நீலா, மாலா இருவரும் ஒரே பிரசவத்தில் பிறந்த இரட்டைக் குழந்தைகள். ஒரே சமயத்தில் பிறந்தாலும், அவர்கள் இருவரும் ஒரே குணம் உள்ளவர்களாக இல்லாமல் போட்டிக் குணம் உள்ளவர்களாகவே இருந்தனர். எந்த ஒரு சின்ன விஷயத்திலும் ஒத்துப் போகாமல், நீலா சொன்னதை மாலாவும், மாலா சொன்னதை நீலாவும் மறுத்து, ஏறுக்கு மாறாகப் பேசுவதையே வாடிக்கையாகக் கொண்டிருந்தனர்., எந்தப் பொருள் வாங்கினாலும், எந்த விதமான ஆடைகள் வாங்கினாலும் ஒரே நிறத்தில், ஒரே வகையில் இருவருக்கும் வாங்கிக் கொடுத்து அவர்களுக்குள் ஒற்றுமையை உண்டாக்க அம்மாவும், அப்பாவும் எவ்வளவோ முயன்று பார்த்து விட்டார்கள். நல்ல நீதிக் கதைகளேச் சொன்னலும், பாதிக் கதையிலேயே சண்டை போட்டுக் கொண்டு மீதிக் கதையைக் கேட்காமல் போய்விடுவார்கள். 'கோகுலம்' போன்ற குழந்தை

களுக்கான பத்திரிகையை வாங்கிக் கொடுத்தால், நற்குணங்கள் வளரலாம் என்று வாங்கித் தந்தால், அதையும் ''யார் முதலில் படிப்பது?'' என்று பெரும் சண்டை வரவே, ஒவ்வொரு மாதமும் இரண்டு 'கோகுலம்' வாங்க வேண்டியதாகிவிட்டது. நீலா, மாலாவின் ஒற்றுமையற்ற போக்கே அம்மா, அப்பாவின் தீராத பிரச்னையாகி விட்டது.

அந்தச் சமயத்தில்தான் நீலா, மாலாவின் மாமா மாதவன் வந்தார். அவர் இராணுவத்தில் இருக்கிறார். வருடம் ஒரு முறை விடுமுறையில் வருவார். வரும் பொழுதெல்லாம் நீலா, மாலாவைப் பார்க்க அவசியம் வந்து விடுவார். ''என்னக்கா, நீலா, மாலா எப்படியிருக்காங்க? ஒற்றுமையாயிருக்காங்களா?'' அக்கறையாகக் கேட்டார் அவர்.

''அதையேன் தம்பி கேட்கிறே...! இன்னமும் அதே மாதிரிதான் இருக்காங்க. வயசுதான் வளருதே தவிர, நல்ல குணம் வளரவே இல்லே. சின்னப் பிள்ளைகளாட்டம் பொழுதுக்கும் சண்டைதான்.''

''இப்பவும் அப்படித்தான் இருக்காங்களா...? 12 வயசுக்கு நல்லா விவரம் தெரிஞ்சு ஒற்றுமை மனப்பான்மை வந்திருக்கும்னு நெனேச்சேனே... ம்...! இருக்கட்டும், இந்த முறை நான் ஊருக்குப் போறதுக்குள்ளே அவங்களை மாத்தியாகணும் அக்கா.''

''என்னவோ முயற்சி செய்து பாரு தம்பி, அவங்க நல்லாயிருந்தா சந்தோஷம்தான்.''

''நீ ஒண்ணும் கவலைப்படாதேக்கா. அவங்க அவசியம் திருந்திடுவாங்க'' என்று அக்காவிற்கு ஆதரவாகவும், அன்பாகவும் சொன்னார் அவர்.

''நீலா, மாலா, இன்னிக்கு உங்க இரண்டு பேரையும் நான் வடபழனி கோயிலுக்குக் கூட்டிட்டுப் போகப் போறேன், கிளம்புங்க,'' என்று மாமா குரல் கொடுத்ததுமே, நீலா ஓடி வந்தாள்.

''மாமா, மாமா, வடபழனிக்கு வேண்டாம் மாமா. அங்கே கோயிலை விட்டால் ஒண்ணுமே இல்லே; அதுக்கு பெஸன்ட் நகர் அஷ்டலட்சுமி கோயிலுக்குப் போனாலும், சாமி கும்பிட்டு விட்டு ஜாலியா கடற்கரையில் விளையாடலாம்,'' என்று கெஞ்சினாள்.

வேகமாக ஓடி வந்த மாலா, ''மாமா, வடபழனிக்கே போவோம். அங்கே



கோயில் சுவரிலே பெயிண்டிங்ஸ் எல்லாம் ரொம்ப நல்லாயிருக்குமே... ஒவ்வொரு பெயிண்டிங்கிற்கும் ஒரு கதை அப்பா சொல்லியிருக்காங்க... அங்கேயே போவோம். மாமா,'' என்று கெஞ்சினாள்.

''முருகன் கோயில்தான்...''

''இல்லே, அஷ்டலட்சுமி கோயில் தான்...''

''வடபழனிதான்...''

''பெஸன்ட் நகர்தான்...'' என்று வழக்கம் போல் சண்டை சூடுபிடித்தது.

''சண்டை ஆரம்பமாயிடுத்தா...? நீங்க இந்த மாதிரி சண்டை போட்டா, நாம எங்கேயுமே போக வேண்டாம். நான் இப்பவே கிளம்பி ஊருக்குப் போறேன்,'' என்றபடி கோபம்மேலிட உயரத்தில் இருந்த தம் ஸூட்கேஸை இழுத்தார் மாதவன். அவர் இழுத்த வேகத்தில் சரியாக மூடப்படாத ஸூட்கேஸ் திறந்து கொண்டு, அதற்குள் இருந்த துணிமணிகளும், சில புத்தகங்களும் நாலாபுறமும் சிதறின.

''மாமா, நீங்க ஊருக்குப் போக வேண்டாம். கோவிச்சுக்காதீங்க மாமா,'' என்றுகெஞ்சியபடி இருவரும் கீழே கிடந்த புத்தகங்களையும் துணிகளையும் எடுத்து மாமாவிடம் கொடுத்தனர். கீழே விழுந்த புத்தகங்களில் ஒன்று ஓரத்தில் விரித்தபடி கிடந்தது. அதை எடுத்து வந்த நீலா, விரித்த பக்கத்தில் இருந்த படத்தை மாமாவிடம் காட்டி, ''இது என்ன மாமா?' இந்தப் பொண்ணுங்க ரெண்டு பேரும் குனிஞ்சு என்ன செய்யறாங்க?'' என்றாள் குழப்பமுடன். எட்டிப் பார்த்த மாலாவும், ''ஆமாம் மாமா, ஏன் என்னவோ மாதிரிக் குனிஞ்சு இருக்காங்க'' என்றாள்.

மாமா அந்தப் புத்தகத்தை வாங்கிப் பார்த்தார். அது டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் வெளியான 'ஆனந்த விகடன்.' ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளைப்பற்றிய அந்தக்கட்டுரையைப் படித்ததுமே நீலா, மாலாவுக்குக் காட்ட வேண்டும் என்று பெட்டியில் எடுத்து வைத்தது நினைவுக்கு வந்தது.

''நீங்க இரண்டுபேரும் இந்தப் படத்திலே இருக்கிற பெண்களை நல்லாப் பாருங்க. பிரேஸில் நாட்டைச் சேர்ந்த ஜூரஸி, நாதிர் என்னும் இந்த இரண்டு பெண்களும் பிறந்த போதே ஒட்டிக் கொண்டு பிறந்தவர்கள். அப்படிப் பிறக்கிறவங்களை ''சயாமீஸ் இரட்டையர்'' என்று சொல்வாங்க.''

''இந்த மாதிரி அடிக்கடி நடக்குமா மாமா?'' ஆச்சரியம் கண்களில் மிதக்கக் கேட்டாள் நீலா. இப்படி 'சயாமீஸ் இரட்டையர்' பிறப்பதே அரிது. அப்படிப் பிறந்தாலும் அவங்க



உயிர் பிழைக்கிறது என்பது இன்னும் அரிது. வளர்ந்து வரும் மருத்துவ விஞ்ஞானத்தின் உதவியாலும், ஒருவருக்கொருவர் அனுசரித்து வாழும் பண்பினாலும் இரண்டு பேரும் பதினேழு வருஷங்களாக வெற்றிகரமாக வாழ்ந்துக்கிட்டு இருக்காங்க.''

''ஏன் மாமா, இவங்களை ஆபரேஷன் பண்ணிப் பிரிச்சா என்ன?'' குழப்பமாக வினவினள் மாலா.

''அதுக்குச் சந்தர்ப்பம் கிடையாதும்மா. இரண்டு உயிரும் ஓர் உடலுமாக இருக்கிற அவங்களுக்கு இடுப்புக்கு மேலேதான் தனித்தனி உடம்பு, இடுப்புக்குக் கீழே ஒரே உடம்புதான். இங்கே வந்து இந்தப் படத்தை நல்லாப் பாருங்க. இரண்டு பேருக்கும் தனித் தனியா தலை, கை இதெல்லாம் இருந்தாலும் கால் இரண்டுதான். ஜீரண உறுப்புக்களும் இருவருக்கும் சேர்த்து ஒன்றுதான்.

''ஜீரண உறுப்பு ஒண்ணு இருந்தா யாராவது ஒருத்தர் ஆசைப்பட்டு அதிகமாச் சாப்பிட்டாலும் இரண்டு பேருக்கும் பொதுவா அஜீரணம் வந்துடுமே...''

''இரண்டு பேருக்கும் ஒரு ஜோடிக் கால்தான் இருக்கு, அப்ப ஒருத்தர் போக விரும்பற இடத்துக்கு இன்னொருத்தரும் அவசியம் போயாகணுமே...''

''தூங்கறது, குளிக்கறது... இப்படி எல்லாமே அவங்களுக்குக் கஷ்டமான வேலையாயிருக்குமே...'' இப்படியாக நீலாவும், மாலாவும் மாற்றி, மாற்றி அந்தப் பெண்களின் சிரமங்களை உணர்ந்து கேட்டபொழுது அவர்களுக்குக் கண் கலங்கிவிட்டது.

''சராசரி மனிதர்களுடைய எந்த ஒரு சாதாரண வேலையும் அவங்களுக்குக் கஷ்டம்தாம்மா. அதையெல்லாம் சமாளிச்சுக்கிட்டு ஒருத்தரை ஒருத்தர் அனுசரித்து நடந்து கொண்டு ஒற்றுமை உணர்வோடே இந்தப் பதினேழு வருஷங்களா வாழ்ந்து வர்றாங்கன்னு, அவங்களோட துணிச்சலையும் ஒற்றுமையையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்,'' என்றார் மாமா.

''அவங்களையும் நினைச்சு, எங்களையும் நினைச்சா வெட்கமாகவும், வேதனையாகவும் இருக்கு மாமா,''



என்றாள் நீலா தலைகுனிந்தபடி.

''நாங்க இனிமே எப்பவும் சண்டையே போட மாட்டோம் மாமா. ஒற்றுமையா இருப்போம்,'' என்ற மாலா, நீலாவின் அருகில் வந்து நின்றுகொண்டு அவள் தோளில் கை போட்டுக்கொண்டு அவள் முகம் பார்த்துச் சிரித்தாள். நீலாவும் தன் கையை மாலாவின் தோளில் போட்டு வளைத்தபடி, ''ஆமாம் மாமா, நாங்க எப்பவும் இதே மாதிரி சிரிச்சபடியே இருப்போம்,'' என்றாள்.

''இயற்கையின் மாறுபாடான படைப்பிலும், வேறுபடாத மனத்தோடு வாழ்கின்றனர் அந்த இரட்டையர்கள். அவர்களின் அயர்ந்திடாத நெஞ்சுரம்தான் மனத்தளவில் மாறுபட்டிருந்த இரட்டையராகிய நீங்கள் உயர்ந்திட வழிகாட்டியிருக்கு. இல்லையா...? உங்க வாழ்நாளில் ஒற்றுமை உணர்வை எப்படி மறக்காம இருப்பீங்களோ... அதே மாதிரி ஜூரணி, நாதிர் என்ற இந்த இரட்டையரையும் மறக்காமல் இருக்கணும்,'' என்று மாமா சொன்னபோது உணர்ச்சிப் பெருக்கில் அவர் நா தழுதழுத்தது.

''மறக்க மாட்டோம் மாமா, மறக்கவே மாட்டோம்,'' என்று நீலாவும், மாலாவும் ஒற்றுமையாகக் குரல் கொடுத்தனர்.

பிருந்தாவனம்



எத்தனை?

ஒரு மாட்டுக் கொட்டகையில் சில மாடுகளும் சில புல் கட்டுகளும் இருந்தன. அந்த மாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து புல் கட்டுகள் போட்டால், ஒரு மாட்டுக்கு எதுவுமே கிடைக்காது. நான்கு புல் கட்டுகள் வீதம் போட்டால், ஒரு கட்டு மிஞ்சும். மாடுகள் எத்தனை? புல் கட்டுகள் எத்தனை?

விடை: மாடுகள் — 6, புல் கட்டுகள் — 25.

— தீ. ச. வெங்கடேசன் (2815),
செங்கற்பட்டு.


என்ன கை?

முழு நிலா இப்படியா இருக்கும்?' என்று மாமாவின் ——— கையைக் கண்டு ——— கையில் ——— கையுடன் இருந்த ——— கைக்கு, வானில் தெரிந்த ——— கையைக் காட்டியதும், ——— கை வாயில் ——— கை தவழ்ந்தது.

விடை: வழுக்கை, படுக்கை, அழுகை, தங்கை, தாரகை, பொக்கை, புன்னகை.

— வி. பி. மதியரசி (14,639),
இடிந்தகரை.





காரணம்?

"சார், உங்க கடையிலே எழுத்துக்களைப் பெரிதாகக் காட்டும் மூக்குக் கண்ணாடி இருக்கா?"

"எதுக்குத் தம்பி?"

"பரீட்சையிலே எனக்கு முன்னாடி உட்கார்ந்து எழுதுகிற பையனோட எழுத்து குட்டி, குட்டியா இருக்கு. சரியாப் புரிய மாட்டேங்குது.


— ரெ. வளர்மதி (5207),
ரெத்தினம்பிள்ளை புதூர்.

என்ன செய்தீர்?

இன்ஸ்பெக்டர்: உங்கள் வீட்டில் திருட்டு நடந்த போது, நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

வீட்டுக்காரர்: போலீஸில் புகார் கொடுக்க திருடன் என்னென்ன திருடுகிறான் என்று ஒரு காகிதத்தில் குறித்துக் கொண்டிருந்தேன்.

— பி. ரேவதி (20,666),



கேம்பிரிட்ஜ்



இங்கிலாந்தில், கேம்பிரிட்ஜ் ஷயரில், 'கேம்' என்ற ஆற்றங்கரையில் உள்ளது கேம்பிரிட்ஜ் நகரம். இந்நகரத்துக்குப் பெருமையளிப்பது, இங்குள்ள மிகப் பழைமையான பல்கலைக் கழகம். 12 — ஆம் நூற்றாண்டிலிருந்து இது சிறந்து விளங்குகிறது.

இந்தப் பல்கலைக் கழகத்தில்தான் ஆங்கில இலக்கிய மேதைகளான மில்டன், பைரன், ஷெல்லி, புவிஈர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்த ஐசக் நியூட்டன் முதலியோர் கல்வி பயின்றிருக்கிறார்கள். நம் நேரு மாமாவும் இந்தப் பல்கலைக் கழகப் பட்டதாரிதான்.

— ராக. சௌ. கருணாகரன் (883), சேலம் — 1.

எல்லோரும் செய்யலாமே!

எங்கள் பள்ளித் தமிழாசிரியர் தமிழ்ப் பாடநூலில் உள்ள பாடல்களை, ராகத்துடன் பாடுகிறார். நாங்களும் ராகத்துடன் பாடுகிறோம். இதனால், மூன்று வகை நன்மைகள் கிடைக்கின்றன. ஒன்று, நமக்கு அப்பாடல் எளிதில் மனப்பாடமாகிறது. இரண்டாவதாக, இசை ஞானம் வளர்கிறது. மூன்றாவதாக, அப்பாடல் நமக்கு மனமகிழ்ச்சியைத் தருகிறது. இப்படி எல்லா ஆசிரியர்களும் செய்யலாமே!

— சிவ. இளங்கோவன் (3652), கீழைப் பெருமழை.



ஜன்னல் வரி?



வீட்டு வரி — கேள்விப்பட்டிருக்கிறோம். ஜன்னல் வரி — கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஒவ்வொரு வீட்டிலுள்ள ஜன்னல்களுக்கும் அவற்றின் அளவுக்கு ஏற்றபடி வரி விதித்து வசூலித்தார்களாம் 1789 — இல். எங்கே? அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியாவில்.

— மு. திருநாவுக்கரசு (16,742), மொரப்பூர்.



ஒரு வார்த்தை

வீணையின் தந்தி அறுந்து கிடந்தது. தூசு படிந்து கிடந்த வீணை துன்பத்தை அறிவித்துக் கொண்டிருந்தது.

பக்கத்திலிருந்த மத்தளம் அதைப் பார்த்து, "வீணையே! கை கொஞ்சம் பலமாக விழுந்தாலே நீ அறுந்து போகிறாய். என்னதான் உன்னிடம் அருமையான ஓசை இருந்தென்ன? என்னைப் பார். நான் எத்தனை அடிகளையும் தாங்கிக் கொண்டு கம்பீரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்!" என்று கர்வமாகச் சொன்னது.

வீணை அமைதியாகப் பதில் சொன்னது: "மானஸ்தர்களுக்கு ஒரு வார்த்தை போதும்."

— 'கண்ணதாசனின் குட்டிக் கதைகள்' என்ற நூலிலிருந்து — வி. புகழேந்தி, ஆமதாபாத்.



இடமும், வலமும்

என் தாய்மொழியான தெலுங்கில், 'அழுகிறவனுக்கு இடது பக்கமும், தைப்பவனுக்கு வலது பக்கமும் இருக்கக் கூடாது' என்று ஒரு பழமொழி உண்டு.

ஏன் தெரியுமா?

அழுது கொண்டிருப்பவன், தன் இடது கையால் மூக்கைச் சிந்திப் போடலாம். அதுபோலவே, தைத்துக் கொண்டிருப்பவன் வலது பக்கமாக வலது கையால் ஊசியை இழுப்பான். எதற்கு வம்பு?

— போ. பாலரிஷி (13,015), எட்டையாபுரம்.

தம்பி வைத்த பெயர்கள்


என் தம்பியின் பெயர் பிரதீப். யு. கே. ஜி. படிக்கும் அவன், வானில் தெரியும் பிறைச்சந்திரன், அரைச் சந்திரன், முழுச் சந்திரன், ஆகியவற்றிற்கு வெவ்வேறு பெயர் சொல்லி அழைப்பான்.

அவன் வைத்த பெயர்கள்:

C Moon — பிறைச்சந்திரன்
D Moon — அரைச் சந்திரன்
O Moon — பூரணச் சந்திரன்

அமாவாசையை அவன் **No Moon** என்பான்.

— ஏ. பிரபு (641), பரோடா.





ஏன்? ஏன்?

1. நாக்கு இனிப்பதேன்?
   நாய் ஓடுவதேன்?
2. குப்பை தேங்குவதேன்?
   குழந்தை அழுவதேன்?
3. இரசம் மணப்பதேன்?
   இரத்தம் பெருகுவதேன்?
4. மலரை வண்டு நாடுவதேன்?
   பல குடும்பங்கள் கெடுவதேன்?
5. திருப்பூர் குமரன் இறந்ததேன்?
   தேரைப் பாரி தந்ததேன்?

விடை: 1. கற்கண்டால்; 2. எடுப்பாரற்று; 3. பெருங்காயத்தால்; 4. மதுவால்; 5. கொடியைக் காக்க.

— ஆர். செந்தில்குமார் (17,796), கொழும்பு — 6.



மனிதப் பாலம்

கடந்த மார்ச் மாதம் சீபுருக் என்ற இடத்தில் நடந்த கப்பல் விபத்தில் 188 அப்பாவிகள் இறந்தனர். அப்போது ஆண்ட்ரூ பார்க்கர் என்ற 33 வயதுக்காரர் ஒரு தீரச் செயல் புரிந்தார்.

விபத்தில் சிக்கிய கப்பலிலிருந்து

ஐந்தே முக்கால் அடி தூரத்தைக் கடந்தால், மற்றவர்கள் தப்பிவிட முடியும் என்ற சூழ்நிலை இருந்தது. ஆறு அடி மூன்று அங்குல உயரமுள்ள ஆண்ட்ரூ குப்புறக் கவிழ்ந்து படுத்து மனிதப் பாலம் அமைத்தார். அந்தப் பாலத்தின் மீது தவழ்ந்து இருபது பயணிகள் உயிர் தப்பினர். இத்தகைய வீரச் செயலைச் செய்த அவருக்கு 'மேன் ஆஃப் தி இயர்' (Man of the year) என்ற பட்டம் கிடைத்துள்ளது.

— டி. எல். சிவகுமார் (9815),
வந்தவாசி.



இறங்கியவரும் குதித்தவரும்

பாரச்சூட் பற்றி உங்களுக்கு நன்கு தெரியும். பிரெஞ்சுக்காரரான 'ஜாக்ஸ் கார்னர்' என்பவர் 1897—இல் கண்டுபிடித்தார். பாரிஸ் நகரில் 700 மீட்டர் உயரத்திலிருந்து அவர் இறங்கிக் காட்டினார். விமானத்திலிருந்து 1912—இல் அமெரிக்கரான காப்டன் பெர்ரி என்பவர் குதித்துக் காட்டினார்.

— சிவ. அய்யப்பன் (12,088),
இராஜாக்கமங்கலம்.

பெருந்தன்மை

மிகச் சிறந்த இராமபக்தரான இராமானுஜர் ஒருநாள் தெருவழியாக, தம் சீடர்களுடன் இராமரைப் பற்றிப் பாடிக் கொண்டே வந்தார். வழியில் சில சிறுவர்கள் கடவுளின் உருவச் சிலையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.



அப்போது இராமானுஜரின் சீடர்களில் ஒருவர் ஓடிச் சென்று, அச்சிறுவர்களைப் பார்த்து, "அடேய் பயல்களா, ஆச்சாரியர் வருகிறாரல்லவா? ஒதுங்கிப் போய் விளையாடுங்கள்" என்றார்.

உடனே சிறுவர்களில் ஒருவன் துடுக்குத்தனமாக, "உங்களுக்கு ஆச்சாரியார்தான் உயர்ந்தவர் என்றால், எங்களுக்கு நாங்கள் வைத்துக் கும்பிடும் இந்தச் சாமிதான் உயர்ந்தது?" என்றான்.

அதைக் கேட்டு மகிழ்ந்த இராமானுஜர் சிறுவர்களின் பூஜை முடியும் வரை அங்கேயே இருந்து அவர்கள் கொடுத்த பிரசாதத்தையும் வாங்கிக் கொண்டுதான் சென்றார்.

— ஆர். சிவசங்கரி (19,957),
ஓமலூர்

உடம்பில் எலும்புகள்

மனித உடலில் உள்ள மொத்த எலும்புகளின் எண்ணிக்கை 206.

அச்சு எலும்புகள்
முதுகு எலும்புத் தொடர் — 26.
தலை எலும்புகள் — 29.
விலா எலும்புகள், மார்பு எலும்பு — 25.

சேர்க்கை எலும்புகள்
கை எலும்புகள் — 64
கால் எலும்புகள் — 62,
மொத்தம் 206.

— ப. தேவேந்திரகுமார் (1418),
சென்னை — 7.



கவிதை பிறந்த கதை:

செய்யும் தொழிலே தெய்வம்

— வெ. நல்லதம்பி —

சென்னைத் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணியாற்றி வருபவர் கவிஞர் வெ. நல்லதம்பி அவர்கள். அவர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது நடந்த நிகழ்ச்சி ஒன்று, கவிதை பிறப்பதற்குக் காரணமாக அமைந்தது என்று கூறுகிறார்.

''எங்கள் குடும்பம் விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருந்த காலம். குறைந்தவருமானத்தில்குடும்பவண்டி ஓடிக் கொண்டிருந்தது. வருவாயைப் பெருக்கக் கால்நடைகளை வளர்த்து ஆதாயம் தேட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனக்கோ படிக்க வேண்டும் என்று கொள்ளை ஆசை. குடும்பச் சூழ்நிலையைப் பார்க்கும் போது, 'நம்மால் படிக்க முடியுமா?' என்ற ஏக்கம் எனக்குள் சூழ்ந்து கொண்டது. நல்லவேளை, என் படிப்புக்குப் பெற்றோர்கள் தடை போடவில்லை. வாரத்தில் சனி, ஞாயிறு பள்ளி விடுமுறை நாட்களில், ஆடு மாடுகளைமேய்த்துவரும்படி என்னை அனுப்புவார்கள். சிறுவன் தானே? நானும் துள்ளிக் குதித்துக் கொண்டே ஆடு மாடு மேய்க்கச் செல்வேன்.

''எங்கள் ஊருக்குப் பக்கத்தில் உப்புக்குளம் என்ற ஓர் இடம் இருந்தது. அந்தப் பகுதியில் உவர் மண் அதிகமாக இருக்கும். அங்கே வண்ணார்கள் வழக்கமாகத் துணி துவைப்பார்கள். துணி வெள்ளை, வெளேரென்று வெளுக்க, உவர் மண்ணை வாரி ஈரத் துணியில் போட்டுக் கொஞ்ச நேரம் காய வைப்பார்கள். பின்னர் மேல்புறம் மண்ணால் மூடப் பட்டிருக்கும் அடுப்பின் மீது அந்தத் துணிகளைப் போட்டுச் சூடு ஏற்றுவார்கள். இதை 'வெள்ளாவி வைத்தல்' என்பார்கள். சலவை செய்ததும் துணிகளை அவரவர் வீட்டிலே கொண்டு வந்து கொடுப்பார்கள். இந்தக் காட்சியை, ஆடு மாடு மேய்க்கப்போகும்போதுநாள்தோறும்பார்ப்பேன். அங்குள்ள சலவைத் தொழிலாளி ஒருவரது மகன் என்னுடன் படித்துக் கொண்டிருந்தான். அப்படியே அவனையும் நான் பார்க்கச் செல்வேன். நானும் அவனும் இணைபிரியா நண்பர்கள்.

எங்களுக்குள்ளே ஏற்றத் தாழ்வு எதுவும் இல்லை. சாதி வேறுபாடுகளும் குறுக்கே நிற்கவில்லை.

''வண்ணார் மகன் என்று நாங்கள் யாரும் இழிவாக நினைக்கவில்லை. செய்யும் தொழில் எதுவாயினும் அதில் 'மேல் கீழ்' என்பது இல்லை. செய்யும் தொழிலே தெய்வம் அல்லவா? சின்னஞ்சிறு வயதில் பதிந்த அந்த அனுபவம், அன்றையிலிருந்தே மனத்தில் இருந்து வருகிறது. அதுவே நாளடைவில் பாடலாகவும் மலர்ந்தது.


அந்தப் பாடல்:

எங்கள் ஊரின் மேற்கே
இருக்கிற தோர் ஏரி!
அங்கு தினமும் நானே
அயர்வு போக்கப் போவேன்.

துணி வெளுக்கும் குப்பன்
தினமும் அங்கு வருவார்.
மணிக் கணக்காய் வெளுப்பார்,
மாயச் செயல் செய்வார்.

செய்யும் வேலை தன்னைச்
சிறக்க அழகாய்ச் செய்வார்.
வெயில் தன்னைப் பாரார்
விரும்பித் துணியை வெளுப்பார்.

யாவர் எதைச் செயினும்
அதில் பெருமை உண்டு.
தேவை யற்ற 'மேல்கீழ்'
தொழில் எதிலும் இல்லை!



மணப்பாறை, கழக உயர்நிலைப் பள்ளியில் இவர் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம்.

ஒருநாள் இவர் புறநானூறு வகுப்பை நடத்திக் கொண்டிருந்தார். 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்று திருக்குறளில் வரும் கருத்தினையொத்த பாடல் ஒன்று புறநானூற்றிலும் வருகிறது. அதாவது, 'இந்த உலகம் எதனால் வாழ்கிறது?' என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டது அப்பாடல். அந்தப் பாட்டை மாணவர்களுக்குப் புரியும்படி சொல்ல வேண்டும். அதாவது அவர்களை அதற்குஆயத்தப்படுத்தவேண்டும். நிலத்தில் விதை ஊன்ற வேண்டுமானால், முதலில் அதை நன்கு பண்படுத்த வேண்டுமல்லவா? அதைப் போல.

'உலகம் எதனால் உள்ளது?' கவிஞர் கேள்வி கேட்கிறார் மாணவர்களைப் பார்த்து. உடனே மாணவர்கள்,

"சூரியன், சந்திரன், காற்று இவற்றால் இந்த உலகம் நிலைத்து இருக்கிறது சார்!" என்று பதில் சொல்லுகிறார்கள்.

உடனே கவிஞர் 'இல்லை!' என்று சொல்லிவிட்டு, புறநானூற்றுப் பாடலின் கருத்தை விளக்கினார்:

"இந்திரனின் அமுதமே கிடைப்பதாக இருந்தாலும் அது தமக்கு இனியது எனக் கருதித் தாமே தனித்து உண்ணாதவர்கள், கோபமே இல்லாதவர்கள், புகழ் என்றால் உயிரையும் கொடுப்பவர்கள், பழி என்றால், உலகம் முழுவதையும் கொடுத்தாலும் பெற்றுக் கொள்ள மறுப்பவர்கள், அயர்வே இல்லாதவர்கள், அத்தகைய பெருமையுள்ளவர்களே உயர்ந்தோர்கள்; பண்பாளர்கள். அவர்களே தமக்கென எதுவும் செய்து கொள்ளாமல், பிறர்க்கென உழைக்கும் இயல்பினர். அவர்களாலேயே இந்த உலகம் வாழ்கிறது."

ஆசிரியர் சொன்னதை மாணவர்கள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

கவிஞர் மேலும் தொடர்ந்து, புறநானூற்றுப் பாடல் கருத்தை ஒட்டிய திருக்குறளையும்நினைவுபடுத்தினார்.

'பண்புடையார் பட்டுண்டு உலகம்
அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.



அன்று ஆசிரியராக இருந்து பாடம் நடத்திய நிகழ்ச்சி, இன்று பாடலாகப் பிறந்தபோது கவிஞருக்கே மகிழ்ச்சி தருகிறது. அந்தப் பாடல் இதுதான்:

ஒருநாள் முருகன் வகுப்பினிலே
ஒருபேச்செழுந்தது விறுவிறுப்பாய்!
முருகன் எழுந்து கேட்டானே:
"உலகம் எதனுல் உள?" தென்றான்.

உலவும் காற்றால் உயிருண்டு!
உணவு உள்ளதால் உலகமுண்டு!
பலரும் பலவிடை சொன்னாரே!
பணமும் காரணம் என்றாரே!

மேலும் ஒருவன் எழுந்து நின்ருன்.
"மேன்மை யுடைய வல்லரசு
நாலே குண்டில் தொலைத்திடுவர்
நல்லவேளை உள" தென்றான்.

முருகன் முடிவாய்ச் சொன்னானே
"முன்பு நீங்கள் உரைத்ததெல்லாம்
முற்றும் உண்மை ஆனாலும்
முதற்பொருள்வேறுளதென்றானே!

"திருக்குறள் படித்தால் தெரிந்துவிடும்
தெள்ளிய உண்மை புலப்படுமே
உருப்படியாக உல(கு) இருக்க
உதவும் பண்பே விடை" என்றான்!

பேட்டி: பி. வி. கிரி.

அழாதே பாப்பா சிரித்தது!

—தம்பி சீனிவாசன்—



சின்னப் பாப்பா அழுகிருள்,
சிரிக்க வில்லை, அழுகிருள்!

'அழாதே பாப்பா' என்கிறேன்.
அப்படியும் அழுகிருள்.

கையைத் தட்டிப் பார்க்கிறேன்,
கைகால் உதறி அழுகிருள்.


'என்ன வேண்டும்?' என்கிறேன்,
என்னைப் பார்த்து அழுகிருள்.

பாடல் வரிகள் சொல்கிறேன்;
பதறிப் பதறி அழுகிருள்!

குரலை உயர்த்தி அடக்குவேன்;
குமுறிக் குமுறி அழுகிருள்!

சும்மா இருந்து பார்க்கிறேன்,
அம்மா அருகில் வருகிருள்.

அம்மா அருகில் வந்ததும்,
அடடே, பாப்பா சிரிக்கிருள்!





மேலே உள்ள ஒவ்வொரு படமும் ஒரு பழமொழியைக் குறிக்கிறது.
பழமொழிகள் நினைவுக்கு வருகின்றனவா? விடை 77 ஆம் பக்கம்.

பிருந்தாவனக் கதையரங்கம்

திருட்டும் திருத்தமும்

த. உமாமகேஸ்வரி



அன்று ஞாயிற்றுக்கிழமை. போலீஸ் இன்ஸ்பெக்டர் கனகராஜ் தம் வீட்டில் ஓய்வாக அமர்ந்து ஒரு வாரப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார். அவர் பெயரைக் கேட்டாலே புகழ் பெற்ற கேடிகள் கூட நடுங்குவார்கள். அன்று முக்கியமான வழக்குகள் எதுவும் இல்லாததால் அவர் வீட்டில் இருந்தார்.

அப்பொழுது அவருக்குக் காப்பி எடுத்து வந்த அவர் மனைவி மீனா தயங்கியவாறு நிற்பது தெரிந்தது.

"என்ன மீனா? என்ன வேண்டும்? ஏன் இப்படித் தயங்கி நிற்கின்றாய்?" என்று கேட்டார் கனகராஜ்.

"ஒண்ணுமில்லீங்க. நம்ப பையன் குமார் விஷயம்தான்."

"குமார் விஷயமா? குமாருக்கு என்ன ஆயிற்று?" என்று மெலிதான அதிர்ச்சியோடு கேட்டார் கனகராஜ். குமார் மீது உயிரையே வைத்திருப்பவர் அவர்.

"வந்து, நம்ம குமார் வகுப்பில் படிக்கும் சக மாணவன் ஒருவனுடைய பேனாவைத் திருடி விட்டான் என்று அவனது வகுப்பாசிரியர் என்னை இன்று காலை கடைத் தெருவில் பார்த்தபோது கூறினார். இதை இப்படியே வளரவிடக் கூடாதுன்னுதான் உங்களிடம் சொல்றேன்" என்றாள்.

மீனா சொன்ன செய்தியைச் சற்று அதிர்ச்சியோடு கேட்டார் கனகராஜ். கவலையோடு சிந்தித்த அவர், மீனாவை நோக்கி, "மீனா, நீ இதைப் பற்றிக் குமாரிடம் எதுவும் கேட்காதே! நான் பார்த்துக் கொள்கிறேன்," என்று கூறிவிட்டுக் குளியலறைக்குள் நுழைந்தார்.

பகல் ஒரு மணி இருக்கும். குமார் விளையாடிவிட்டுப் பசியோடு வீட்டிற்குள் நுழைந்தான்.

"அம்மா, பசிக்குதம்மா. சாதம் போடுகிறாயா?" என்றவாறு உள்ளே நுழைந்த அவனைப் பார்த்து மெலிதாகப் புன்னகைத்த கனகராஜ், "குமார்,! வாப்பா, இருவரும் ஒன்றாகவே சாப்பிடலாம்," என்றார். இருவரும் ஹாலுக்குச் சென்று டைனிங் டேபிளின் முன் அமர்ந்தனர்.

"குமார், நேற்று ஒரு கேடியின் படத்தைப் பார்த்து, 'இவன் யார்?' என்று கேட்டாயல்லவா? அவன் கதையை இன்று நான் உனக்குச் சொல்லப் போகிறேன்," என்றார் கனகராஜ்.

"யார் அப்பா? அந்தக் கேடி பக்கிரிசாமியின் கதையா?" என்று வினவினான் குமார்.

"ஆமாம், குமார். இன்று மிகப் பெரிய கேடியாகி எங்களுக்கே சவால் விடும் இவன், தன் சிறு வயதில் எவ்வாறு இருந்திருப்பான் என்று எண்ணுகிறாய்?"

"இவனா அப்பா? இவன் தன் சிறு வயதிலும் இவ்வாறேதான் இருந்திருப்பான், இல்லையா?" என்று கேட்டான் குமார்.

"இல்லை குமார்! சிறு வயதில் இவனை நல்ல பையன் என்றுதான் நினைத்திருந்தனர். ஆனால், அப்பொ

ழுதே இவன் மனத்தின் ஒரு மூலையில் திருட்டுப் புத்தி இருந்திருக்கிறது. பள்ளியில் படிக்கும் பொழுது சக மாணவர்களின் பேனா, பென்சில், புத்தகம் இப்படித் திருட ஆரம்பித்தான். ஆசிரியர் கண்டித்த போது அவரையே எதிர்த்து, பள்ளியை விட்டே விலகினான். பின்னர், பேருந்துகளிலும், புகைவண்டிகளிலும் பிக் பாக்கெட் அடிக்க ஆரம்பித்தான். அப்பொழுது நான் அவனைக் கூப்பிட்டுக் கண்டித்து, நல்ல புத்தி கூறி அனுப்பினேன். ஆனால், அவன் கேட்கவில்லை. நாளடைவில் வளர்ந்த அவனுடைய திருட்டுப் புத்தி, கடைசியில் அவனை மிகப் பெரிய கேடியாக்கி விட்டது. எப்படிப் பார்த்தாயா? அவன் பள்ளிக்கூடத்தில் பேனா, பென்சில், புத்தகங்களைத் திருடிய போது, அவன் பெற்றோரும் ஆசிரியர்களும், 'சிறு பையன்தானே! நாளடைவில் திருந்தி விடுவான்' என்றெண்ணி, அவன் மீது அதிக கவனம் செலுத்தாமல் விட்டு விட்டனர். அதுவே, அவனை மிகப் பெரிய திருடனாக மாற்றி விட்டது. இப்பொழுதோ, அவன் பெற்றோர் அவனைத் தம் மகன் என்று கூறிக் கொள்ளவே கூசுகின்றனர். உற்றாரும், உறவினரும், மற்றவர்களும் கூட அவனை வெறுக்கின்றனர். இந்நிலை உனக்கு வரவேண்டுமா குமார்?'' என்றுவினவி விட்டுக் குமாரின் முகத்தைப் பார்த்தார் கனகராஜ்.

அவன் முகத்தில் இருள் படர்ந்திருந்தது. கண்களில் நீர் நிறைந்திருந்தது. ''அப்பா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று குழப்பம் மேலிடக் கேட்டவாறு அவரைப் பார்த்தான் குமார்.

''குமார்! நீயும் திருடன் என்றபட்டப் பெயரைச் சுமக்க விரும்புகின்றாயா?'' என்று அவர் கேட்டதுதான் தாமதம்! அவர் மடியில் விழுந்து கதறியவாறு, ''அப்பா! இனி எந்தச் சூழ்நிலையிலும் நான் பிறருடைய பொருளைத் திருட மாட்டேன். இது சத்தியம்!'' என்று அழுதவாறு கூறினான் குமார். நிமிர்ந்து, மீனாவை வெற்றிப் புன்னகையுடன் பார்த்த கனகராஜின் கண்களில், 'இவன் இனி திருட மாட்டான்' என்ற நம்பிக்கை ஒளிர்ந்தது!



சங்கிலியாபுரத்தில் ராமன் என்பவர் வாழ்ந்து வந்தார். தெய்வ பக்தி உடையவர். அவர் மனைவி ஏழைகளைத் தாய் போல ஆதரித்து வேண்டிய உதவிகளைச் செய்வார். இறைவன் கருணை ராமனுக்குத் துணை செய்தது. அவருடைய தொழில் வளம் பெருகியது. ராமன் பட்டும் சரிகையும் உடுத்துக் கோவிலுக்குப் போவார். அவர் மனைவி அணிகலன்கள் அணிந்து மகாலட்சுமி போல் இருந்தார்.

ராமனுடைய எதிர் வீட்டில் சாமன் இருந்தான். சாமனுடைய உள்ளத்தில் பொறாமைத் தீ பொங்கியது. உள்ளம் வெம்பினான். ராமனுடைய செல்வ நிலையைக் கண்டு பெருமூச்சு விட்டான். 'ராமன் ஏழையாகிப் பிச்சை எடுக்க மாட்டானா? ராமன் வீட்டில் சாவு வராதா?' என்று எண்ணுவான். ராமனை அழிக்க என்ன என்ன செய்யலாம் என்று ஆராய்ந்தான்.

அங்குள்ள மலை அடிவாரத்தில் குள்ளன் என்னும் பெயருடைய ஒரு கள்ளன் வாழ்ந்து வந்தான். அவன் பரம துஷ்டன். சாமன் அவனிடம் சென்று, தான் அருமையாகத் தேடி வைத்திருந்த ஆயிரம் ரூபாய் நோட்

டுக்களைக் கொடுத்தான். பணத்தைக் கண்ட குள்ளன் திகைத்தான்; மகிழ்ந்தான்.

சாமன், ''குள்ளா! என் எதிர் வீடு ராமன் வீடு! நீ வருகின்ற அமாவாசை அன்று இரவு, அவன் வீட்டுத் தெருக் கதவையும் தோட்டத்துக் கதவையும் வெளியில் பூட்டி, வீட்டின் மீது மண்ணெண்ணெயை ஊற்றிக் கொளுத்தி விடு. அப்படிச் செய்வதற்குத்தான் இந்த ஆயிரம் ரூபாய்'' என்றான். கள்ளன் பணத்தை மகிழ்ச்சியோடு எடுத்துக் கொண்டான்.

''ஐயா, வீட்டிற்குத் தீ வைப்பது சுலபம். ஆனால், எனக்கு ராமன் வீடு தெரியாதே?'' என்றான்.

''என் வீட்டிற்கு எதிர் வீடுதான் ராமன் வீடு'' — சாமன் கூறினான்.

''அட, உன் வீடும் தெரியாதே'' என்று கூறினான் கள்ளன்.

''எங்கள் ஊரில் பிள்ளையார் கோவில் இருக்கின்ற தெருவில் 35—ஆம் நெம்பர் வீடு ராமன் வீடு'' — என்று சாமன் கூறினான்.

''அட, எனக்குப் படிக்கத் தெரியாது. பகலில் வந்தால் என்னைக் காவல்துறையினர் ஜெயிலில் போட்டு விடுவார்கள். நான் வெள்ளைக் காகிதத்தில் ஒரு தாமரைப்பூ தயார் செய்து தருகிறேன். அதை அமாவாசை அன்று இரவு 10 மணிக்கு ராமன் வீட்டு ஓட்டிலே செருகி வை. அந்த அடையாளத்தை வைத்து வேலையை முடித்து விடுவேன்!'' என்று கூறி ஒரு வெள்ளைக்காகிதத்தாமரைப்பூவைத் தந்தான் கள்ளன்.



சாமன் அந்தக் காகிதப் பூவைக் கொண்டு வந்து, தன் வீட்டு மாடத்தில் வைத்தான். அவன் மனைவி, ''இது ஏது? எதற்கு?'' என்று கேட்டாள்.

சாமன், ''இது ஒரு மந்திரப் பூ. இது நம் வீட்டில் இருந்தால், நம் வீடு கிடுகிடுவெனச் செல்வச் செழிப்பு அடையும்'' என்று உண்மையை மறைத்துச் சொன்னான்.

அன்று அமாவாசை. சாமன் மாலையில் போய்க் கள்ளனிடம் இரு பூட்டுகளும் மண்ணெண்ணெய் டின்னும் தந்து விட்டு வந்தான்.

இரவு பத்து மணி. ராமன் கோவிலுக்குப் போய் வந்து தெய்வத்தைத் தொழுதார். பின், உண்டு படுத்து உறங்கினார்.

சாமன் காகிதப் பூவை இரவு பதினொரு மணிக்கு ராமன் வீட்டு ஓட்டில் செருகிவிட்டு, ''டேய், ராமா! பணக்காரப் பயலே! தீயில் குடும்பத்துடன் கருகி இறந்து போ!'' என்று கூறி விட்டுப் படுத்து உறங்கினான்.

இரவு பன்னிரண்டு மணிக்கு சாமன் மனைவி தூக்கம் வராததால், காற்று வாங்கத் தெருவுக்கு வந்தாள். ராமன் வீட்டின் ஓட்டில் காகிதப் பூவைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்.

'ஆ! நம்ம வீட்டில் இருந்த மந்திரத் தாமரைப்பூ இவங்க வீட்டிற்கு எப்படிப் போயிற்று?' என்று எண்ணி அதை எடுத்துத் தன் வீட்டு ஓட்டில் செருகி, ''என் மந்திரப் பூவே! நீ என் வீட்டில் இரு'' என்று கூறி அப்பூவைக் கும்பிட்டுவிட்டு உள்ளே போய்ப் படுத்தவள் நன்றாகத் தூங்கியும் போனாள்.

இரவு ஒரு மணிக்கு இரு பூட்டுகளுடனும், மண்ணெண்ணெய் டின்னுடனும் முகமூடி அணிந்து கள்ளன் வந்தான். தாமரைப்பூ எந்த வீட்டில் இருக்கிறது என்று பார்த்தான். அவனுக்குத்தான் எது சாமன் வீடு, ராமன் வீடு என்று தெரியாதே! 'தாமரைப் பூ இருக்கின்ற சாமன் வீட்டை முன்னும் பின்னும் பூட்டி மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்தான்.

அப்போது, தற்செயலாகக் கண் விழித்த ராமன், சாமன் வீடு தீப்பற்றி எரிவதைக் கண்டு திடுக்கிட்டு, அக்கம்

பக்கத்திலுள்ளவர்களின் துணையுடன் நெருப்பை அணைத்துப் பூட்டை உடைத்துச் சாமன் குடும்பத்தைக் காப்பாற்றினார்!

ராமனின் பெருந்தன்மையைக் கண்டு சாமன் வெட்கித் தலைகுனிந்தான்.

செல்வம் எங்கே?

ஆர். ராதாகிருஷ்ணன்



பூங்குடி என்னும் சிற்றூரில் பெரியவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் அனாதைக் குழந்தைகளை வளர்த்து வந்தார். எனவே, அவரிடம் அவ்வூர் மக்களுக்கு மிகுந்த அன்பும் மரியாதையும் இருந்தன.

ஒருநாள் அவ்வூரார் பெரியவரைச் சொற்பொழிவு ஆற்ற அழைக்க, அழைப்புக்கு இணங்கிச் சொற்பொழிவு ஆற்றினார். இவ்வாறு அவர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தபோது இடையிலேயே, ''என் இல்லத்திலே நிறையச் செல்வங்கள் இருக்கின்றன'' என்று சொல்லி வைத்தார்.

அச்சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு திருடன், 'ஆ! நமக்கு நல்ல வேட்டைதான். இந்தப் பெரியவர் வீட்டில் நிறையப் பணம் இருக்கிறது!' என்று நினைத்தான்.

அன்று இரவே சந்தடியில்லாமல் அந்தப் பெரியவரின் இல்லத்திற்குள் நுழைந்தான். அங்கிருந்த அலமாரிகள், மேஜை அறைகளைத் தேடிப் பார்த்தான். ஒரு ரூபாய் கூடக் கிடைக்கவில்லை. எனவே பெரியவரிடமே மிரட்டிக் கேட்டுவிட வேண்டும் என எண்ணி அவரை எழுப்பினான். திடுக்கிட்டு எழுந்த பெரியவரிடம், ''ஏ, கிழவா, நீ சொற்பொழிவாற்றும் போது 'என் இல்லத்தில் நிறையச் செல்வங்கள் இருக்கின்றன' என்று கூறினாயே. எங்கே அந்தச் செல்வம்? உடனே காட்டு, இல்லையென்றால் இந்தக் கத்தியால் குத்தி விடுவேன்,'' என்று மிரட்டினான்.

''நண்பனே! நீ கேட்கும் செல்வம் இங்கு எவ்வளவுதான் தேடிப் பார்த்தாலும் உனக்குக் கிடைக்காது. நான் சொற்பொழிவில் கூறிய 'செல்வங்கள்,' இதோ உறங்கிக் கொண்டிருக்கும் என் அன்பிற்கினிய செல்வங்களைத்தான்,'' என்று தூங்கிக்கொண்டிருந்த குழந்தைகளைக் காண்பித்தார். உடனே, அத்திருடன் அவருடைய பேச்சில் நெகிழ்ந்து போய் அவர் காலடியில் விழுந்து, ''ஐயா, நான் இனி திருட மாட்டேன். உங்களின் இன்மொழி கேட்டு உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வேன். என்னையும் இந்த அனாதைக் குழந்தைகளில் ஒருவனாக ஏற்றுக் கொள்ளுங்கள்!'' என்று கூறிக் கண்ணீர் விட்டான்.

ஒரு திருடனைத் திருத்திய மகிழ்ச்சியில் அவனை அணைத்துக் கொண்டார் பெரியவர்.

பழமொழிப் புதிர் — விடைகள்:

புதிர் — 37: அச்சில்லாமல் தேர் ஓடுமா?

புதிர் — 38: எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம்.

(வி)சித்திரச் செய்திகள்



படிப்பதில் சாதனை

உலகத்திலேயே மிகவும் வேகமாகப் படிக்கக் கூடிய சிறுவன், கொரியாவில் உள்ள ஒரு பத்து வயதுச் சிறுவன். அவன் ஒரு நிமிடத்திற்கு 12 லட்சம் எழுத்துக்கள் உள்ள பக்கங்களைப் படித்துச் சாதனை புரிந்திருக்கிறான்! வயது வந்தவர்களாலேயே முடியாத காரியம் இது!

100 தடவை எதிரொலி

அயர்லாந்தில் உள்ள காரன்டுவோ என்னும் மலையின் உச்சியில் இருந்து ஒருவர் உரத்த சத்தம் எழுப்பினால், அந்தச் சத்தம் 100 தடவைகள் திரும்பத் திரும்ப எதிரொலிக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.



மிக நீளமான பாலம்



ஜப்பானில், கடலுக்கு மேல், ஹோன்ஷு தீவுக்கும் ஷிகோகு தீவுக்கும் இடையே 37 கிலோ மீட்டர்கள் தூரத்திற்குப் பாலம் கட்டியிருக்கிறார்கள். இந்தப் பாலத்தின் மேல், ரயில்களும் மற்ற வாகனங்களும் போகலாம். கடல்மேல் இதுவரை இவ்வளவு நீளமான பாலம் கட்டப்பட்டதில்லை!


குரங்கு காப்பாற்றியது



ஹூப்ளி அருகே லட்சுமேஷ்வர் என்னும் இடத்தில் ஒரு குரங்காட்டி இருக்கிறான். ஒருநாள், அவன் தன் குரங்கை ஒரு மரத்தில் சங்கிலியால் கட்டிப்போட்டு விட்டு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு கருநாகம் படமெடுத்தபடி குரங்காட்டியைக் கொத்த விரைந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்து விட்ட குரங்கு, எப்படியோ சங்கிலியிலிருந்து விடுபட்டு வந்து அந்தப் பாம்புடன் சண்டையிட்டு அதைக் கொன்று, தன் எஜமானனைக் காப்பாற்றி விட்டது!


ஆடுகளுக்கும் பல் கட்டலாம்

ஆடுகளின் பற்கள் தேய்ந்துவிட்டால், புல் மேயாமல் பட்டினியால் சாக நேரிடும். இதைத் தவிர்க்க, அமெரிக்காவில் ஆட்டுப் பண்ணைக்காரர் ஒருவர், பற்கள் தேய்ந்த தன் ஆடுகளுக்கு உலோகத் தகடுகளாலான செயற்கைப் பற்களைக் கட்டிவிட்டிருக்கிறார். இப்போது அந்த ஆடுகள் நன்றாகப் புல் மேய்கின்றன!



நாய்களின் நன்றி

இலங்கையின் தெற்குப் பகுதியில் உள்ள காட்டில், காட்டுப் பன்றியைப் பிடிக்க வைத்திருந்த கண்ணிப் பொறியில் ஒரு விவசாயி தெரியாமல் மாட்டிக் கொண்டு இறந்துவிட்டார். அவருடன் சென்றிருந்த அவரது இரு நாய்களும் இரண்டு நாட்கள் வரை தன் எஜமானரின் பிணத்தைக் காவல் காத்து வந்தன. ஊரிலிருந்து ஒருவரும் தேடி வராததால், ஒரு நாய் பிணத்தைக் காவல் காக்க, மற்றொரு நாய் ஊருக்குள் சென்று ஆட்களைக் கூட்டிவந்து பிணத்தைக் காட்டியது!



மிக நீளமான பெஞ்சு



உலகத்திலேயே மிக நீளமான பெஞ்சு ஒன்றை ஜப்பானில் ஓபிஹிரா என்னும் இடத்தில் உள்ள பூங்காவில் செய்து வைத்திருக்கிறார்கள். அந்த ஒரே பெஞ்சின் நீளம் 400 மீட்டர்! அதில் ஒரே சமயத்தில் 1200 பேர்களுக்கு மேல் உட்காரலாம்!

[redacted]

கோகுலம் கோடை விடுமுறைப் போட்டி



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் அறிவிப்பு:—

ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ/மாணவிகளுக்கு, கீழ்க்கண்ட போட்டிகள்:

1. 'குமரேச சதக'த்தில் 50 பாடல்களுக்கு எளிமையான தமிழ் அர்த்தத்துடன் எழுதி அனுப்பும் ஒவ்வொரு மாணவ/மாணவிக்கும் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் உருவம் பொறித்த வெள்ளிக் காசு அனுப்பப்படும்.

2. ஸ்ரீ ஆதி சங்கரரின் வரலாற்றை முழுமையாக, தெளிவாக எழுதி அனுப்பும் மாணவ/மாணவிகளுக்கு முதற் பரிசாக ரூ. 100/— ம் இரண்டாம் பரிசாக ரூ. 75/— ம், மூன்றாம்பரிசாகரூ.50/—ம்அளிக்கப்படும்.

3. நாயன்மார்கள்/ஆழ்வார்கள் — இவர்களுடைய வாழ்க்கையைப் பற்றிக் கவிதை புனைந்து அனுப்பும் மாணவ/மாணவியருக்கு முதற் பரிசாக ரூ. 100/— ம் இரண்டாம் பரிசாக ரூ. 75/— ம், மூன்றாம் பரிசாக ரூ. 50/— ம் அளிக்கப்படும்.

4. இராமாயணம்/பாரதம்/பாகவதம் — இவற்றில் ஏதாவது ஒன்றில் ஒரு நிகழ்ச்சியை ஓவியமாக வரைந்து அனுப்பும் மாணவ/மாணவியருக்கு முதற் பரிசாக ரூ. 100/— ம், இரண்டாம் பரிசாக ரூ. 50/— ம், மூன்றாம் பரிசாக ரூ. 50/— ம் அளிக்கப்படும்.

போட்டிக்கான கதை, கட்டுரை, கவிதை அனுப்பும் மாணவ/மாணவிகள் தாங்கள் படிக்கும் வகுப்பைக் குறிப்பிட்டு, பெற்றோரின் கையெழுத்துடன் முழு விலாசத்தையும் குறித்தனுப்ப வேண்டும்.

போட்டிகளுக்கான கதை, கட்டுரை, கவிதை, ஓவியம் ஆகியவற்றை 30.6.88 — க்குள் 'ஆசிரியர், கோகுலம், சென்னை — 32' என்ற முகவரிக்கு அனுப்பிவிட வேண்டும்.

உறையின் மீது, 'கோகுலம் கோடை விடுமுறைப் போட்டி' என மறக்காமல் குறிப்பிட வேண்டும்.



பல்வலி பறந்தது

ரு. துளசிதாஸ்

தேர்வுகள் முடிந்து விட்டன. அப்பாடா!

ஊரில் சூழ்நிலையே மாறிவிட்டது. அங்கங்கே மாணவர்கள் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து கொண்டு தங்களுக்கான பொழுது போக்குகளில் ஈடுபட்டார்கள். அடுத்த வாரம், தாங்கள் செல்ல இருக்கும் வெளியூர்ப் பயணம் பற்றிச் சிலர் பெருமையடித்துக் கொண்டார்கள். மாணவிகள் வாடகை சைக்கிள் எடுத்து வந்து அங்கங்கே பழகிக் கொண்டிருந்தார்கள்.

நடராஜன் நல்ல பந்து வீச்சாளன். அவனை நம்பித்தான் அந்தத் தெருக் குழுவின் வெற்றி அமைந்திருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். விடுமுறையில் அவனுடைய அத்தை ஊரான கோயமுத்தூருக்குப் போவது கூட நண்பர்களின் வற்புறுத்தலினால் தள்ளிப் போட வேண்டியதாயிற்று. இந்தக் கோடையில் ஊட்டியில் ஆசை தீரச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று வருடம் முழுவதும் திட்டம் போட்டிருந்தான். ஆனால், ஒருநாள் மேட்ச் என்று தொலைக்காட்சியில் தொடர்ந்து பார்க்க நேர்ந்ததன் விளைவாக அந்த ஊர் மாணவர்களிடையே புதிய திட்டம் பிறந்தது. தெருவுக்குத் தெரு கிரிக்கெட் குழுக்களை அமைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு பெயர் கொடுத்தார்கள். வெற்றி பெற இருப்பவர்களுக்குப் பரிசு வழங்க வீட்டுக்கு வீடு சென்று பணம் வசூலித்தார்கள்.

சங்கரனும் நடராஜனும் வகுப்புத் தோழர்கள். சங்கரன் நடராஜன் வீட்டுக்குள் நுழைந்ததும், ''டேய் நடராஜா, எல்லாம் ரெடியா? நாளைக்குத் தூள் பரத்திடணும்டா! மொட்டை கிருஷ்ணமூர்த்தி ரொம்பத்தான் அலட்டிக்கிறான். என்னமோ தான் தான் பெரிய ரிச்சர்ட்ஸ்னு நினைப்பு!''

நடராஜன் எதுவும் பேசவில்லை. அவனுடைய முகம் வாடிப் போயிருந்தது.

''என்னடா ஒரு மாதிரியா இருக்கே? நேத்து லேட்டா வந்ததுக்கு அப்பா கோவிச்சிக்கிட்டாங்களா? அப்படீன்னா வாடா, வெளியே போய்ப் பேசிக்கலாம்.''

''அதெல்லாம் இல்லேடா. பல் வலிடா, பேச முடியலே. வாயைத் தொறந்தாக்கூட வலிக்குது.''

''போச்சு போ! நாளைக்கு மேட்ச் உருப்பட்டாப்பிலேதான்!''

''கத்தாதேடா. வீட்டிலே யாருக்



அரசரின் வீரம்!

''அரசே! அரசே! நம் கோட்டையை எதிரி நாட்டு வீரர்கள் சூழ்ந்து கொண்டனர்''

''அப்படியா! என் வீரத்திற்கு இது ஒரு சவால். சரி, உடனே நீங்கள் அவர்களிடம் சென்று எங்கள் அரசர் வேறு ஒரு நாட்டிற்குப் போர் புரியச் சென்று விட்டார் என்று சொல்லி அனுப்பி விடுங்கள்''

— வி. பாஸ்கரன்.

கும் தெரியாது. தெரிஞ்சதோ, மாட்ச் கோவிந்தாதான்! வெயில்லே அலையாதே, அங்கே போகாதே, இங்கே போகாதேன்னு அப்புறம் ஹவுஸ் அரெஸ்ட்தான்!''

''என்னடா இது, கடைசி நேரத்திலே இப்படி ஆகிப் போச்சு? நம்மமைக் கவுக்கணும்னு எல்லோரும் கருவிக்கிட்டு இருக்காங்கடா. படிப்பிலேயும் நம்ம தெருதான் பஸ்ட் அல்லது செகண்டுன்னு இருக்கிறதாலே விளையாட்டிலேயாவது கவுக்கணும்னு பேசிக்கிறாங்க.''

''ஆமாண்டா, நேத்து சுப்புவும் அப்படித்தாண்டா சொன்னான்.''

''டேய், டேய்... எப்படியாச்சும் சமாளிடா. பல்வலியைப் பத்தி வெளியே சொல்லாதேடா.''

நடராஜன் இருந்த நிலைமையைக் கண்டு சங்கரனும் அயர்ந்து போனான். தங்கள் ஒரு அணியைத் தோற்கடிப்பதற்கென்றே விதி சதி செய்வதாக இருவரும் பேசிக் கொண்டார்கள். ஆனால் இதையெல்லாம் மீறித் தங்கள் தெருப் பெயரைக் காப்பாற்றியாக வேண்டும்! அதற்கு என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம் என்று இருவரும் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால் சோகம் மட்டும் குறைந்தபாடில்லை.

சங்கரனுக்குத் திடீரென்று முகம் மலர்ந்தது. விரல்களை உற்சாகமாக சொடுக்கிக் கொண்டான்.

''டேய், நட்டு! ஐடியாடா...''

''என்னடா திடீர்னு?''

''உனக்குப் பல்வலி போயிருச்சின்னே வச்சுக்கோடா! பிரமாதமான ஐடியா கிடைச்சிருச்சு!''

''சொல்லுடா... சொல்லுடா. அப்படியே செஞ்சிருவோம்.''

''ஒண்ணுமில்லேடா, ரொம்ப சுலபம்தான். பல்வலி போறதுக்கு குளோரோபில் கலந்திருக்கிற டூத் பேஸ்ட்டை பிரஷிலே வச்சு ரெண்டு மூணு தரம் கரகரன்னு தேய்ச்சா பல்வலிக்குக் காரணமான ஈறு வீக்கம் போயிரும்டா. கொஞ்ச நாளைக்கு முன்னாலே எங்க மாமா அப்படித் தாண்டா செஞ்சாரு. ரெண்டு நாளிலே சரியாப் போயிடுச்சு.''

''அது எப்படிடா அவ்வளவு சீக்கிரம் குணமாகும், மருந்து எதுவும் உபயோகிக்காமே?''

''எங்க மாமா அதுக்குக் காரணமும் சொன்னாருடா. குளோரோபில்லுக்கு அந்தக் குணம் இருக்குன்னு விளக்கம் சொன்னாரு.

''புரபசர் மாமா சொன்னா சரியாத்தாண்டா இருக்கும். வாடா, போய் குளோரோபில் இருக்கிற டூத் பேஸ்ட் வாங்கிட்டு வரலாம்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்கள்.

''டேய், காசுக்கு முதல்லே வழி பண்ணு.''

''ஆமாண்டா, அதுதானே முக்கியம்.''

''இரு, எங்கம்மாகிட்ட விவரத்தைச் சொல்லி வாங்கி வர்றேன்.''

உள்ளே போய் அம்மாவிடம் விவரம் சொன்னான். அம்மா சமையலறையில் மும்முரமாக இருந்ததால் கொஞ்சம் காத்திருக்கச் சொன்னாள்.

''ரொம்ப அவசரம்மா. நாளைக்கு மேட்சும்மா. அதுக்குள்ளே சரிபண்ணணும்மா. பல்வலி பொறுக்க முடியலேம்மா....''

''கொஞ்சம் இருடா, ரசம் தாளிச்சிக்கிட்டிருக்கேனில்ல? பல்வலின்னு என்கிட்ட நீ ஏன் முன்னாடியே சொல்லலே? வர வர ரொம்பத்

துளுத்துப் போயிட்டே. வெயில்லே கண்டபடி அலையாதேன்னா சொன்னபடி கேக்கறியா? சொல்ற தைக் கேக்கலேன்னா எல்லாம்தான் வரும்.''

''அம்மா, அம்மா, அதை இதைச் சொல்லி மாட்சைக் கெடுத்திரா தேம்மா.''

''வீட்டிலேதான் பேஸ்ட் இருக்கு தில்லே. அதை வச்சு அழுத்தித் தேய்க்க வேண்டியதுதானே?''

''அதிலே குளோரோபில் சேர லேம்மா. அது இருந்தாத்தாம்மா பல் வலி போகும்.''

வெங்காயம் நறுக்கிக் கொண்டி ருந்த பாட்டி இதையெல்லாம் கேட்டு விட்டு களுக்கென்று சிரித்தாள்.

''ஏன் பாட்டி சிரிக்கிறே? உனக்குப் பல்வலி வந்தாத் தெரியும்!''

''ஆமாண்டா, எனக்கு இனிமே இன்னொரு தரம் பல் முளைச்சு வலி வந்த மாதிரிதான்! என்னமோ எங் களுக்கெல்லாம் பல்வலி வந்த தில்லை என்கிற மாதிரியும், பல் வலின்னா என்னன்னு தெரியாது என்கிற மாதிரியும்ல நீ பேசறே! போடா போக்கத்தவனே! நீ பல் வலிக்கு மருந்து தேடி எங்கேயும் போக வேண்டாம்டா. நான் சொல் றதைக் கேளு; பட்டுன்னு போயிடும்.''

அப்போதைக்கு என்ன மருந்து கிடைத்தாலும் நடராஜன் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தான். நாளைக்கு மேட்சுக்குப் போயாக வேண்டுமே! பாட்டி சொல்லும் வைத் தியத்தில் அவனுக்கு நம்பிக்கை உண்டு. முன்னால் ஒரு தடவை பரீட்சை சமயத்தில் காய்ச்சல் வந்த போது கடை மாத்திரைகளுக்குத் தணியாமல் இருந்து, பாட்டி சொன்ன கைப்பக்குவ மருந்தில் ஒரே இரவுக்குள் சரியாக ஆனதை நடரா ஜனே பல தடவை எல்லோரிடமும் சொல்லிப் பெருமைப்பட்டிருக் கிறான்.

அந்த ஆர்வத்தில் இப்போது நட



ராஜனே முந்திக் கொண்டான்.

"சொல்லு பாட்டி, நான் கேட்கிறேன். நாளைக்கு நான் எப்படியாவது மேட்சில் கலந்துக்கணும். பல்வலி இப்படியே இருந்தால் நிச்சயம் நான் தோத்திருவேன். எந்த மருந்தாக இருந்தாலும் சாப்பிடுகிறேன்."

"ஒண்ணுமில்லேடா... வேப்பங் கொழுந்து இருக்கில்ல, அதை ஒரு கொத்து பறிச்சி, பல்லாலே கடிச்சிக் குதப்பிக்கோ. தன்னாலே சரியாப் போயிடும்."

வேப்பிலை என்று சொன்னதுமே அவனுடைய முகம் பல கோணலாகி வாந்தி உணர்வு தோன்றிற்று. வேப்பிலை ஒரு கொழுந்து சாப்பிடுவதே பெரும்பாடு. அப்படி இருக்க, ஒரு கொத்து அளவைக் குதப்பிக் கொண்டிருக்க வேண்டுமானால் முடிகிற காரியமா? நினைத்தாலே குமட்டிக் கொண்டு வந்தது.

"பாட்டி, இதுக்கு பதிலா பல்வலியோடவே இருந்திரலாம். உன்கிட்ட மாட்டிக்கிட்டா என்ன வேணுமானாலும் சொல்லுவே போலிருக்கு."

"நீதானே சொன்னே, நாளைக்கே மேட்சுக்குப் போகணும்னு? அப்போ எந்தக் கசப்பையும் தாங்கிக்கலாமே!"

இரண்டும் ஒன்றுதானே!

டாக்டர்: "பாப்பா! உடம்பு சரியில்லைன்னா மருந்து சாப்பிட்டாத்தான் குணமாகும். நான் கொடுக்கறதை மிட்டாய்னு நினைச்சு சாப்பிடு பார்க்கலாம்!"

சிறுமி: அப்படின்னா மிட்டாய் கொடுங்க டாக்டர்! மருந்துன்னு நினைச்சு சாப்பிடறேன். ரெண்டும் ஒண்ணுதானே!

— பி. ரேவதி (20,666)



"பாட்டி, பாட்டி. வேறே ஏதாச்சும் மருந்து சொல்லு, பாட்டி."

"இதே மருந்துதாண்டா, ஆனா வேப்பிலை வேண்டாம். நம்ம தோட்டத்திலே கொய்யா மரம் இருக்கில்லையா, அதோட இலைகளைப் பறிச்சு நான் சொன்ன மாதிரி கடிச்சுக் குதப்பிக்கோ. அது கசக்காதில்லையா?"

"ஆமாம், பாட்டி. இப்பவே போய்ப் பறிச்சுக்கறேன்."

புதிய உற்சாகத்துடன் நடராஜன் வீட்டுப் புழக்கடைத் தோட்டத்திலிருந்த கொய்யா மரத்தில் ஏறி ஒரு கொத்து இலைகளைப் பறித்து வாயில் திணித்து, மென்று குதப்பினான். மெல்லும் போது வலித்தது. ஆனாலும், மேட்சுக்குத் தயாராக வேண்டுமென்ற ஆர்வத்தில் அதெல்லாம் ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. வீட்டு முகப்பில் அவனுக்காகக் காத்திருந்த சங்கரன் இதை அறிந்ததும் சிணுங்கினான்.

"என்னடா நீ, காரியத்தையே கெடுத்திடுவே போலிருக்கே! பாட்டி சொன்னாங்க, பூட்டி சொன்னாங்கன்னு என்னத்தையோ வாயிலே குதப்பிக்கிட்டு வந்து நிக்கிறே... எனக்கு ஒண்ணு நல்லா தெரிஞ்சு போச்சு... மொட்டை கிருஷ்ணமூர்த்தி சிக்சரா அடிச்சி நொறுக்கப் போறான், நாம தலையைத் தொங்கப் போட்டுக்கிட்டு சரண்டர் ஆகத்தான் போறோம்."

நடராஜன் தன் வாயைப் பொத்திக் காட்டி அவனைச் சும்மா இருக்கச் சொன்னான். இருவரும் உட்கார்ந்து கிரிக்கெட் சாதனங்களைச் சரி செய்யத் தொடங்கினார்கள்.

அன்று இரவு வருவதற்குள் நடராஜன் தகுந்த இடைநேரங்களில் கொய்யா இலைகளைச் சுவைத்துச் சுவைத்துக் குதப்பினான். இரவில் தூங்கும் போது அதே மாதிரி வாயில் குதப்பி ஒதுக்கியபடியே தூங்கினான்.

காலையில் எழுந்து பல் துலக்கிய போது நடராஜனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. பல்வலி வெகுவாகக் குறைந்திருந்தது. பல்வலி தொடர்பாக இருந்த நரம்புகளிலும் வலி

குறைந்திருந்தது. இப்போது பல்வலி ஒரு தடையல்ல! மேட்சில் வெளுத்து விளாசலாம்! காபி சாப்பிட்டுக் கொண்டிருந்த அப்பாவிடம் நடராஜன் மிகுந்த உற்சாகத்துடன் நடந்ததை எல்லாம் சொன்னான். அப்பா நிதானமாக எல்லாவற்றையும் கேட்டு விட்டுப் புன்னகை புரிந்தார்.

''என்ன நடந்ததுன்னு உனக்குத் தெரியுமா? உனக்கு விவரம் தெரியும்; ஆனா விளக்கம் சொல்லத் தெரியாது. என்ன விவரம்னு தெரியாமலே பாட்டி உனக்கு மருந்து சொல்லியிருக்காங்க.''

''என்னப்பா அது?''

''ஒண்ணுமில்லே... குளோரோபில் கலந்த பேஸ்ட் வச்சித் தேய்ச்சா பல்வலி போயிரும்னு சங்கரன் சொன்னான். ஆனா அந்த குளோரோபில், இலைகளிலே இருக்குன்னு உனக்குத் தோணலே பார்த்தியா?''

''ஆமாம்ப்பா, தோணவே இல்லே! சூரிய ஒளி மூலமா தாவரங்கள் தங்களுக்கு வேண்டிய தரசம் தயாரிக்கிறதுக்கு குளோரோபில் லைத்தானே உதவியா வச்சிக்கும்! அறிவியல் வகுப்புக்குத் தவறாமல் போயும் கூட, மனப்பாடம் பண்ணி ஒப்பிச்சும் கூட சட்டுன்னு எனக்குத் தோணலேப்பா. பற்பசையிலே இருக்கிற குளோரோபில்தான் எங்களுக்கு ஞாபகம் வந்திச்சே தவிர, தாவரங்களிலே இருக்கிற குளோரோபில் ஞாபகத்துக்கு வரல்லே'' என்று தலையைக் குனிந்து கொண்டான். ஆனாலும் இந்த விவரமெல்லாம் தெரியாத பாட்டி சொன்ன முறை மூலம் வலி குணமானதில் அவனுக்குப் பெருமையாக இருந்தது.

வெற்றி நிச்சயம் என்ற பெருமிதத்துடன் ஆயத்தமாக அவன் மட்டையுடன் வெளியே கிளம்பினான். எதிரில் சங்கரன் வந்து கொண்டிருந்தான். நடராஜன் நடந்து வந்த போது தென்பட்ட நடை மிடுக்கு சங்கரனை வியப்பில் ஆழ்த்தியது.

எந்த நூல்?



அறிவை வளர்க்கும் நூல்
ஆக்கம் அளிக்கும் நூல்.
இன்பம் பெருக்கும் நூல்.
ஈடில்லாச் செல்வ நூல்.
உயர்வினை அளிக்கும் நூல்.
ஊக்கம் பெருக்கும் நூல்.
எவர்க்கும் இனிய நூல்.
ஏற்றம் அளிக்கும் நூல்.
ஐயம் தவிர்க்கும் நூல்.
ஒப்புயர் வற்ற நூல்.,
ஓங்கு புகழ்கொண்ட நூல்.
ஔடதம் போன்ற நூல்.
அஃதே குறளெனும் நூல்!

— மனோகரி.

யார் அவர்?

1. தமிழ் நாட்டில் 'டாக்டர்' பட்டம் பெற்ற முதல் பெண்மணி யார்?

2. தமிழ்ப் பெண்களுக்கு ஓட்டு உரிமை வாங்கித் தந்தவர் யார்?

3. இந்தியாவிலேயே சட்ட மன்றத்தில் அமர்ந்த முதல் பெண் மணி யார்?

4. இந்தியாவில் சட்டசபை கூட்டத்துக்கு தலைமை தாங்கிய முதல் பெண் யார்?

இத்தனை கேள்விகளுக்கும் ஒரே விடை 'முத்து லட்சுமி அம்மாள்' தான்!

— குத்தாலம் ராஜா.



கேளுங்கள் சொல்கிறோம்

* புலி இனத்தில் 'கழுதைப் புலி' என்று ஒரு வகை இருக்கிறதாமே? அது எங்கு வாழ்கிறது? அதன் குணங்களைச் சொல்லுங்களேன்.

— புத்தங்கோட்டகம் விஜயராகவன், மன்னார்குடி.

கழுதைப் புலியைப் புலி இனத்தில் சேர்க்க முடியாது. ஓநாயைப் போல் அது இருக்கும். அதன் உடம்பிலும் கால்களிலும் பட்டை அடித்தது போல் இருக்கும். இறந்த பிராணிகளையும் சிங்கம், புலி போன்ற பெரிய மிருகங்கள் கொன்று தின்ற பிராணிகளின் மிச்சம் மீதியையும் தின்று வாழும். இது கத்துவது, பைத்தியக்காரன் சிரிப்பது போல் இருக்கும்.

நம் தேசத்திலும், தென் மேற்கு ஆசியாவிலும், வட ஆப்பிரிக்காவிலும் காட்டுப் பகுதிகளில் இதைக் காணலாம்.



* 3—ஆம் வகுப்பு தமிழ்ப் பாட நூலில் கரடிக்கு மரம் ஏறத் தெரியாது என்று இருக்கிறது. ஆனால், 6—ஆம் வகுப்பு தமிழ்ப் பாட நூலில் கரடி மரம் ஏறி தேனை அழித்து உண்ணும் என்று இருக்கிறது. இதில் எது சரி?

— நா. ஸ்ரீராம், வெங்கடாத்ரி அகரம்.

இதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. காரணம், கரடிகளில், பழுப்புக் கரடி, பனிக் கரடி, கருங்கரடி, பன்றிக் கரடி என்று பல வகை உண்டு. இவற்றில் பனிக்கரடியும், பழுப்புக் கரடியும் மரம் ஏறுவதில்லை. கருங்கரடியும் பன்றிக்கரடியும் நன்றாக மரம் ஏறும். மரத்தில் ஏறித் தேனடையை எடுக்கும்; கிளைகளைப் பிடித்து உலுக்கிப் பழங்களை உதிர்க்கும்.

* குருவிகளிலே 'குங்குமப் பூச்சிட்டு' என்று ஒன்று இருக்கிறதாமே, அது எப்படி இருக்கும்?

— என். பிரியா, திண்டுக்கல்.

அதை நேரில் பார்த்ததில்லை. ஆனால், அதைப் பற்றிச் சில புத்தகங்களில் காணப்படும் விவரங்கள்: குங்குமப் பூச்சிட்டில் ஆணுக்கும் பெண்ணுக்கும் அதிகமான வேற்றுமை தெரியும். ஆண் சிட்டின் தலை, முதுகுப் பக்கம், வாலின் நடுப்பகுதி மூன்றும் கறுப்பாகவும் மற்ற இடங்கள் எல்லாம் நல்ல சிவப்பாகவும் இருக்கும். பெண் சிட்டின் மேல் பகுதி சாம்பல் நிறமாகவும், கீழ்ப் பகுதி மஞ்சள் நிறமாகவும் இருக்கும்.

* டைப்ரைட்டர் எந்த நாட்டவரால் எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?

— த. சுரேஸ்பாபு, தூத்துக்குடி.

1714 — இல் பிரிட்டிஷ்காரரான மில்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனாலும், அதை உபயோகத்துக்கு ஏற்றவாறு 1843 — இல் அமைத்தவர் சார்லஸ் தர்பர். அவரும் பிரிட்டிஷ்காரரே.

* V.C. என்பது Vice — Chancellor என்பதன் சுருக்கம்தானே?

— பி. பரந்தாமன், இராமநாதபுரம்.

ஆம். Victoria Cross என்பதற்கும் V.C. என்றே சொல்லுகிறார்கள்.

* நோபல் பரிசு பெற்ற இந்தியர்கள் யார் யார் என்று கூறுவீர்களா?

— செ. இராமலிங்கம், வாலாஜாபாத்.

இரவீந்திரநாத தாகூர், சர் சி. வி. இராமன், ஹரிகோவிந்த கொரானா, எஸ். சந்திரசேகர், அன்னை தெரசா ஆகிய ஐவரையும் குறிப்பிடலாம். இவர்களில் கொரானாவும், சந்திரசேகரும் இந்தியர்களாயிருந்தும் அமெரிக்கப் பிரஜைகள் ஆனவர்கள்; அன்னை தெரசா யூகோஸ்லேவியாவில் பிறந்து 1948 — இல் இந்தியப் பிரஜையானவர்.

*** அறிவியல் சம்பந்தமாகத் தமிழில் வெளிவரும் மாத இதழ் ஏதேனும் உள்ளதா?**

— சி. பாரதி செந்தில்குமார், களக்காடு.



அடிகளார்



தாமோதரன்

கோவையிலிருந்து டாக்டர் ஜி. ஆர். தாமோதரன் தொடங்கிய மாத இதழான 'கலைக்கதிர்' வெளிவருகிறது. குன்றக்குடியிலுள்ள சுதேசி விஞ்ஞான இயக்கம், தவத்திரு குன்றக்குடி அடிகளாரை நிர்வாக ஆசிரியராகக் கொண்டு, 'அறிக அறிவியல்' என்ற மாத இதழை வெளியிட்டு வருகிறது. சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக் கழகம் டாக்டர் வெ. செ. குழந்தைசாமியை நிர்வாக ஆசிரியராகக் கொண்டு 'களஞ்சியம்' என்ற இதழை வெளியிட்டு வருகிறது. ஆனால், அது மாத இதழல்ல; காலாண்டு இதழ்.

*** தமிழிலே தற்போது எத்தனை வாரப் பத்திரிகைகள் வெளி வருகின்றன? இந்தியில் எத்தனை வாரப் பத்திரிகைகள் வருகின்றன? கூற முடியுமா?**

— சி. சந்துரு, சென்னை — 8.

தமிழில் 134 வாரப் பத்திரிகைகள், இந்தியில் 2900 வாரப் பத்திரிகைகள். — இது 1984 — ஆம் ஆண்டு எடுத்த கணக்கின்படி. தற்போதைய விவரம் இன்னும் கிடைக்கவில்லை.

*** சரிகை போட்ட புடவையின் விலை அதிகமாயிருக்கிறது. இந்த சரிகையை எப்படிப் புடவையில் சேர்க்கிறார்கள்?**

— கே. குணவதி, மேலூர்.

புடவையில் மட்டும்தானா, வேட்டியிலும்கூட இந்தச் சரிகைகளைக் காணலாமே! பொன் அல்லது வெள்ளியை மெல்லிய கம்பி போல இழைத்துச் சரிகை தயாரிக்கிறார்கள். பிறகு, இந்தச் சரிகை இழைகளைப் புடைவையிலோ வேட்டியிலோ இணைத்து நெய்கிறார்கள். பொன், வெள்ளி சேர்ந்தால் விலை அதிகமாகத் தானே இருக்கும்?

*** தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதிலும், தீண்டாமையை ஒழிப்பதிலும் மாணவர்களாகிய எங்கள் பங்கு என்ன?**

— டி. பாலமுருகன், திருவள்ளூர்.

'பாரத நாடு பழம்பெரும் நாடு — நீர் அதன் புதல்வர், நினைவகற்றாதீர்' என்று தம்முடைய வீரர்களுக்கு, சத்ரபதி சிவாஜி கூறுவதாக பாரதியார் பாடியிருக்கிறார். அதை மாணவர்களாகிய நீங்களும் நன்கு நினைவில் கொள்ளுங்கள். 'பாரதத்தில் பிறந்த நாம் அனைவரும் ஒரு தாயின் மக்கள்; மேல் சாதி, கீழ் சாதி என்ற வேற்றுமை நமக்கில்லை' என்று அன்போடு மற்றவர்களுடன் ஒவ்வொரு மாணவனும் பழகினால், அதுவே நாடு உயர, நன்மை பெருக, அமைதி நிலவப் பெரும் அளவில் உதவும்.

*** வில் கொடி, மீன் கொடி, புலிக் கொடி யார் யாருடையது என்பது தெரியும். பன்றிக் கொடி கூட ஓர் அரசருக்கு இருந்ததாமே, அவர் யார்?**

— எஸ். வேணி, திருவரங்கம்.





சாளுக்கிய மன்னர்களின் கொடியில்தான் பன்றிக் குறி இருந்தது.

அட்டைப் படம்: டி. பானர்ஜி

பறக்கும் மண் குதிரை

படக்கதை:- ஓவியர்- எஸ்.கே. ராமானுஜம். (ராஜி)




ஒரு நாள் வேட்டையாட வந்த மன்னர் காட்டுக்குகையில் வாழும் குயவனைக் கண்டு விட்டார்.
இந்த குதிரை எப்படிப்பறக்- -கிறது?
குயவன் நடுநடுங்கி.. பறக்கும் மண் குதிரையின் இயந்திர ரகசியங்களை மன்னரிடம் கூறிவிட்டான். குதிரையைப்பற்றிய முழு விவரங்களைத்தெரிந்து கொண்ட மன்னர், அக் குயவனைப்பாதாளச்சிறையில் அடைத்து விட்டார்.
குயவனின் கால்களில் வி ங்கு பூட்டி எந்த உணவும் கொடுக்காமல் சிறையில் வாடும்படி அப்- பொல்லாத மன்னர் செய்து விட்டார்.
பொல்லாத மன்னர் மண் குதிரையில் ஏறி சந்தோஷமாகப்பறந்தார்
அப்பொழுது புயல் அடித்து மழை பெய்தது..
மண் குதிரை ஒரு அடர்ந்த காட்டில்.. விழுந்து உடைந்து மண்ணோடு மண்ணாய்க் கரைந்து போய்விட்டது
உயிர் தப்பிய மன்னரின் கால்கள் உடைந்து விட்டன.
நான் அக்குயவனுக்குச் செய்த தீங்குகளுக்கு கடவுள் எனக்குத்- தண்டனை கொடுத்து விட்டார்...

பிருந்தாவனக் களியரங்கம்





மழலை இன்பம்

குழந்தைகள் வீட்டில் இருந்தாலே,
குடும்பம் மகிழ்வாய் இருந்திடுமே.
மழலைச் செல்வம் இருந்தாலே,
மகிழ்ச்சி மனத்தில் பெருகிடுமே!

கொஞ்சும் மழலை மொழிதனிலே,
குழந்தைகள் பேசக் கேட்டதுமே,
நெஞ்சம் மகிழ்வாள் அன்னையுமே,
நேசம் மிகவும் காட்டிடுவாள்.

பொம்மைகள் வைத்து விளையாடிப்
பூரிப்படையும் முகங்கண்டு,
அம்மா மகிழ்ச்சி அடைந்திடுவாள்;
அதுபோல் இன்பம் வேறுண்டோ?

பூங்கா போன்றது குடும்பம் எனில்
பூக்கள் போன்றவர் குழந்தைகளே.
பாங்காய் வளர்த்துக் காத்திடுவோம்.
பாசம் ஊட்டி வளர்த்திடுவோம்.

— அ. இளவரசன் (21,054),
புலியூர்.

நாய்க் குட்டி

எங்கள் வீட்டு நாய்க்குட்டி,
இனிமை யான நாய்க்குட்டி,
தங்க மான நாய்க்குட்டி,
தாவிக் குதிக்கும் நாய்க்குட்டி.

வாலை யாட்டும் நாய்க்குட்டி.
'வள்,வள்' ளென்னும் நாய்க்குட்டி,
காலை நக்கும் நாய்க்குட்டி,
கருமை யான நாய்க்குட்டி.

நன்றி மிகுந்த நாய்க்குட்டி,
நாங்கள் வளர்க்கும் நாய்க்குட்டி,
பன்றிக் குட்டி தனைக்கண்டால்,
பாய்ந்து விரட்டும் நாய்க்குட்டி.

வீட்டாரோடு விளையாடி,
விழுந்து புரளும் நாய்க்குட்டி.
வேற்றா ளென்றால் குரைக்கின்ற
விவரம் தெரிந்த நாய்க்குட்டி.
வீட்டைக் காக்கும் நாய்க்குட்டி,
விழிப்போ டிருக்கும் நாய்க்குட்டி.
வேட்டை யாடும் நாய்க்குட்டி,
வேங்கை போன்ற நாய்க்குட்டி.

'நன்றி கெட்ட மனிதனே,
நாயைப் பார்த்துத் திருந்துவாய்''
என்றே அறிஞர் கூறுவார்.
எண்ணிப் பார்ப்போம் நாமெலாம்.

— சுப. கலாவதி (14,348),
நாரைக்கிணறு.

வாழை மரம்

வாழை மரத் தோட்டமாம்,
வரிசை யாகக் கூட்டமாம்.
பச்சை பச்சை இலைகளாம்,
பார்க்கப் பார்க்க அழகுதான்.



குளிர்ந்த காற்று வீசுமாம்,
கொடிய வெப்பம் போக்குமாம்.
குலை குலையாய்க் கனிகளாம்.
கொடிய பசியைப் போக்குமாம்.

வாழைப் பூவில் பொரியலாம்,
வாழைக் காயில் வறுவலாம்,
சமைய லுக்கு உதவுமாம்,
சாப்பி டவே பிடிக்குமாம்.

— மைக்கேல் ஜோசப் (15,321),
சென்னை — 56.



இளநீர்

குரும்பையாய் இருந்தோம்
குளுமையாய் வளர்ந்தோம்.

உச்சியில் இருந்தோம்;
உருண்டு விழுந்தோம்.

வண்டியில் ஏற்றினர்;
வழியில் நிறுத்தினர்.

அளவாய்ப் பரப்பினர்;
அழகாய் அடுக்கினர்.

பலரும் வந்தனர்;
பார்த்து மகிழ்ந்தனர்.

ஒருசிலர் வந்தனர்;
உடைக்கக் கோரினர்.

சீவப் பட்டோம்;
சிந்தினோம் கண்ணீர்.

இளநீர் என்றனர்;
இனிமையாய்க் குடித்தனர்.


வழுக்கை என்றனர்;
வழித்து உண்டனர்.

எறியப் பட்டோம்;
எச்சில் ஓடாய்.

கோடையில் எம்மை,
நாடுவோர் நீங்கள்.

எங்கள் சேவை,
என்றுமே தேவை.

— ஜி. சங்கர் (20,915),
திருச்சி — 14.



சின்னப் பையன்


சின்னப் பையன் பிறந்திருக்கான்
வந்து பாருங்கோ — அவன்
சிணுங்கிச் சிணுங்கிக் கையைக் காலை
அசைக்கிறானுங்க!

என்னென்னவோ மனசுக்குள்ளே
எண்ணுறானுங்க!
எடுத்து விவரம் சொல்ல மனம்
தயங்குறானுங்க!


தேவை யென்ன என்று கேட்டால்
பதிலே இல்லேங்க — இவன்
போடும் திட்டம் என்ன வென்று
புரியவில்லேங்க!

— தேனி எம். செந்தில்வேலன்
(குமார் 141), தேனி.


இயற்கைச் செய்திகள்!



ஷவர்புறவை வசதியான பாதுகாப்பான கூட்டினை தொங்கும் கிளைகளில் கட்டும். கூட்டினுள் பல பொருட்களைச் சேர்த்து வடிவமானவுடன், கீழே வாசலை பகைவரால் தாக்கமுடியாதவாறு அமைக்கிறது.



நீர்த் தேள் தனது வாலினை நீருக்கு மேல் நீட்டி காற்றை சுவா சிக்கும்.



குளவி தனது உணவினைப் பெற நிறத்தினை யும், உருவத்தினை யும் காட்டிப்பய முறுத்துமாம்.



ஆந்தைகளுக்குக் கண் விழிகள் சுழலாது. அதனால் தலையையே திருப்பிப் பார்க்கும். பகலில் பார்வை தெரியாது.

வெளவால் இருட்டில் வசிக்கும். குட்டி போட்டுப் பாலூட்டும். அதிக சாமர்த்தியம[illegible]. நாயைப் போல பல வடிவங்களும், பல வகைகளும் உள்ளனவாம்.



— விமலன் —

மணி ஓசை

பசு



டாண்! டாண்!! டாண்!!!

மலை உச்சிக் கோவிலிலிருந்து காற்றில் மிதந்து வந்த மணியோசையைக் கேட்டு, மதிய உணவுக்காக மோட்டார் பைக்கில் வீட்டுக்கு விரைந்து கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ராம்நாத், தனது கைக் கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தார்.

'அட! மணி 2 ஆகி விட்டதே! வழக்கமாக 12 மணிக்கு அடிக்கும் மணி இன்று இவ்வளவு நேரமாகி விட்டதே! ஏதேனும் விசேஷ பூஜையோ!' என்று எண்ணியவாறு, மணியோசையைக் கேட்டவாறே பைக்கைச் செலுத்திக் கொண்டிருந்தவர், திடீரென திடுக்கிட்டார். காரணம், மணி விடாமல் தொடர்ந்து அடித்ததுதான்!

பைக்கை விரைந்து செலுத்தி, வீட்டை அடைந்து ஸ்டாண்ட் போடவும், அவர் மகன் சுந்தர் வீட்டினுள்ளிருந்து "அப்பா, இதைப் பார்த்தீர்களா?" என ஒரு பேப்பருடன் ஓடி வந்தான். அதை வாங்கிப் பார்த்த அவர், "ஆம்! நான் நினைத்தது சரிதான்" என்று கூறிக் கொண்டே, அவனிடம் ஏதோ சொல்ல, அவன் சைக்கிளை எடுத்துக் கொண்டு வேகமாக வெளியே சென்றான்.

அவர் வீட்டினுள் சென்று, தொலைபேசி மூலம் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தொடர்பு கொண்டு, சில கட்டளைகள் போட்டு விட்டு, வெளியே வந்து, பைக்கை எடுத்துக் கொண்டு மலை அடிவாரத்தை நோக்கிச் சென்றார்.

அவர் மலையடிவாரத்தை அடையவும், அங்கு ஏற்கெனவே காத்துக் கொண்டிருந்த நான்கு போலீசார், அவரிடம் தரையில் ஏதோ சுட்டிக் காட்டினர். அங்கு அப்போதுதான் ஒரு கார் புறப்பட்டுச் சென்றதற்கான கார் சக்கரங்களின் அடையாளம் மண்ணில் தெரிந்தது.

அதைப் பார்த்து, 'இதுவும் சரியாகத்தான் இருக்கிறது' என்று கூறிக் கொண்டே, அவர்களை அழைத்துக் கொண்டு மலைப்படிகளில் ஏறி விரைவாக மேலே சென்றார். மேலே சென்றதும், கோவில் கதவுகள் யாவும் திறந்து கிடக்க, ஆள் அரவமின்றி, வெறிச் சென்றிருந்தது.

காலணிகளைக் கழற்றி விட்டு உள்ளே சென்று பார்க்க, முன் மண்டபத்தில் உள்ள உண்டியல் உடைக்கப்பட்டுத் திறந்து காலியாகக் கிடக்க, மூலஸ்தானத்தில் பூஜை சாமான்கள் இறைந்து கிடக்கக் கண்டார். கோவிலைச் சுற்றி வந்து பார்க்கும் போது, முன் மண்டபத்துக்கு அருகில் உள்ள



கஜானா அறைப் பூட்டும் உடைக்கப்பட்டு, திறந்து கிடக்க, உள்ளே கம்பிக் கிராதிகளுக்குள் வைக்கப்பட்டிருந்த உற்சவ சிலைகளில் சில இருந்த இடங்கள் காலியாக இருந்தன.

அனைத்தையும் பார்த்துக் கொண்டே வரும் போது, உண்டியல் அருகில் ரத்தக் கறை படிந்திருக்க, அது சொட்டு சொட்டாக வரிசையாகப் படிந்திருப்பதைக் கண்டு, அதைத் தொடர்ந்து சென்று பார்க்க, அது மடைப்பள்ளி வரை சென்றது. மடைப்பள்ளிக் கதவு உட்பக்கம் தாழ் போடப்பட்டிருந்தது. அதன் கதவில் அழகுக்காக வட்ட வட்டமாக இருந்த துவாரங்களில் ஒன்றிலே கோவில் மணியின் நீளக் கயிறு உள்ளே சென்றிருந்தது.

இன்ஸ்பெக்டர் கதவைத் தட்டியதும் உள்ளேயிருந்து, கதவிலிருந்த வட்டத் துவாரத்தின் வழியாக யாரோ பார்ப்பது தெரிந்தது. மறு நிமிடம், கதவு திறக்கப்பட்டு, உள்ளேயிருந்து ஒரு பையன் ஓடி வந்து, அவரை, 'மாமா!' என்று கூவிக் கொண்டே கட்டியணைத்து அழ ஆரம்பித்தான். உள்ளே, ஒரு மூலையில் கோவில் அர்ச்சகர் மண்டையில் அடிபட்டு மயக்கமாகிக் கிடந்தார்.

அவனை ஆதரவாகத் தட்டிக் கொடுத்து, ''என்ன நடந்தது? விபரமாகச் சொல்'' என்று கேட்டார்.

''வழக்கம் போல், அப்பாவுக்குப் பூஜையில் ஒத்தாசையாக இருக்க வேண்டுமென்று, இன்று நான் மலைக்கு வந்த போது, எதிரில் கோவில் வாட்ச்மேன் வந்தார்.

''அவர், 'கோவில் மணியகாரரும், கணக்குப் பிள்ளையும் டவுனுக்குப் போயிருக்கிறார்கள். நான் அவசரமாக வெளியே போக வேண்டும். மேலே கோவிலில் யாரோ நான்கு பேர் பூஜைக்கு வந்திருக்கிறார்கள். பூஜை முடிந்ததும் கோவிலைப் பூட்டி, நீங்கள் சாவி கொண்டு போங்கள். நான் பிறகு வாங்கிக் கொள்கிறேன்' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

''நான் கோவிலை அடையும் போது, அங்கே நான்கு பேரும் என் அப்பாவை, சாவியைக் கேட்டு அடித்துக் கொண்டிருந்தனர். அவர் மயக்கமாகி விழுந்து விட்டார். நான் ஒரு தூணுக்குப் பின்னால் அவர்களுக்குத் தெரியாமல் நின்று கவனித்தேன். பிறகு, உண்டியலை உடைத்து அனைத்தையும் ஒரு பையில் போட்டுக் கொண்டு, பிறகு கஜானா அறைக்குள் பூட்டை உடைத்து உள்ளே போனார்கள்.

''நான் வேகமாக உள்ளே போய், அப்பாவின் கையைப் பிடித்து அவரைச் சிரமப்பட்டு இழுத்துக் கொண்டு, மடைப்பள்ளியை அடைந்தேன். அதற்குள் சத்தம் கேட்டு அவர்கள் ஓடி வரவும், நான் மடைப்பள்ளிக் கதவை உள்ளே தாழ் போட்டு விட்டேன். அவர்களால் அதைத் திறக்க முடியவில்லை. அத்துடன் கோவில் மணியின் நீளமான கயிற்றின் நுனியையும் நான் பிடித்து மடைப்பள்ளிக்குக் கொண்டு வந்ததால் அதை இழுத்து, இழுத்து மணியடித்தேன். அந்த ஓசை கேட்டுத்தான் நீங்கள் வந்திருப்பீர்கள். கொள்ளைக்காரர்கள் எங்கே, எப்படிப் போனார்கள் என்று தெரியவில்லை. ஆனால், கோவில் சொத்து கொள்ளையடிக்கப்பட்டு விட்டதுதான் வருத்தமாக உள்ளது'' என்று அழ ஆரம்பித்தான்.


அவனைத் தட்டிக் கொடுத்து, வெளியே அழைத்துச் சென்று, தூரமாய் ஒரு காட்சியைக் கையை நீட்டிச் சுட்டிக் காட்டினார். அங்கு போலீஸ் ஸ்டேஷனைச் சுற்றி ஏராளமாய் மக்கள் நிற்க, அவர்களுக்கு நடுவில் ஒரு காரையும் கண்டனர். ''இனி பயப்படாதே! கொள்ளையர் சிக்கி விட்டனர்'' என்று கூறிக் கொண்டே, அர்ச்சகரை மருத்துவமனைக்கு அனுப்ப ஏற்பாடு செய்து விட்டு, கோவிலுக்கும் காவல் வைத்து விட்டு, அவனை அழைத்துக் கொண்டு கீழே சென்றார்.

மறுநாள் அவ்வூர் போலீஸ் ஸ்டேஷன், மாவட்ட கலெக்டராலும், பெரிய போலீஸ் அதிகாரிகளாலும், பத்திரிகை நிருபர்களாலும் விஜயம் செய்யப்பட்டு அமளி, துமளி பட்டது. இன்ஸ்பெக்டர், நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

''நேற்று நடந்த கொள்ளையில், கொள்ளையரைப் பிடிக்க மிகவும் உதவியாக இருந்தவர்கள், அர்ச்சகர் மகன் ராஜனும், என் மகன் சுந்தருமே ஆவர். இவர்களிருவரும் படிக்கும் பள்ளியில், சாரணர் பயிற்சியில் சேர்ந்துள்ளனர். அங்கு இவர்களுக்கு கம்பியில்லாத் தந்தி என்ற 'மோர்ஸ்' முறைப்படி செய்தி அனுப்புவதைக் கற்றுத் தருகின்றனர். அதை இவர்கள் புதுமையாகப் பயிற்சி செய்தனர். அதாவது, அர்ச்சகருக்கு உதவியாக அவர் மகன் ராஜன் கோவிலுக்குச் சென்று, அங்கு கோவில் மணியடிக்கும் போது மோர்ஸ் முறைப்படி அடித்து ஒரு செய்தியைத் தெரிவிப்பான். அதை என் மகன் சுந்தர் காகிதத்தில் எழுதிக் கொண்டு, பிறகு இருவரும் அதைச் சரி பார்ப்பார்கள்.

''ஒருநாள் இம்மாதிரி மணியடிப்பதை, தனது தகப்பனார் ஆட்சேபிப்





பதாக ராஜன் என்னிடம் சொல்ல, நான் அவன் தகப்பனாரிடம், பாட சம்பந்தமாகத்தான் இவர்கள் இப்படிச் செய்கிறார்கள்; விளையாட்டுக்கு அல்ல. இதுவும் ஒரு சமயம் உபயோகப்படும்" என்று கூறி சமாதானப்படுத்தினேன். அதன்படியே நேற்று கொள்ளை நடந்த போது, "கோவிலில் கொள்ளை... நான்கு பேர்... காரின் நிறம்... காரின் எண்..." என்று மணியடித்து ராஜன் செய்தி தெரிவிக்க, அந்த மணியோசை கேட்ட நானும், என் மகனும் துரிதமாக செயல்பட்டோம்.

"இவ்வூர் மிகவும் சிறிய ஊர் ஆகையால், இங்கு புதிதாக எந்தக் கார் வந்தாலும், புதிய மனிதர்கள் வந்தாலும் நன்கு இனம் கண்டு கொள்வோம். இவ்வூருக்கு வரவோ, வெளியே போகவோ நான்கு பாதைகள்தான் உள்ளன. எனது மகனை அனுப்பி, ஊர் மக்களைத் திரட்டி நான்கு பாதைகளிலும் அடைத்துக் கொள்ளுமாறு செய்து, போலீசாரையும் அவர்களுக்குத் துணையாக இருந்து காரை மடக்கி, கொள்ளையரைப் பிடிக்க ஏற்பாடு செய்தேன். அதன்படியே கொள்ளையரைப் பிடித்து, அவர்கள் கொள்ளையடித்த சிலைகள், பொருட்கள் யாவும் மீட்கப்பட்டன.

"ஆதலால் இச்சிறுவர்கள் இருவருமே பாராட்டுக்கு உரியவர்கள்" என்றார்.

அடுத்துப் பேசிய மாவட்ட கலெக்டர், "இச் சிறுவர்களைப் போலவே, எல்லாப் பிள்ளைகளும், பள்ளிக் கல்வியை, வீட்டுக்கும், நாட்டுக்கும் உபயோகமாகுமாறு பயன்படுத்திச் செயல்பட வேண்டும். இச் சிறுவர்களுக்கு, "தீரச் செயல்களுக்கான வீர விருது" கிடைக்க சிபாரிசு செய்து ஏற்பாடு செய்கிறேன் என்று கூறவும், அங்கு எழுந்த கரவொலி அடங்க வெகு நேரமாயிற்று.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/–; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/–; விமானத் தபால்: ரூ. 135/–.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 36/–; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/–; விமானத் தபால் ரூ. 270/–.



சர். ஜேம்ஸ் சிம்சன்

தோற்றம் 7.6.1811 மறைவு 6.5.1870

Registered No TN MS (S) 291
Registered as a Newspaper in Sri Lanka

Parry's

மிட்டாய் மன்னன் சொல்லித் தருகிறார்-
கற்றுக்கொள்ளவும் பொழுது போக்கவும்
குதூகலமான யோசனைகள்!

Funpage


செய்வது சுலபம்- பந்தயம் விடுவதற்கு பிரமாதம்.

நீங்களே ஆமைகளைச் செய்யுங்கள், தமாஷாகப் பந்தயம் விடுங்கள்.


1 ஒரு மெல்லிய அட்டையில் ஒரு ஆமையின் படத்தை பெரிதாக வரைந்து கொள்ளுங்கள். அதற்கு வர்ணம் பூசுங்கள். இன்னொரு ஆமையை இதே அளவில் செய்து கொள்ளுங்கள்.



2 ஆமைகளை அட்டையிலிருந்து வெட்டி எடுத்து, முன் பக்கத்திலும் பின் பக்கத்திலும் ஓரமாக சின்ன துளைகளைப் போடுங்கள்.




3 நீண்ட நூலை எடுத்துக்கொண்டு அதை ஆமைப் படத்தின் இரண்டு துளைகளிலும் கோர்த்துக் கொள்ளுங்கள். இரண்டு ஆமைகளிலும் இப்படி நூலை கோர்த்துக் கொள்ளவும்.




5 மேஜையிலிருந்து சற்று தள்ளி உட்கார்ந்து கொண்டு ஆமையை கைக்கருகில் வைத்துக் கொள்ளவும். நூலை இழுத்துப் பிடித்துக்கொண்டு, குலுக்கவும். ஆமை நூலில் 'ஓட' ஆரம்பிக்கும். எந்த ஆமை, மேஜையின் காலை முதலில் தொடுகிறதோ, அதுவே வெற்றி பெற்ற ஆமை.



4 நூலின் ஒரு நுனியை மேஜையின் காலின் நடுவில் கட்டிவிடுங்கள். மற்றொரு நூலின் நுனியை மேஜையின் பக்கத்து காலில் கட்டவும். இப்போது ஆமைப் பந்தயத்திற்கு தயார்.





THE KING OF SWEETS

மிட்டாய் மன்னன் உங்களைப்பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறார். ஆகவே, உங்கள் பெயர், பிறந்த தேதி, விலாசம் ஆகிய விவரங்களுடன் கடிதம் எழுதுங்கள்.

விலாசம்:
The King of Sweets
P.O. Box No. 2040
MADRAS 600 001.

HTA-7201